# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

## ஆவணி 22, பிரஜோற்பத்தி—திருவள்ளுவர் ஆண்டு 2022.

## 1991, செப்டம்பர் 7, சனிக்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில், முற்பகல் 9-30 மணிக்கு பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'' வேட்பதாஞ் சொல்லிப் பிறர்சொல் பயன்கோடல்
மாட்சியின் மாசற்றார் கோள்.''

பிறர் விரும்பும்படியாகத் தாம் சொல்லி, பிறர் சொல்லும்போது அச்சொல்லின் பயனை ஆராய்ந்து கொள்ளுதல் மாசற்ற சிறப்புடையவரின் கொள்கையாகும்.

### 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள், வினா எண். 3, திரு. சோ. இராசாராமன், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

3—

### பாபநாசம் நகரில் உரிமையியல் நீதிமன்றம்.

*121—திரு. சோ. இராசாராமன் :

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் நகரில் ஓர் உரிமையியல் நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) பரிசீலனையிலுள்ளது.

திரு. சோ. இராசாராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே அமைச்சர் குறிப்பிடுகிறபோது

' ஆம் ' என்று குறிப்பிட்டார்கள். அது இப்போது ஆய்வுக்கு எடுக்கப்பட்டுவிட்டதா? எப்போது முதல் இந்த நீதிமன்றம் திறக்கப்படவிருக்கிறது என்பதை அறிய ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் பாபநாசம் நகரில் உரிமையியல் நீதிமன்றம் ஒன்று அமைக்க, உயர் நீதிமன்றம் (High Court) இந்த ஆண்டு ஜூலை மாதம் பரிந்துரை செய்திருக்கிறது. அதற்கு ஏறத்தாழ ரூ. 10 இலட்சம் செலவாகும். அதனை அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 4, திரு. வே. பெரியசாமி, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள்.

4—

குவாரி பணியாட்கள் குடும்பத்திற்கு உதவி.

*603—திரு. வே. பெரியசாமி:

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாட்டில் கனிமக் கற்களை வெட்டி எடுக்கும் குவாரிப் பணியாட்கள் விபத்துக்கு ஆளாகி இறக்க நேரிட்டால் அவர்கள் குடும்பத்திற்கு அரசால் இழப்புத் தொகை வழங்கப் படுகிறதா?

(ஆ) ஆம் எனில், இதுவரை எத்தனை பேருக்கு எவ்வளவு தொகை வழங்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ் நாட்டில் கனிமக் கற்களை வெட்டி எடுக்கும் குவாரிகளில் பணியாட்கள் விபத்துக்கு ஆளாகி இறக்க நேரிட்டால் அவர்கள் குடும்பத்துக்கு அரசால் இழப்புத் தொகை வழங்கப்படுவது இல்லை. ஆனால், தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டத்தின் கீழ் விசாரிக்கப்பட்டு, இழப்பீட்டுத் தொகை நிர்ணயம் செய்யப்பட்டு வழங்கப்படுகிறது.

(ஆ) இதுவரை, காயவிபத்து ஏற்பட்ட இரு தொழிலாளர் களுக்கு ரூ. 16,546.76-ம், மரண விபத்து அடைந்த ஆறு தொழிலாளர்கள் சார்ந்தோர்க்கு ரூ. 2,22,966.76-ம் இழப் பீட்டுத் தொகையாக தொழிலாளர் இழப்பீட்டு சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளது.

[1991 செப்டம்பர் 7

' ஆம் ' என்று குறிப்பிட்டார்கள். அது இப்போது ஆய்வுக்கு எடுக்கப்பட்டுவிட்டதா ? எப்போது முதல் இந்த நீதிமன்றம் திறக்கப்படவிருக்கிறது என்பதை அறிய ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் பாபநாசம் நகரில் உரிமையியல் நீதிமன்றம் ஒன்று அமைக்க, உயர் நீதிமன்றம் (High Court) இந்த ஆண்டு ஜூலை மாதம் பரிந்துரை செய்திருக்கிறது. அதற்கு ஏறத்தாழ ரூ. 10 இலட்சம் செலவாகும். அதனை அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 4, திரு. வே. பெரியசாமி, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள்.

4—

குவாரி பணியாட்கள் குடும்பத்திற்கு உதவி.

*603—திரு. வே. பெரியசாமி :

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் கனிமக் கற்களை வெட்டி எடுக்கும் குவாரிப் பணியாட்கள் விபத்துக்கு ஆளாகி இறக்க நேரிட்டால் அவர்கள் குடும்பத்திற்கு அரசால் இழப்புத் தொகை வழங்கப் படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், இதுவரை எத்தனை பேருக்கு எவ்வளவு தொகை வழங்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ் நாட்டில் கனிமக் கற்களை வெட்டி எடுக்கும் குவாரிகளில் பணியாட்கள் விபத்துக்கு ஆளாகி இறக்க நேரிட்டால் அவர்கள் குடும்பத்துக்கு அரசால் இழப்புத் தொகை வழங்கப்படுவது இல்லை. ஆனால், தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டத்தின் கீழ் விசாரிக்கப்பட்டு, இழப்பீட்டுத் தொகை நிர்ணயம் செய்யப்பட்டு வழங்கப்படுகிறது.

(ஆ) இதுவரை, காயவிபத்து ஏற்பட்ட இரு தொழிலாளர் களுக்கு ரூ. 16,546.76-ம், மரண விபத்து அடைந்த ஆறு தொழிலாளர்கள் சார்ந்தோர்க்கு ரூ. 2,22,966.76-ம் இழப் பீட்டுத் தொகையாக தொழிலாளர் இழப்பீட்டு சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளது.

1991 செப்டம்பர் 7]

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கனிமக் கற்களை வெட்டி எடுக்கிறபோது, அதில் பணி செய்கின்ற மக்கள் பெரும்பான்மையினர் ஏழைகளாக, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்களாகத்தான் இருக்கிறார்கள். இவர்கள் பணியாற்றுகின்றபோது, விபத்துக்கள் ஏற்பட்டால் பலபேரை அந்த நிறுவனம், தொழிலாளர் நல அதிகாரிகளுக்குத் தெரிவிக்காமல் அப்படியே விட்டுவிடுகிறார்கள். பலபேர் இறந்து அவ்வாறு உயிரிழப்பு ஏற்பட்டாலும், ஏதோ ஒரு தொகையினை அவர்களுக்குக் கொடுத்துவிட்டு, அதை மூடி மறைத்து விடுகிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தொழிலாளர்நல அதிகாரிகளுக்கு, ஆரம்பத்திலே அவர்கள் பணியிலே சேர்கிறபோதே அவர்களுடைய பெயரை அதிலே சேர்த்து, அவர்களுக்கு உயிரிழப்பு ஏற்படுகிற்போது, உடனடியாகத் தெரிவித்து, கணிசமான அளவில் வரக்கூடிய தொகையினை வாங்கிக் கொடுக்க முயற்சி செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்துக்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. குறிப்பிட்ட நிகழ்ச்சி அவ்வாறு ஏதேனும் இருந்தால், அதுபற்றி ஒரு புகாரை அரசுக்குக் கொண்டு வந்தால், நாங்கள் விசாரித்து நடவடிக்கை எடுக்கும்போது, எல்லாமே செயலாகிவிடும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திரு. எஸ். எஸ். ராமசுப்பு,

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கற்களை வெட்டி எடுப்பதில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு, அந்த நிறுவனமானது 'இன்சூரன்ஸ்' செய்து, அந்த 'இன்சூரன்ஸ்' தொகையினை அந்நிறுவனமே வாங்கிக் கொடுப்பதற்கு, இந்த அரசு ஏற்பாடு செய்யுமா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

முற்பகல் 9-35

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ம. சின்னசாமி.

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விபத்து பெரும்பாலும் எல்லா இடங்களிலும் நடக்கின்றது. ஆகவே, அவர்களைப் பாதுகாக்கின்ற வகையில் அரசு ஒரு பாதுகாப்புச் சட்டத்தைக்கொண்டு வருவதற்கு ஆவன செய்யுமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்களுக்கு பாதுகாப்புச் சட்டங்கள் இப்போது இருக்கின்றன. அதன்கீழ் தேவையான நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ரமணி நல்லதம்பி.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கனிமப் பொருட்களை தனியார்கள் அரசு அனுமதியில்லாமல் வெட்டியெடுக்க உரிமை உள்ளதா? அப்படி எங்காவது வெட்டியெடுக்கின்றார்கள் என்று சொன்னால் நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது தொழிலாளர்கள் பற்றியது. அது பற்றித் தனியாகக் கேள்வி போடவும். திரு. வி. தண்டாயுதபாணி.

திரு. வி. தண்டாயுதபாணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி தொழிலாளர்களால் கஷ்டப்பட்டு வெட்டியெடுத்து வைக்கப்பட்டிருந்த கற்களை மேலூருக்குப் பக்கத்திலே, முந்தைய ஆட்சியினுடைய சொந்தக்காரர் திருடிக் கொண்டு போய் விட்டதாகத் தகவல் வந்திருக்கிறது. அந்தத் தொழிலாளர்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அப்படிப்பட்ட தகவல் வந்திருந்தால் அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : அவைத் தலைவர் அவர்களே, திருட்டு சம்பந்தமான குற்றச்சாட்டுகளை போலீசாரிடம் சொன்னால் அவர்கள் தக்க நடவடிக்கை எடுப்பார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். பி. பரமசிவம்.

திரு. ஆர். பி. பரமசிவம் : பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற கனிமக் கற்களை வெட்டியெடுக்கும் குவாரியில் வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கு நிர்ணயம் செய்கின்ற

கூலியை அரசு நிர்ணயம் செய்துள்ளதா? அப்படி நிர்ணயம் செய்திருந்தால், ஆண்களுக்கு எவ்வளவு, பெண்களுக்கு எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, அதற்குத் தனிக் கேள்வி போடவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 5. செல்வி ஜி. மல்லிகா, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள்.

5—

புவனகிரி அரசு மருத்துவமனை.

*444—செல்வி ஜி. மல்லிகா:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) புவனகிரியில் இருக்கும் ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக மாற்ற உடனடி நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) புவனகிரியில் ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்கனவே சமுதாய நிலையமாக மேம்படுத்தப்பட்டு இயங்கிவருகிறது. ஆகவே, அதை அரசு மருத்துவமனையாக மாற்றும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

செல்வி ஜி. மல்லிகா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மருத்துவமனையாக மாற்றும் செயற்குறிப்பு இல்லையென மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். அங்கே மக்களுக்கு, அருகில் நல்ல மருத்துவமனை இல்லாததால் கூடுதல் படுக்கை வசதியாவது செய்துதர அரசு ஆவன செய்யுமா என அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, 12 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக இப்போது அது இயங்கிக் கொண்டிருக்கிறது. இந்த வசதிக்கு மேலும் தேவைப்படும் என்று சொன்னால் நிலைமைகளை யோசித்து நிதி வசதிக்கேற்ப நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

கூலியை அரசு நிர்ணயம் செய்துள்ளதா? அப்படி நிர்ணயம் செய்திருந்தால், ஆண்களுக்கு எவ்வளவு, பெண்களுக்கு எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, அதற்குத் தனிக் கேள்வி போடவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 5. செல்வி ஜி. மல்லிகா, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள்.

5—

புவனகிரி அரசு மருத்துவமனை.

*444—செல்வி ஜி. மல்லிகா:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) புவனகிரியில் இருக்கும் ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக மாற்ற உடனடி நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) புவனகிரியில் ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்கனவே சமுதாய நிலையமாக மேம்படுத்தப்பட்டு இயங்கிவருகிறது. ஆகவே, அதை அரசு மருத்துவமனையாக மாற்றும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

செல்வி ஜி. மல்லிகா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மருத்துவமனையாக மாற்றும் செயற்குறிப்பு இல்லையென மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். அங்கே மக்களுக்கு, அருகில் நல்ல மருத்துவமனை இல்லாததால் கூடுதல் படுக்கை வசதியாவது செய்துதர அரசு ஆவன செய்யுமா என அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, 12 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக இப்போது அது இயங்கிக் கொண்டிருக்கிறது. இந்த வசதிக்கு மேலும் தேவைப்படும் என்று சொன்னால் நிலைமைகளை யோசித்து நிதி வசதிக்கேற்ப நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

செல்வி ஜி. மல்லிகா : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏதாவது கேள்வி என்றால்தான் இரண்டாவது கேள்வி கேட்கலாம். அடுத்து டாக்டர் தே. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசு இந்த ஆண்டு எத்தனை ஆரம்ப சுகாதார நிலையங்களை அப்கிரேட் ஆக்கத் திட்டங்கள் வைத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏறத்தாழ 76 ஆரம்ப சுகாதார நிலையங்களை மேம்படுத்துவதற்கு திட்டம் வைக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையங்களை அரசு மருத்துவமனைகளாக மாற்றுகிறபோது அப்படி மாற்றுகிற அரசு மருத்துவமனைகளில் தேவையான வசதிகள், மருந்துகள் இல்லை என்று புகார்கள் வந்திருக்கின்றன. அதற்கு ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இப்படிப்பட்ட நிலைமைகள் இருந்தது உண்மைதான். இப்போது அதை மாற்றுவதற்கு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ரூ. 30 ஆயிரம் ஓர் ஆண்டுக்கு ஒதுக்கியிருந்ததை ரூ. 40 ஆயிரமாக இப்போது உயர்த்துவதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். அதன் அடிப்படையில் பிரச்சினை தீர்க்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையங்கள் கட்டுவதற்குப்பொது மக்கள் இனாமாக 3 ஏக்கர் நிலம் கொடுக்க வேண்டும் என்ற விதி இருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 1 சென்ட் நிலம் ஆயிரம் ரூபாய் விற்கிற காலத்தில், 3 ஏக்கர் என்று சொன்னால் இடம் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. அது அவ்வளவு தூரம் விலை அதிகமான இட

1991 செப்டம்பர் 7]

மாதலால் கன்னியாகுமரி மாவட்டத்திற்காவது அந்த 3 ஏக்கரைக் குறைத்து 1 ஏக்கரா 50 சென்டிலும் கட்டிடம் கட்டலாம் என்று விதியைத் தளர்த்த முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி புவனகிரியைப் பற்றியது. கன்னியாகுமரியில் ஒரு வில்லேஜ் பற்றியது அல்ல.

திரு. மா. சுந்தரதாஸ் : தலைவர் அவர்களே, இது 'காமன் மேட்டர்'.

முற்பகல் 9-40

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ச. சுந்தரராஜ்.

டாக்டர் ச. சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையங்களை அரசு மருத்துவ மனையாக மாற்றுவதாக, சொல்வது சம்பந்தமாகக் கேள்வி எழுப்பப்பட்டு இருக்கிறது. ஒரு சில பகுதிகளில் மக்கள் ஜனத் தொகைக்கேற்ப ஆரம்ப சுகாதார நிலையங்களில் படுக்கை வசதி இல்லாமல் மக்கள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே அவ்வாறு கஷ்டப்படுகிற மக்களின் நலன் காக்க ஆரம்ப சுகாதார நிலையங்களில் படுக்கை வசதி இருந்தால் பயன் உள்ளதாக இருக்கும் ; ஆகவே ஜனத்தொகைக்கு ஏற்ப ஆரம்ப சுகாதார நிலையங்களை அரசு மருத்துவமனையாக மற்ற பகுதிகளிலும் மாற்றும் எண்ணம் அரசுக்கு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் சொன்னபடி 76 இடங்களில் இருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையங்களை மேம்படுத்துவதற்காக திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. ஆரம்ப சுகாதார நிலையம் என்பது 30,000 ஜனத்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் வீதம் இப்போது அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திலும் 6 படுக்கைகள் உள்ளன. எனவே ஓரளவுக்கு போதிய அளவில் இருக்கின்ற காரணத்தால் 76 ஆரம்ப சுகாதார நிலையங்களை மேம்படுத்துவதற்கான திட்டம் தீட்டப்பட்டிருக்கிற காரணத்தால் எதிர்காலத்தில் நிலைமை சீர்படுத்தப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் பல இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்களில் டாக்டர்

கள் தங்குவதற்கு வசதி இல்லாமலும் அதற்கு ஆஸ்பத்திரிகள் சரியாக இல்லாத காரணத்தாலும் நம்முடைய மதிப்பிற்குரிய முதல்வர் அவர்கள் காலத்திலாவது ஒரு மாஸ்டர் ப்ளான் தயார் செய்து 5 ஆண்டுகளுக்குள்ளாக எங்கெங்கெல்லாம் ஆரம்ப சுகாதார நிலையங்களில் கட்டிடங்கள் இல்லாமல் இருக்கிறதோ அங்கெல்லாம் கட்டிடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டிடம் இல்லை என்பதும் அங்கே இருக்கிற மருத்துவர்களுக்குப் போதிய குடியிருப்பு வசதி இல்லை என்பதும் ஓரளவுக்கு உண்மையான பிரச்சினை. எந்தெந்த இடத்தில் இப்படிப்பட்ட குறைபாடுகள் இருக்கிறதோ, எங்கெங்கு கட்டிடங்கள் இல்லாமல் இருக்கிறதோ அதையெல்லாம் மொத்தமாகக் கணக்கெடுக்க வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அதற்கேற்ப அந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. எனவே படிப் படியாக நிதி வசதிக்கேற்ப அந்தக் காரியங்களைச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. இராமசுவாமி.

திரு. சி. இராமசுவாமி : பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியான சங்கராபுரம், கல்ராயன் மலைப் பகுதியில் இருக்கிற ஆரம்ப சுகாதார நிலையத்தில் உள்ள டாக்டர்கள் சுகாதார நிலையத்திற்குச் செல்வதில்லை. மாதா மாதம் சம்பளம் மட்டும் வாங்கிக் கொண்டு அங்கே செல்லாமல் இருக்கிறார்கள். இது பற்றி மாண்புமிகு நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, எந்தெந்தப் பகுதிகளில் எந்தெந்த மருத்துவர்களைப் போட்டிருக்கிறார்களோ அவர்கள் அங்கே கண்டிப்பாக இருந்து பணியாற்ற வேண்டியது அவர்களுடைய கடமையாகும். எங்கோ ஒரு சிலர் இப்படிச் செய்கிறபோது மொத்தமாக இந்தத் துறைக்கே கெட்ட பெயர் வந்துவிடுகிறது. அப்படிப் போகாதவர்களைப் பார்த்து அங்கே அவர்கள் தங்கி பணியாற்ற வேண்டும் என்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும், கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று சொல்வதை விட அவர்களுக்கு இருக்கிற பிரச்சினை என்ன என்பதைத் தெரிந்து அந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதன் மூலமாக அவர்கள் அங்கே பணியாற்றுவதற்கான வழி வகைகளைச் செய்ய வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். கிராமப் புறங்களில் போய் பணியாற்றக் கூடிய ஒரு எண்ணத்தை அவர்களுக்கு உருவாக்கக் கூடிய வகை

1991 செப்டம்பர் 7]

யில் திட்டங்கள் செயல்படுத்தப்பட வேண்டும் என்று ஏற்கெனவே சொல்லி அதற்காக போதிய திட்டங்களை வகுப்பதற்கு இந்தத் துறை முயற்சிகளை மேற்கொண்டு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மருத்துவமனையானாலும், ஆரம்ப சுகாதார நிலையம் ஆனாலும் ஏழை மக்கள் பயன் பெறும் வகையில் இன்று அவை நடை முறையில் இல்லை என்பதை அரசு அறியும். அதே நேரத்தில் அதற்காக ஒரு விசேஷமான புரட்சித் திட்டத்தை தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் ஏற்படுத்தி அந்த ஏழைகள் பயன் பெறத்தக்க வகையில் வசதிகளை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, வசதி இல்லாத ஏழை மக்களுக்காகவே வைக்கப்பட்டிருக்கிற மருத்துவமனை தான் இந்த மருத்துவமனைகள். எனவே அவர்கள் தான் அங்கே பயன் பெறவேண்டும். அந்தப் பயன் கிடைக்காமல் இருந்தால் நிச்சயமாக இந்த அரசு அதைச் சீர் செய்வதற்கு முழு முயற்சி மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். ஆசைமணி.

திரு. எஸ். ஆசைமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் வட்டாரத் தலைமையக அரசு மருத்துவமனைகளில் 32 படுக்கைகள் அமைக்க வேண்டும் என்று அறிவித்திருக்கிறார்கள். அதே போல் ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும் இதர மருத்துவமனைகளிலும் எத்தனை படுக்கைகள் இருக்க வேண்டும் என்று இருக்கிறதா ? அதன்படி அமைக்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டத் தலைநகரத்தில் இருக்கிற மருத்துவமனைகளில் குறைந்தபட்சம் 200 படுக்கைகள் இருக்க வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். தாலுகா தலைநகரங்களில் இருக்கின்ற மருத்துவமனைகளில் 32 படுக்கைகள் இருக்க வேண்டும் என்று உத்தரவிட்டிருக்கிறார்கள். அது போல் ஆரம்ப சுகாதார நிலையங்களில் குறைந்தபட்சம் 6 படுக்கைகள் இருக்க வேண்டும். அதற்கு மேலும் இருக்கலாம். அதே போன்று அப்கிரேட் செய்யப்பட்ட அந்த நிலையங்களில் 12 படுக்கைகள் குறைந்தபட்சம் இருக்க வேண்டும், அதற்கு மேலும் இருக்கலாம் என்ற வகையில் இப்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

[1991 செப்டம்பர் 7
முற்பகல் 9-45

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆரம்ப சுகாதார நிலையத்திலே இருக்கக் கூடிய மருத்துவர்கள், எங்கோ இருப்பவர்களை, எந்த இடத்திலோ போடுவதன் காரணமாக அவர்கள் ஊரிலே இல்லாமல் ஏதோ மாதச் சம்பளம் வாங்குவதற்கு மட்டும் அவ்வப்போது அங்கு வந்து செல்கின்றார்கள். ஆகவே அந்தந்தப் பகுதிகளில் இருக்கக் கூடிய டாக்டர்களை அவர்கள் கோரும் இடத்திற்கு நாம் டிரான்ஸ்பர் கொடுத்தால் அவர்கள் அந்த இடத்திலே தங்கியிருந்து மருத்துவப் பணியை சீரான முறையிலே அமைக்க ஒரு வாய்ப்பு இருக்கும். அதைப் பற்றி அரசு ஏதாவது ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இந்த அரசு பொறுப்பேற்ற உடனே மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெரிவித்தது அந்தந்த கிராமத்திலே மருத்துவர்கள் இருந்து பணியாற்றுவதற்கு என்ன என்ன வழிவகைகளை ஏற்படுத்த முடியுமோ அதை எல்லாம் செய்ய வேண்டும் என்பது. அங்கே இல்லாமல் இருப்பதற்கு என்ன அடிப்படைக் காரணங்கள், என்ன குறைபாடுகள் இருக்கின்றன என்று அவர்கள் எங்களுக்குத் தெரிவித்து அதன் மீது நடவடிக்கை எடுக்கச் சொல்லியிருக்கிறார்கள். அதிலே தான் ஒன்று குடியிருப்பு வசதி, இப்படி பல இடங்களில் மாற்றப்பட்டு விடுகின்ற காரணத்தினாலே வருகின்ற பிரச்சினை, இதை எல்லாம் ஆய்வு செய்து சரியான முறையிலே இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் அ. ஸ்ரீதரன்.

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில இடங்களில் அரசு தாலுக்கா மருத்துவ மனைகளும் ஆரம்ப சுகாதார மருத்துவமனைகளும் மிகப் பக்கத்திலே இருக்கின்றன. குறிப்பாக வால்பாறையிலே, தாலுக்கா மருத்துவமனையும் ஆரம்ப சுகாதார நிலையமும் ஒரு கிலோ மீட்டர் இடைவெளியில் இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொதுவான கேள்வியாக இருக்கலாம் அல்லது புவனகிரி பற்றியதாக இருக்கலாம். வால்பாறைக்கு அவர்களிடத்திலேயிருந்து அதற்குரிய பதில் வராது.

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏதாவது ஒன்றைச் செயல்பட வைத்து இருந்தால்

1991 செப்டம்பர் 7]

அரசுக்கு நிதி குறையும், வருமானம் இருக்கும். மேலும் அப்படிப்பட்ட மருத்துவமனை சிறப்பாக செயல்பட வேண்டும். அதாவது ஒரு மருத்துவமனையைச் சிறப்பாக செயல்பட வைத்து மற்ற ஒன்றை அந்தந்தத் தொகுதியில் வேறு இடத்திற்கு மாற்றினால் பொதுமக்களுக்கு நன்றாக இருக்கும்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, எல்லோரும் பல இடங்களிலே மருத்துவமனை வேண்டுமென்றுதான் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் இருக்கின்ற மருத்துவமனை ஒரு நல்ல இடத்தில் இருக்க வேண்டும் என்ற உணர்விலே நீங்கள் சொல்வது எங்களுக்குப் புரிகிறது. எனவே அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்கள் பிரச்சினை எழுப்பாமல் நீங்கள் பார்த்துக்கொள்ள முடியும் என்று சொன்னால் உரிய இடத்திற்கு, பொருத்தமான இடத்திற்கு அதை மாற்றுவதற்கு பிரச்சினை இருக்காது. ஆனால், அந்த இடத்திலே ஏற்கெனவே கட்டிடங்கள் எல்லாம் கட்டப்பட்டு பயன்படக் கூடிய நிலையிலே இருக்குமானால் அதை மாற்றுவது பற்றி கொஞ்சம் பார்த்து என்ன செய்ய முடியும் என்பதைப் பற்றி தீர ஆலோசித்துத்தான் செய்ய முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. செ. ஆறுமுகம்.

திரு. செ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய வானூர் தொகுதியிலே உப்பியலூர் கிராமத்திலே அமைந்துள்ள ஆரம்ப சுகாதார மருத்துவமனை பல ஆண்டுகளாக.......................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொதுவான கேள்வியாக இருந்தால் பதில் சொல்லலாம் அல்லது புவனகிரி பற்றியதாக இருந்தால் அவர்களிடத்திலே பதில் இருக்கும். ஒவ்வொருவரும் அந்தந்தப் பகுதியைப் பற்றி, மாவட்டத்தைப் பற்றி கேட்டால் பதில் வராது. தனிக் கேள்வி போடவும். திரு. செ. ஆறுமுகம்.

திரு. செ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல இடங்களில் ஆரம்ப சுகாதார மருத்துவமனைகள் வாடகைக் கட்டிடத்திலே இயங்கிக் கொண்டிருக்கின்றன. புதிதாகக் கட்டிடம் கட்டும்போது வாடகைக் கட்டிடத்திலே இருக்கின்ற சுகாதார நிலையங்களுக்கு முன் உரிமை அளிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படித் தான் இப்போது செய்து கொண்டு இருக்கின்றார்கள். ஆரம்பத்திலே ஆரம்ப சுகாதார நிலையங்கள் எங்கெங்கு வாடகைக் கட்டிடங்களில் இருக்கின்றதோ அதற்கு படிப்படியாக கட்டிடங்கள் கட்டுவதற்கான நடவடிக்கையை இந்த அரசாங்கம் தொடர்ந்து எடுத்துக் கொண்டிருக்கிறது. சில இடங்களிலே, மிக அவசியம் என்று வெகு நாட்களாக கருதப்பட்ட இடங்களிலே கட்டிடம், ஆரம்ப சுகாதார நிலையம்

இரண்டையும் சேர்த்து ஒரே நேரத்திலே ஆரம்பிக்க வேண்டும் என்று சொல்கிறோம். எங்கோ ஓரிரண்டு இடத்திலே தான் வருகிறது. பெரும் பகுதியான இடங்களிலே ஏற்கெனவே இயங்கிக் கொண்டிருக்கின்ற வாடகைக் கட்டிடத்திலே இயங்கிக் கொண்டிருக்கின்ற இடத்திலே அதைச் சொந்தக் கட்டிடமாக்குவதற்கான நடவடிக்கையை அரசாங்கம் எடுத்துக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இரா. புதுநயினார் ஆதித்தன்.

திரு. இரா. புதுநயினார் ஆதித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையங்கள் எல்லாம் காலை 7-30 மணிக்கு திறக்க வேண்டும் என்பது அமலில் இருப்பதாக நான் அறிந்தேன். ஆனால் எங்கள் தொகுதியிலே, உள்ள பகுதிகளுக்குச் சென்ற போது அவர்கள் அதை 8 மணிக்கு என்று மாற்றியதாகக் கூறினார்கள். அப்படி மாற்றுயதன் காரணமாக ஏழை எளிய விவசாயிகள், தொழிலுக்குச் செல்ல வேண்டியவர்கள் எல்லாம் அந்தப் பயனை அடைய முடியாமல் போகின்றது. மேலும் 10-30 மணிக்கு பேஷண்டுகள் இருந்தால் கூட அவர்கள் அதைக் கவனிக்காது நேரம் முடிந்து விட்டது என்று சொல்கின்ற சூழ்நிலை இருக்கிறது. அதை மாற்ற அரசு ஏதாவது ஆவன செய்யுமா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முறைப்படி எந்த நேரத்திலே மருத்துவர்கள் அங்கேயிருந்து பணியாற்ற வேண்டுமோ அந்த நேரத்திலே இருந்து பணியாற்றுவதற்கான நடவடிக்கையை இந்த அரசு தீவிரமாக எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. என். பன்னீர் செல்வம்.

திரு. என். பன்னீர்செல்வம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகத்திலே அரசால் கட்டப்படுகின்ற மருத்துவ நிலையத்திற்கு 3 ஏக்கர் நிலமும், அதற்கு உண்டான 10 ஆயிரம் ரூபாய் பணமும், அதற்கான தகுதி சான்றிதழும் வழங்கப்பட்டும் பல இடங்களிலே ஆஸ்பத்திரிகள் கட்டப்படாமல் இருக்கின்றன.

முற்பகல் 9.50

சுகாதார மையங்களில் அது போன்று டாக்டர்கள் பணிபுரிந்து, அங்கு படுக்கைகள் இல்லாமல் மக்கள் அவதியான ஒரு நிலையை அனுபவிக்கிறார்கள். உதாரணமாக அது போன்ற ஓர் அமைப்பு என் தொகுதியிலும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இது போன்ற நிலைகள் நீக்கப்பட்டு, ஆங்காங்கு முறையாக வசதியான இடங்களில் கட்டிடங்கள் கட்டப்படுமா என்பதை அறிய ஆசைப்படுகிறேன்.

1991 செப்டம்பர் 7]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்படி சுற்றி வந்தாலும் நிதிப் பிரச்சினை தான் இங்கு மொத்தமாக உள்ள பிரச்சினை. ஒவ்வொரு துறையிலும் இந்தப் பிரச்சினை இப்பொழுது இருந்து கொண்டு தான் இருக்கிறது. இருந்தாலும், இது மிக முக்கியமான பிரச்சினை என்கிற காரணத்தினால், பொது மக்களுக்கு நேரடியாக பயன்படக் கூடியது என்கிற காரணத்தால், இதை எந்த அளவுக்கு தீவிரமாக செய்ய முடியுமோ அதைச் செய்வதற்கு அரசாங்கம் முயற்சிகளை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. கே. சின்னசாமி.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மருத்துவ மனைகளில் மின்சாரப் பழுது ஏற்பட்டால் அதைப் பராமரிக்கிற பொறுப்பு மின் வாரியத்திடம் இருக்கிறது. அதுபோல கட்டிடங்கள், ஜன்னல்கள் பழுது அடைந்தாலும் அதைப் பொதுப் பணித் துறையில் பணியாற்றுகிற அதிகாரிகள்தான் சரிபார்க்க வேண்டுமென்ற ஒரு நிலைமை இருக்கிறது. பல மருத்துவமனைகளுக்கு நான் சென்ற நேரத்தில் அங்கு பணியாற்றுகின்ற டாக்டர்களும் மற்றவர்களும், இந்தப் பராமரிக்கின்ற பொறுப்பை மாவட்ட சுகாதார அலுவலகத்தில் ஒரு அலுவலரையோ அல்லது இருவரையோ நியமித்து அவர்கள் மூலம் உதவுவார்களானால், பழுதுகளைப் பராமரிக்கின்ற பொறுப்பை முடிப்பது மிக எளிதாக இருக்கும் என்று கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் நியமிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதையும், அதோடு ஆரம்ப சுகாதார நிலையத்தில் இரண்டு டாக்டர்கள் இருக்க வேண்டும். ஒரு டாக்டர் பெண்ணாகவும், இன்னொருவர் ஆணாகவும் இருக்க வேண்டும். எல்லா இடங்களிலும் இருவரும் ஆணாக இருக்கிறார்கள். அல்லது இருவரும் பெண்ணாக இருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு உத்தரவு மூலம் எல்லா இடங்களிலும் கம்பல்சரியாக, ஒரு ஆண், ஒரு பெண் என்கிற வகையில் இரண்டு டாக்டர்களை நியமிக்க வேண்டுமென்ற அடிப்படையில் உத்தரவை பிறப்பிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பராமரிப்பைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போல தான் இருந்து வருகிறது. சின்ன பிரச்சினை என்றாலும் கூட சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளிடம்தான் அவர்கள் சொல்ல வேண்டியிருக்கிறது. இருந்தாலும் ஆங்காங்கு துறையினுடைய அதிகாரிகள் இருக்கிற காரணத்தால் அவர்களிடம் அதுபற்றி சொல்ல முடியும் என்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆனால் ஓரளவுக்கு

சின்ன சின்ன வேலைகளை சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளே செய்துகொள்ளலாம் என்று தனிப்பட்ட முறையில் முடிவு எடுத்துவிட முடியாது. மின்சாரத் துறையிலும், பொதுப் பணித் துறையிலும் பேசிதான் முடிவு எடுக்க வேண்டியிருக்கிறது. எனவே, இதுபற்றி ஆய்வு செய்து பின்னால் நடவடிக்கை எடுக்கப்படும். ஏற்கெனவே ஒரு ஆய்வு செய்யப்பட்டு, ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திலும் பணியாற்றக் கூடியவர்கள் எத்தனை ஆண் டாக்டர்கள், எத்தனை பெண் டாக்டர்கள் என்று பார்த்ததில் பெரும்பாலான இடங்களில் இரண்டு பேரும் பெண் மருத்துவர்களாக பணியாற்றுகிறார்கள் அல்லது இரண்டு பேருமே ஆண் மருத்துவர்களாக பணியாற்றுகிறார்கள். இந்த $1\frac{1}{2}$, 2 மாத காலத்திலே அந்தக் கணக்கு எடுக்கப்பட்டிருக்கிறது. அவைகளை எல்லாம் மாற்றி ஒவ்வொரு இடத்திலும் ஒரு ஆண் மருத்துவர், ஒரு பெண் மருத்துவர் என்று இருந்தால்தான் அந்தப் பகுதியில் இருக்கின்ற மக்களுக்கு வசதியாக இருக்கும் என்கிற அடிப்படையில் அந்த நடவடிக்கைகளை எடுப்பதற்கு இப்போது இந்த அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

(அ) பாளையங்கோட்டை சித்த மருத்துவக் கல்லூரி மாணவர்கள் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி சாகும்வரை உண்ணாவிரதம் இருந்து வருவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் தே. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாளையங்கோட்டை சித்தா மருத்துவக் கல்லூரி மாணவர்கள் கடந்த 3 ஆம் தேதி முதல் தங்களுடைய கோரிக்கைகளுக்காக தொடர் உண்ணாவிரதம் இருந்து வருகிறார்கள். தொடர் உண்ணாவிரதமல்ல, சாகும்வரை உண்ணாவிரதம் என்கிற விதத்திலே போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே நான் சட்டமன்ற உறுப்பினராக இருந்த நேரத்தில் முன்னாள் முதலமைச்சர் மரியாதைக்குரிய புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியில் ஒரே நேரத்தில் 200 பேருக்கு, சித்தா மருத்துவ டாக்டர்களுக்கு வேலையில் சேர்கின்ற வாய்ப்பினை, வேலைக்கு உத்தரவாதம் அளித்து பணியில் அமர்த்தி

சின்ன சின்ன வேலைகளை சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளே செய்துகொள்ளலாம் என்று தனிப்பட்ட முறையில் முடிவு எடுத்துவிட முடியாது. மின்சாரத் துறையிலும், பொதுப் பணித் துறையிலும் பேசிதான் முடிவு எடுக்க வேண்டியிருக்கிறது. எனவே, இதுபற்றி ஆய்வு செய்து பின்னால் நடவடிக்கை எடுக்கப்படும். ஏற்கெனவே ஒரு ஆய்வு செய்யப்பட்டு, ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திலும் பணியாற்றக் கூடியவர்கள் எத்தனை ஆண் டாக்டர்கள், எத்தனை பெண் டாக்டர்கள் என்று பார்த்ததில் பெரும்பாலான இடங்களில் இரண்டு பேரும் பெண் மருததுவர்களாக பணியாற்றுகிறார்கள் அல்லது இரண்டு பேருமே ஆண் மருத்துவர்களாக பணியாற்றுகிறார்கள். இந்த $1\frac{1}{2}$, 2 மாத காலத்திலே அந்தக் கணக்கு எடுக்கப் பட்டிருக்கிறது. அவைகளை எல்லாம் மாற்றி ஒவ்வொரு இடத்திலும் ஒரு ஆண் மருத்துவர், ஒரு பெண் மருத்துவர் என்று இருந்தால்தான் அந்தப் பகுதியில் இருக்கின்ற மக்களுக்கு வசதியாக இருக்கும் என்கிற அடிப்படையில் அந்த நடவடிக்கைகளை எடுப்பதற்கு இப்போது இந்த அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

(அ) பாளையங்கோட்டை சித்த மருத்துவக் கல்லூரி மாணவர்கள் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி சாகும்வரை உண்ணா விரதம் இருந்து வருவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் தே. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாளையங்கோட்டை சித்தா மருத்துவக் கல்லூரி மாணவர்கள் கடந்த 3 ஆம் தேதி முதல் தங்களுடைய கோரிக்கைகளுக்காக தொடர் உண்ணாவிரதம் இருந்து வருகிறார்கள். தொடர் உண்ணாவிரதமல்ல, சாகும்வரை உண்ணாவிரதம் என்கிற விதத்திலே போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே நான் சட்டமன்ற உறுப்பினராக இருந்த நேரத்தில் முன்னாள் முதலமைச்சர் மரியாதைக்குரிய புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியில் ஒரே நேரத்தில் 200 பேருக்கு, சித்தா மருத்துவ டாக்டர்களுக்கு வேலையில் சேர்கின்ற வாய்ப்பினை, வேலைக்கு உத்தரவாதம் அளித்து பணியில் அமர்த்தி

னார்கள். ஆனால் அதற்குப் பிறகு, 2, 3, ஆண்டுகளாக சித்த மருத்துவத் துறையில் டாக்டர்கள் பணியில் நியமிக்கப்படாத சூழ்நிலை இருக்கிற காரணத்தால் அந்தக் கல்லூரியில் கூட 40 இடங்கள் வேகன்சியாக இருக்கிறது. அந்த இடங்கள் எல்லாம் ரிககனைஸ் ஆன போஸ்ட்ஸ். அவைகளை நிரப்ப வேண்டுமென்று சொல்லியும், அதுபோல அதை நேஷனலைஸ்ட் இன்ஸ்ட்டிட்யூட் ஆக மாற்ற வேண்டும் என்பதற்காக மத்திய அரசு 36 கோடி ரூபாய் அனுமதித்திருக்கிறது. அதுபோல தமிழக அரசும் 12கோடிரூபாய் ஒதுக்கீடு செய்தால் அதை நேஷனலைஸ்ட் இன்ஸ்ட்டிட்யூட் ஆக பெரிய அளவில் அமைக்க முடியும். அப்படி யானால் அவர்களுக்கு......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சுருக்கமாக 'Point of order' என்ன என்பதை மட்டும் சொல்லுங்கள்.

டாக்டர் தே. குமாரதாஸ் : வேலைவாய்ப்புகள் அதிகமாக கிடைக்கும் என்கிற ஒரு விதத்திலும், அதுபோல நம்முடைய மாடர்ன் மெடிசினில் பி.ஜி. டாக்டர்கள் ஸ்டைபென்ட் ஆக ரூபாய் 1,050 வாங்குகிறார்கள். அதனால் நமக்கு பைனான்ஸ் கமிட்மென்ட் வராது. நம்முடைய சர்க்கார்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதுவாக இருந்தாலும் இந்த நேரம் 'Zero hour'. 'Zero hour'-ல் மிக சுருக்கமாக பேசுங்கள்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் பேசுவதற்கு நேரம் தந்ததற்கு நன்றி. எனவே, 1,050 ரூபாய் ஸ்டைபென்ட் கொடுத்துக் கொண்டிருப் பதை அதிகரிக்க வேண்டுமென்ற கோரிக்கையை வலியுறுத்தி யிருக்கிறார்கள். அதுபோல ஆரம்ப சுகாதார நிலையங்களில் அவர்களை பணியில் அமர்த்த வேண்டுமென்று சொல்லியும் தொடர் போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். எனவே மாண்புமிகு அமைச்சரவர்கள் பரிவுடன் கவனித்து, னிவானக பதிலைக் கூறும்படி கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 9-55

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதேபோல திரு. சுந்தர தாஸ் அவர்களும் இது பற்றி கவனத்திற்குக் கொண்டு வந்திருக் கிறார்கள்.

திரு. மா. சுந்தரதாஸ் : தலைவரவர்களே, அது வேறு பிரச்சினை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வேறு பிரச்சினையா? மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரவர்கள்,

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு தலைவரவர்களே, சித்த மருத்துவக் கல்லூரியிலே ஒரு போராட்டம் நடத்திக்கொண்டிருப்பதாக அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. இதிலே இருக்கிற பிரச்சினை என்ன என்று சொன்னால், எந்தக் கோரிக்கையை வேண்டுமானாலும் வைக்கலாம். ஆனால் வைக்கும் முறை என்று இருக்கிறது. அரசினிடத்தில் அணுகி, அரசாங்கத்தால் செய்ய முடியாத நிலைமையிலேதான் போராட்டத்தில் இறங்க வேண்டும். இதிலே தவறானதொரு முடிவெடுத்து, சட்டமன்றத்திலே இதற்கு ஒப்புக்கொண்டு, நாம் அறிவித்தோமானால், ஒவ்வொரு துறையிலும் இப்படிப்பட்ட பிரச்சினைகள் வந்தால் இன்றைக்கு இருக்கும் நிதித் தட்டுப்பாடு, இப்படி பல்வேறு சூழ்நிலைகளிலே ஒரு நல்ல நிலைமையை எதிர்பார்க்க முடியாது என்ற காரணத்தால் இதிலே கவனத்தோடு இருக்க வேண்டுமென்று கருதினாலும் கூட, அவர்கள் போராட்டத்தைத் துவங்கிய முறை, இன்றைக்கு நடத்திக் கொண்டிருக்கிற முறை விரும்பத்தக்கது அல்ல என்பதை சொல்ல வேண்டியது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

படித்து முடித்தவர்கள் அத்தனை பேர்களுக்கும் வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டுமென்று அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னதுபோல, புரட்சித் தலைவர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதுதான் 200 பேர்களுக்கு ஒரே நேரத்தில் வேலைவாய்ப்பு கொடுத்தார்கள்; அதற்குப் பின்னாலே தொடர்ந்து வந்த அரசாங்கத்திலே யாருக்கும் கொடுக்கப்படவில்லை. இதுவரை கொடுக்கப்படவில்லை என்று சொன்னார்கள். இந்த அரசாங்கம் பொறுப்பேற்று 2 மாதங்கள்தான் ஆகியிருக்கிறது. ஒவ்வொரு துறையிலும் இருக்கிற பிரச்சினை என்ன, அதை எப்படித் தீர்க்க வேண்டுமென்று தெளிவாக ஆய்வுகளை செய்துகொண்டிருக்கிறோம். நான் திருநெல்வேலி சென்றபோதுகூட என்னைச் சந்தித்து இந்தப் பிரச்சினைகளைச் சொன்னார்கள். நான்கூட 16ஆம் தேதிக்கு மேல், பட்ஜெட் கூட்டத்திலே டிமாண்ட் முடிந்த பிறகு, இதைப் பற்றிப் பேசுவோம் என்று தெரிவித்துவிட்டு வந்தேன். எனவே இப்படி அவர்கள் சாகும்வரை உண்ணாவிரதம் என்று ஆரம்பித்திருப்பது விரும்பத்தக்கதல்ல. எனவே இந்தப் பிரச்சினையில் நேரடியாகப் பேசுவதற்கான ஏற்பாட்டைச் செய்யலாம். ஆனால் இப்படி அவர்கள் போராட்டத்தைத் துவக்கியது அவ்வளவு சரியானதல்ல, முறையானதல்ல என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். 3 பேர் சாகும்வரை உண்ணாவிரதம் என்று இருந்திருக்கிறார்கள். அவர்கள் இப்போது மருத்துவமனையிலே சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அதற்குப் பிறகு, தொடர் உண்ணாவிரதமாக அவர்கள் இப்போது மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். எனவே நான் சொல்வதெல்லாம் எதையும் பேசித் தீர்ப்பதற்கு இந்த அர

1991 செப்டம்பர் 7] [திரு. சு. முத்துசாமி]

சாங்கத்திலே எந்தத் தடையும் இல்லை. அப்படிப்பட்ட நேரத்திலே ஆரம்பத்திலேயே உண்ணாவிரதம் என்ற கடைசி முடிவிற்குப் போனால், அதை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வாய்ப்பு இல்லை.

(ஆ) கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள தனியார் பள்ளிகளில் சம்பளம் வழங்கப்படாததால் ஆசிரியாகள் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் எந்த அறிவிப்பும் கொடுக்கவில்லை. கொடுத்தவர்களுக்கு இப்போது வாய்ப்பு கொடுக்கிறேன். திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ் : பேரவைத் தலைவரவர்களே, மைனாரிட்டி, நான்-மைனாரிட்டி பள்ளிக்கூடங்களில் பல ஆண்டுகளாகப் பணி புரியும் ஆசிரியர்களுக்கு ஊதியம் கிடைக்காத காரணத்தால் அவர்கள் தொடர் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். இது 10 மாதங்களாக நடக்கிறது. அரசு பொறுப்பேற்று 2 மாதங்கள் ஆகிவிட்டது. இது 10, 12 மாதங்களாக நடக்கிற பிரச்சினை. ஆளுநர் ஆட்சிக் காலத்தில் ஜீ.ஓ.எம்.எஸ். நம்பர் 495 என்று ஜீ. ஓ. போடப்பட்டிருக்கிறது. அதில் Director of School Education-ஐ சேர்மேனாகக் கொண்டு ஒரு கமிட்டி போட்டு, அதனுடைய ரிப்போர்ட்டை 20-5-1991-க்குள் கொடுக்கச் சொன்னார்கள். இதுவரையில் அந்த ரிப்போர்ட் கொடுக்கப்படவில்லை. The Committee is requested to submit the report on or before 20-5-1991....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சுந்தரதாஸ், நீங்கள் அந்த உண்ணாவிரதம் பற்றி அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வர வேண்டுமென்று சொன்னீர்கள். ஆனால் உள்ளே போனால், இந்த நேரம் அதற்கு உரியதல்ல. இது விவாதத்திற்கு உரிய நேரமல்ல. என்ன பிரச்சினையை அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வர வேண்டுமென்று நினைக்கிறீர்களோ, அந்தப் பிரச்சினையை மட்டும் சொன்னால் நன்றாக இருக்கும்.

திரு. மா. சுந்தரதாஸ் : அவர்களுக்கு சம்பளம் கிடைக்காத காரணத்தால், 10, 15 ஆண்டுக்காலம் பணி புரிந்த ஆசிரியர்கள் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். அதனால் அருள்கூர்ந்து மாண்புமிகு முதல்வரவர்களும், மாண்புமிகு கல்வி அமைச்சர்

1991 செப்டம்பர் 7] [திரு. சு. முத்துசாமி]

சாங்கத்திலே எந்தத் தடையும் இல்லை. அப்படிப்பட்ட நேரத்திலே ஆரம்பத்திலேயே உண்ணாவிரதம் என்ற கடைசி முடிவிற்குப் போனால், அதை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வாய்ப்பு இல்லை.

(ஆ) கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள தனியார் பள்ளிகளில் சம்பளம் வழங்கப்படாததால் ஆசிரியர்கள் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் எந்த அறிவிப்பும் கொடுக்கவில்லை. கொடுத்தவர்களுக்கு இப்போது வாய்ப்பு கொடுக்கிறேன். திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ் : பேரவைத் தலைவரவர்களே, மைனாரிட்டி, நான்-மைனாரிட்டி பள்ளிக்கூடங்களில் பல ஆண்டுகளாகப் பணி புரியும் ஆசிரியர்களுக்கு ஊதியம் கிடைக்காத காரணத்தால் அவர்கள் தொடர் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். இது 10 மாதங்களாக நடக்கிறது. அரசு பொறுப்பேற்று 2 மாதங்கள் ஆகிவிட்டது. இது 10, 12 மாதங்களாக நடக்கிற பிரச்சினை. ஆளுநர் ஆட்சிக் காலத்தில் ஜீ.ஓ.எம்.எஸ். நம்பர் 495 என்று ஜீ. ஓ. போடப்பட்டிருக்கிறது. அதில் Director of School Education-ஐ சேர்மேனாகக் கொண்டு ஒரு கமிட்டி போட்டு, அதனுடைய ரிப்போர்ட்டை 20-5-1991-க்குள் கொடுக்கச் சொன்னார்கள். இதுவரையில் அந்த ரிப்போர்ட் கொடுக்கப்படவில்லை. The Committee is requested to submit the report on or before 20-5-1991....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சுந்தரதாஸ், நீங்கள் அந்த உண்ணாவிரதம் பற்றி அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வர வேண்டுமென்று சொன்னீர்கள். ஆனால் உள்ளே போனால், இந்த நேரம் அதற்கு உரியதல்ல. இது விவாதத்திற்கு உரிய நேரமல்ல. என்ன பிரச்சினையை அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வர வேண்டுமென்று நினைக்கிறீர்களோ, அந்தப் பிரச்சினையை மட்டும் சொன்னால் நன்றாக இருக்கும்.

திரு. மா. சுந்தரதாஸ் : அவர்களுக்கு சம்பளம் கிடைக்காத காரணத்தால், 10, 15 ஆண்டுக்காலம் பணி புரிந்த ஆசிரியர்கள் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். அதனால் அருள்கூர்ந்து மாண்புமிகு முதல்வரவர்களும், மாண்புமிகு கல்வி அமைச்சர்

[திரு. மா. சுந்தரதாஸ்] [1991 செப்டம்பர் 7

அவர்களும் அவர்களுக்கு ஊதியத்தைக் கொடுக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து, அவர்களுடைய உண்ணாவிரதத்தை வித்டிரா செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்-காங்கிரஸ் தோழர்கள் வெற்றி பெற்ற காரணத்தாலே மார்த்தாண்டம் கிருத்துவக் கல்லூரி முதல்வரவர்கள் சேர்மேன், செக்ரட்டரியை சஸ்பென்ட் செய்திருக்கிறார்கள். அதனால் அனைத்துக் கல்லூரிகளும் இன்றைக்கு மூடும் நிலைமை இருக்கிறது. அரசியல் காழ்ப்புணர்ச்சியோடு மார்த்தாண்டம் கிருத்துவக் கல்லூரி முதல்வரவர்கள் செய்திருக்கிறார்கள். அதையும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அந்த மாணவர்கள் நலனைக் கருத்திற்கொண்டு கல்லூரி பிரின்சிபால் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதே பொருள் பற்றி டாக்டர் தே. குமாரதாஸ் அவர்களும் என்னுடைய கவனத்திற்கு கொண்டு வந்திருக்கிறார்கள். இருவரும் இந்தப் பிரச்சினையை எழுப்பியதாகக் கருதி மாண்புமிகு அமைச்சரவர்கள் பதிலுரை தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 10-00

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பி இருக்கிற பிரச்சினை குறித்து அரசினிடத்திலே விரிவான தகவல் இப்போது இல்லை. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததிலே இருந்து என்ன நிலைமை என்பதை அரசு புரிந்து கொள்ள முடிகிறது. கன்னியாகுமரி மாவட்டம் நம்முடைய மாநிலத்திலேயே தனியார் கல்வி நிறுவனங்கள் அதிகமாக இருக்கின்ற ஒரு மாவட்டம் ஆகும். அதிலே மைனாரிட்டி கல்வி நிறுவனங்கள் என்பதும், வேறு தனியார் கல்வி நிறுவனங்கள் என்பதும் இரண்டு வகையில் நடைபெறுகின்ற ஒன்று. மாண்புமிகு உறுப்பினர் அவர்களே எடுத்துக் காட்டியது போன்று, இது இப்போது, நேற்று, சென்ற மாதம் ஏற்பட்டது அல்ல. 10 ஆண்டுகளாகத் தொடர்ந்து நடைபெற்று வருகின்ற ஒன்று என்று குறிப்பிடுகிறார். 10 ஆண்டுகளாகச் சம்பளம் இல்லாமல் இருக்கிறார்கள் என்று சொல்வதையே அவர்கள் குறித்துக்கொள்ள வேண்டும். 10 ஆண்டுகளாகச் சம்பளம் இல்லாமல் பணியாற்றுகிற சூழ்நிலை தமிழ்நாட்டிலே, இந்தியத் துணைக் கண்டத்திலே இருக்குமானால், நாம் இந்நேரம் எங்கேயோ போய் இருப்போம். ஆகவே சம்பளத்தை எங்கேயோ அவர்கள் பெற்றுக் கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் எதிர்பார்த்தது

1991 செப்டம்பர் 7]  [திரு. இராம வீரப்பன்]

அந்தச் சம்பளத்தை அரசாங்கத்திடத்திலே இருந்து பெற வேண்டும் என்று தனியார் நிர்வாகம் எதிர்பார்த்தது. தனியார் நிர்வாகம் எதிர்பார்க்கிறபோது, இந்த ஆசிரியர்களை நியமிக்கிறபோது அரசினிடத்திலே அனுமதி பெற்றுக் கொண்டு நியமிக்கிறார்களா என்றால், அதுவும் இல்லை. அதற்கு அரசியல் சட்டம் அனுமதி வழங்கி இருக்கிறது என்று சொல்லி அவர்கள் அரசுக்கே தெரியாமலே அரசினுடைய அனுமதியையே பெறாமலே பல தனியார் நிறுவனங்கள் அவர்களாக ஆசிரியர்களை நியமித்துக் கொள்கிறார்கள். நியமித்துக் கொண்டதற்குப் பிறகு, நான் சம்பளம் கொடுக்கிறேன்; அரசாங்கம் எனக்கு சம்பளத்திற்கு ஈடுகட்ட வேண்டுமென்று கேட்கிறார்கள். இது பொதுவான சூழ்நிலை. நான் இப்போது குறிப்பிடுகிற இந்தச் சூழ்நிலைக்கு இது பொருந்துகிறதா, இல்லையா என்பது 13 ஆம் தேதி கல்வி மானியத்தின் மீது விவாதம் இருக்கிறது; அப்போது தெளிவாக நீங்களும் தெரிவிக்க முடியும். அரசாங்கத்திலே இருந்து தெளிவான பதிலையும் பெற முடியும். ஆகவே உண்ணாவிரதம் என்று எடுத்ததற்கெல்லாம் உண்ணாவிரதம் இருந்தால், அந்த காரியம் நிறைவேறிவிடும் என்கின்ற ஒரு முறையை நாம் கைக்கொண்டுவிடக்கூடாது.

உத்தமர் காந்தியடிகள் கடைசி ஆயுதமாக உண்ணாவிரதத்தைக் கையாண்டார். இன்றைக்கு நாம் அவர்களையே கேலி செய்வது போல், எடுத்ததற்கெல்லாம் உண்ணாவிரதம் என்று யார் யாரோ தொடங்கிவிடுகிறார்கள். ஆகவே கன்னியாகுமரி மாவட்டத்தில் தனியார் கல்வி நிறுவனங்களில் என்ன நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது என்பதைத் தெரிந்து அறிவிப்பதற்கு ஒரு குழு நியமிக்கப்பட்டதாகத் தெரிவித்து இருக்கிறார்கள். அதைப்பற்றிய விவரம் முழுவதுமாக என்னிடத்திலே இல்லை. அந்தக் குழு என்ன கருதியது அல்லது எந்த முடிவைத் தெரிவித்தது என்பதையும், அரசு அதைப் பெற்று கல்வித் துறை மானியத்தின்போது விரிவாகப் பதில் சொல்வேன்.

அடுத்து ஒரு கல்லூரியைப் பற்றிச் சொன்னார்கள். அது பற்றிய விவரம் என்னிடத்திலே இல்லை. அப்படி ஒருவேளை பழி உணர்ச்சியோடு, பழி வாங்குகிற உணர்ச்சியோடு அந்தக் கல்லூரி நிர்வாகம் நடந்துகொண்டு இருக்குமேயானால் அதற்குத் தக்க நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இத்துடன் பிரச்சினை முடிவுறுகிறது.

(இ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை.

திரு. இளம்வழுதி : தலைவர் அவர்களே.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் எதுவும் என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவராமல் இப்படி அடிக்கடி எழுந்திருப்பது சரியல்ல. நீங்கள் எந்தப் பிரச்சினையையும் என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரவில்லை. தயவுசெய்து உட்காருங்கள்.

திரு. இளம்வழுதி : நான் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒத்திவைப்புத் தீர்மானம், பொது விவாதத்தின்போது எடுத்துக்கொள்ளப்படுவதில்லை என்கிற காரணம் காட்டி, அது நிராகரிக்கப்பட்டு இருக்கிறது. எனவே இதிலே மேற்கொண்டு இந்த நேரத்திலே விவாதம் தேவையில்லை. இத்துடன் பிரச்சினை முடிவுறுகிறது.

திரு. இளம்வழுதி : தலைவர் அவர்களே,...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னால் நிராகரிக்கப்பட்டதை என்னுடைய அறையிலே வந்துதான் நீங்கள் பேச வேண்டுமே தவிர, இப்படி அவையிலே வந்து பேசுவது முறையல்ல. உங்களுடைய ஒத்திவைப்புத் தீர்மானத்தை நான் நிராகரித்து இருக்கிறபோது, அதை எந்தச் சந்தர்ப்பத்தில் நிராகரித்து இருக்கிறார்கள் என்று என்னுடைய அறையிலே வந்துதான் நீங்கள் கேட்கவேண்டும். (குறுக்கீடு) இப்படி எழுந்திருப்பது முறையல்ல. உட்காருங்கள். இப்போது பிரச்சினை முடிவுறுகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

3. வரவு-செலவுத் திட்டம், 1991–92, பொது விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1991–92 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம். திரு. ஆ. பாலையா.

* திரு. ஆ. பாலையா : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக நிதி அமைச்சர் அவர்களால் இந்த மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு இருக்கின்ற நிதிநிலை அறிக்கை மீது நான் சார்ந்து இருக்கின்ற காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பில் என்னுடைய சில கருத்துக்களை நான் இங்கே சொல்ல விரும்புகின்றேன். இந்த அரசு பதவி ஏற்று 2½ மாதங்களுக்குள் சுமார் 6 ஆயிரம் கோடி ரூபாய் அளவிலே

(இ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை.

திரு. இளம்வழுதி : தலைவர் அவர்களே.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் எதுவும் என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவராமல் இப்படி அடிக்கடி எழுந்திருப்பது சரியல்ல. நீங்கள் எந்தப் பிரச்சினையையும் என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரவில்லை. தயவுசெய்து உட்காருங்கள்.

திரு. இளம்வழுதி : நான் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒத்திவைப்புத் தீர்மானம், பொது விவாதத்தின்போது எடுத்துக்கொள்ளப்படுவதில்லை என்கிற காரணம் காட்டி, அது நிராகரிக்கப்பட்டு இருக்கிறது. எனவே இதிலே மேற்கொண்டு இந்த நேரத்திலே விவாதம் தேவையில்லை. இத்துடன் பிரச்சினை முடிவுறுகிறது.

திரு. இளம்வழுதி : தலைவர் அவர்களே,...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னால் நிராகரிக்கப்பட்டதை என்னுடைய அறையிலே வந்துதான் நீங்கள் பேச வேண்டுமே தவிர, இப்படி அவையிலே வந்து பேசுவது முறையல்ல. உங்களுடைய ஒத்திவைப்புத் தீர்மானத்தை நான் நிராகரித்து இருக்கிறபோது, அதை எந்தச் சந்தர்ப்பத்தில் நிராகரித்து இருக்கிறார்கள் என்று என்னுடைய அறையிலே வந்துதான் நீங்கள் கேட்கவேண்டும். (குறுக்கீடு) இப்படி எழுந்திருப்பது முறையல்ல. உட்காருங்கள். இப்போது பிரச்சினை முடிவுறுகிறது.

3. வரவு-செலவுத் திட்டம், 1991–92, பொது விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1991–92 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம். திரு. ஆ. பாலையா.

* திரு. ஆ. பாலையா : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக நிதி அமைச்சர் அவர்களால் இந்த மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு இருக்கின்ற நிதிநிலை அறிக்கை மீது நான் சார்ந்து இருக்கின்ற காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பில் என்னுடைய சில கருத்துக்களை நான் இங்கே சொல்ல விரும்புகின்றேன். இந்த அரசு பதவி ஏற்று 2½ மாதங்களுக்குள் சுமார் 6 ஆயிரம் கோடி ரூபாய் அளவிலே

1991 செப்டம்பர் 7] [திரு. ஆ. பாலையா]

ஒரு மாபெரும் நிதிநிலை அறிக்கையை இந்த சபையிலே சமர்ப்பித்து இருக்கின்றார்கள். இந்த நிதிநிலை அறிக்கை பற்றாக்குறை நிதிநிலை அறிக்கையாக இருந்தாலும் பல்வேறு விதமான வளர்ச்சிப் பணிகளுக்கு ஏராளமாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கின்றது என்பதைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

முற்பகல் 10-05

அதேநேரத்திலே மின் கட்டண உயர்வு, டீசல் மீதான வரி உயர்வு, ஏழையெளிய மக்கள் அன்றாடம் உபயோகிக்கின்ற பொருள்களுடைய விலையேற்றம், ஆகியவைகளை நீக்குவதற்கு, போக்குவதற்கு எந்தவிதமான வழிவகைகளும் இந்த நிதிநிலை அறிக்கையிலே செய்யப்படவில்லை.

அதைப்போல பல்வேறு விதமான மக்கள் அன்றாடம் உபயோகிக்கிற பொருள்களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டிருப்பதை இந்த நிதிநிலை அறிக்கையிலே காண முடிகிறது. வளர்ச்சிப் பணிகளை ஏராளமாக அறிவித்திருக்கிறார்கள். அதிலே சிறப்பு தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் இந்த மாநிலத்திலே ஆயிரம் ஆரம்பப் பள்ளிகளுக்கான கட்டிடங்கள் கட்டப்பட இருப்பதாகவும், 'ஹட்கோ'வின் உதவியுடன் 100 அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கு கட்டிடம் கட்டுவதற்காகவும் இங்கே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இந்த நிதியாண்டிலேயே அவைகளுக்கு அனுமதி வழங்கப்பட வேண்டுமென்றும் முடிவு எடுத்திருக்கிறார்கள், பாராட்டுகிறேன்.

இந்த நேரத்திலே ஒன்றைச் சொல்ல ஆசைப்படுகிறேன். ஆரம்பப் பள்ளிகள் என்று வருகிறபோது கன்னியாகுமரி மாவட்டத்திலே இருக்கிற அரசு ஆரம்பப் பள்ளிகளுக்கு இதுவரையிலும் எந்த அரசாலும் கட்டிடம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. ஏனைய மாவட்டங்களிலே அரசு ஆரம்பப் பள்ளிகள் ஊராட்சி ஒன்றியத்தினுடைய ஆளுகைக்கு உட்பட்டதாக இருப்பதால் கட்டிடம் கட்ட அரசு நிதி ஒதுக்குகிறது. ஆனால் கன்னியாகுமரி மாவட்டத்திலே ஆரம்பப் பள்ளிகள் அத்தனையும் அரசின் கட்டுப்பாட்டிலே இருக்கிற காரணத்தால் அந்த நிதி ஒதுக்கீடு கிடைக்காமல் போய் விடுகிறது. மற்ற மாவட்டங்களில் நிதி ஒதுக்கிடப்படுவதைப் போல கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள ஆரம்பப் பள்ளிக் கட்டிடங்களுக்கும் நிதி ஒதுக்கீடு செய்வதற்கு அனுமதி அளிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஆரம்பப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் ஆகியவற்றின் தரம் உயர்த்தப்பட வேண்டுமென்று சொன்னால் ரூபாய் ஒரு

இலட்சம் பொது மக்கள் நிதி வசூலித்து அரசுக்குக் கட்டினால் தான் பள்ளியின் தரத்தை உயர்த்துவதற்கு அப்பள்ளிகளுக்கு அனுமதி வழங்க வேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அந்த ஆணையின் காரணத்தால் பல்வேறு அரசு பள்ளிகள் தரம் உயர்த்தப்படாமல், மக்களுடைய தேவையை பூர்த்தி செய்யாமல் இருந்து கொண்டிருக்கின்றன. ஆகவே ஒரு இலட்சம் ரூபாயை அரசு பள்ளிகள் தரம் உயர்த்துவதற்காக கட்ட வேண்டும் என்ற நிபந்தனையை ரத்து செய்து அரசு பள்ளிகளின் தரத்தை உயர்த்திக் கொடுக்க அரசு முன்வர வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, சமீபத்திலே பெய்த பெரு மழையின் காரணமாக மாவட்டத்திலே இருக்கிற பல்வேறு பள்ளிக் கட்டிடங்கள் முழுவதுமாக இடிந்து போய் விட்டன. உதாரணத்திற்கு என்னுடைய குளச்சல் சட்டமன்றப் பேரவைத் தொகுதியில் உள்ள அனந்த நாடார் குடியிருப்பு என்ற பகுதியில் இயங்கிக் கொண்டிருக்கிற உயர்நிலைப் பள்ளிக் கட்டிடம் ஒன்று இடிந்து போய் விட்டது. அந்தப் பள்ளியின் கட்டிடத்தை கட்டிக் கொடுக்க இந்த அரசு முன்னுரிமை வழங்கி நடப்பு நிதியாண்டிலேயே நிதி ஒதுக்கீடு செய்யுமாறு நான் கேட்டுக் கொள்கிறேன்.

கடலோரப் பகுதியில் உள்ள மீனவர்களுக்கு வீடு கட்டித் தருகிற ஒரு திட்டத்தை இந்த அரசு இந்த நிதிநிலை அறிக்கையிலே கூறியிருக்கிறது. இரண்டாயிரம் வீடுகள் அவர்களுக்கு இலவசமாகக் கட்டிக் கொடுக்கப்பட வேண்டும் என்று அறிவித்திருக்கிறார்கள். அதை மனமார நான் பாராட்டுகிறேன். ஏனென்றால் கடலோரப் பகுதியில் இருக்க வீட்டு வசதியின்றி, வசிக்க இடமின்றி குடிசையில் வாழ்கின்ற அந்த மக்களுக்கு இந்த இலவச வீட்டுத் திட்டம் அவர்களுக்கு மிகப் பயனுடையதாக அமையும்.

முற்பகல் 10-10

குமரி மாவட்டத்தில் கடலோரப் பகுதியில் சமீபத்தில் பெய்த பெரு மழையின் காரணமாகவும், புயலின் காரணமாகவும், கடல் கொந்தளிப்பின் காரணமாகவும், சைமன் காலனி, முட்டம் போன்ற மீனவர் பகுதிகளில் நூற்றுக் கணக்கான வீடுகளை கடல் கொண்டு போய் விட்டது என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஆகவே, பாதிக்கப்பட்டவர்களுக்கு அதிகப்படியான வீடுகளைக் கட்டித் தருவதற்கு அரசு முன்வர வேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன். மீனவர்கள் கடலில் மீன்பிடித் தொழில் செய்கிற

1991 செப்டம்பர் 7] [திரு. ஆ. பாலையா]

போது மரணம் அடைந்து விட்டால் அவர்களுக்கு 15 ஆயிரம் ரூபாய் உதவித் தொகை கொடுக்கப்பட்டு வந்தது. இந்த நிதிநிலை அறிக்கையில் 15 ஆயிரம் ரூபாய் உதவி நிதியை 21 ஆயிரம் ரூபாய் ஆக உயர்த்தி அவர்களுக்கு வழங்கப்படும் என்கின்ற அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார்கள். அதேபோல, நெசவாளர்கள் இறந்து விட்டால் அவர்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் உதவி நிதி வழங்கப்பட்டு வந்தது. இந்த நிதிநிலை அறிக்கையில் அந்த உதவி நிதி ரூ. 15 ஆயிரமாக உயர்த்தப் பட்டுள்ளது. அதற்காக, அரசை நான் உளமார பாராட்டு கூறேன். அதேநேரத்தில் அரசின் கவனத்திற்கு நான ஒன்றைக் கொண்டு வர விரும்புகிறேன். பனை ஏறுகின்ற பன்னத் தொழில் செய்கின்றவர்கள் தமிழகத்தில் ஏராளமான பேர் இருந்து கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் பனை யேறும் தொழில் செய்யும்போது விபத்தில் மாட்டி இறந்து போய் விட்டால் அவர்களுக்கு ஐயாயிரம் ரூபாய் உதவி நிதி வழங்கப்பட்டு வந்தது. ஆனால் இந்த நிதிநிலை அறிக்கை யில் அவர்களுக்குக் கூடுதலாக உதவி நிதி வழங்குவதற்கு வழிவகை செய்யப்படவில்லை. அந்த பனையேறும் தொழி லாளர்களுக்கு உதவி நிதியை அதிகப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். பனையேறும் தொழிலைச் செய்கின்றவர்கள் மிக ஏழ்மையானவர்கள், வாழ வசதி யற்றவர்கள், துன்பத்தில் உழல்கின்றவர்கள், மேலும் பொருளாதாரத்தில், கல்வியிலே பின்தங்கியவர்கள், இருப் பதற்கு இடம் கூட இல்லாதவர்கள். அந்தப் பனையேறும் தொழிலாளர்கள் சமுதாயத்தை பின்தங்கியவர்கள் பட்டி யலிலிருந்து மாற்றி அவர்களுக்கும் சமுதாயத்திலே ஒரு நல்ல அந்தஸ்தை நல்ல நிலைமையைக் கொடுக்கிற வகையில் 'மிகப் பின்தங்கியவர்கள்' பட்டியலில் சேர்ப் பதற்கான வாய்ப்பை உருவாக்கிக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் படித்தும் வேலையற்றவர் கள் 32 லட்சத்து 44 ஆயிரம் பேர்கள் இருக்கிறார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வேலைவாய்ப்பு அலுவலகங்களில் அவர்கள் எல்லோரும் பதிவு செய்திருக்கிறார்கள். இவர் களுக்கு வேலை வாய்ப்பு கொடுப்பதற்கு என்ன திட்டங்களை தமிழ்நாடு அரசு வைத்திருக்கிறது என்பதை இந்த நிதிநிலை அறிக்கையில் சொல்லவில்லை. தமிழ் நாட்டின் எல்லா மாவட்டங்களிலும் இருக்கிற முதுகலை பட்டதாரிகள் அனைவரும், சென்னையிலே வந்துதான் வேலை வாய்ப்புக் காக அவர்களுடைய பெயரைப் பதிவு செய்ய வேண்டுமென்ற நிலைமை இப்போது இருக்கிறது. சென்னையிலே இருக்கிற அந்த 'முதுகலைப் பட்டதாரிகளுக்கான வேலை வாய்ப்பு

அலுவலகம் 'தான் தமிழகம் முழுமைக்கும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதனாலே ஏற்படுகிற வேலைப் பளுவின் காரணமாக வேலை வாய்ப்பு அலுவலகத்திலே தமிழகம் முழுவதும் இருந்து வருகிற முதுகலைப் பட்டதாரிகள் பதிவு செய்ய முடியாத நிலைமை இருக்கிறது. அந்த நிலைமையைப் போக்குவதற்கும், வேலைப் பளுவைக் குறைப்பதற்கும், மதுரையை மையமாகக் கொண்டு, முதுகலைப் பட்டதாரிகள் தங்களுடைய பெயர்களை பதிவு செய்வதற்கு புதிய வேலை வாய்ப்பு அலுவலகம் ஒன்றை அமைக்க வேண்டுமென்று தமிழக அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 10-15

எங்களுடைய நீண்டநாள் கோரிக்கையாக இருப்பது கல்குளம் தாலுகாவை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்பதாகும். இது மிகப் பெரிய தாலுகா. இந்தப் பிரச்சினை நீண்டகாலமாக இந்த சட்டசபையில் பேசப்பட்டு வந்திருக்கிறது. முந்தைய அரசு இந்தத் தாலுகாவை பிரிப்பதில் சில இடையூறுகளைச் செய்தது. அவர்கள் சொன்னார்கள், "1991-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது; ஆகவே இந்தப் பிரச்சினையை இப்போது பரிசீலிக்க முடியாது" என்று சொன்னார்கள். கல்குளம் தாலுகாவை இரண்டாகப் பிரிக்கிற கோரிக்கை நீண்டகாலமாக அரசினுடைய பார்வைக்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது. கல்குளம் தாலுகாவை இரண்டாகப் பிரித்து இரணியல் தாலுகா என்ற தாலுகா அமைப்பை ஏற்படுத்த வேண்டும். அதற்கு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கேரளத்திலிருந்து கன்னியாகுமரி மாவட்டம் பிரிகிறபோது இரணியல் தாலுகா என்ற அமைப்புக்கு அன்றைய கேரள அரசு அனுமதி அளித்து இருந்தது. அந்த நேரத்தில் தான் குமரி மாவட்டம் நம்முடைய தாய் தமிழகத்துடன் சேரக்கூடிய நிலைமை ஏற்பட்டது. அன்றிலிருந்து இந்தக் கோரிக்கை அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டு வந்திருக்கிறது. எத்தனையோ தாலுகாக்கள் பிரிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கிற இந்தத் தாலுகா பிரிவினைக்கு மட்டும் அரசு ஏன் காலம் கடத்துகிறது என்று அறிய விரும்புகிறேன். ஆகவே, கல்குளம் தாலுகாவை இரண்டாகப் பிரித்து இரணியல் தாலுகா என்ற புதிய தாலுகாவை உருவாக்கித் தர வேண்டுமென்று தமிழக அரசை கேட்டுக் கொள்கிறேன்.

மின் இணைப்பு கொடுப்பதற்கு இந்த வரவு-செலவுத் திட்டத்தில் விளக்கமாக குறிப்பிட்டிருக்கிறார்கள். புதிதாக மின் இணைப்பு கொடுப்பதற்கு, 40,000 மின் இணைப்பு

கொடுப்பதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. இதை நான் பாராட்டுகிறேன். அதே நேரத்தில் இதில் சில பிரச்சினைகள் இருக்கின்றன என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வர ஆசைப்படுகிறேன். மின்சார இலாகா மின் இணைப்பு கொடுப்பதில் பல்வேறு பிரச்சினைகளை, சங்கடங்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. அவர்கள் மின் கம்பிகள் இல்லை, மின் கம்பங்கள் இல்லை, உதிரி பாகங்கள் இல்லை என்ற நிலையை எடுத்து வைக்கிறார்கள். அதன் காரணத்தால் மின் இணைப்பு கொடுப்பதில் நீண்டகாலமாக பல பிரச்சினைகள் இருந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, இந்தப் பிரச்சினைகளுக்கு அரசு வழி காண வேண்டும். உடனடியாக மின் இணைப்பு கொடுப்பதற்கான ஆக்கபூர்வமான உத்தரவை மின் இலாகாவிற்கு கொடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர்களோடு உறுப்பினர்கள் பேசுகிறபோது இருக்கையில் உட்கார்ந்து பேசலாமே தவிர, இருக்கையிலிருந்து எகிறி பேசக்கூடாது. அதைப்போல இந்தப் பகுதியிலிருந்து அமைச்சர்களோடு பேசுகிறவர்கள் அமைச்சர்களின் பின் இருக்கையில் வந்து உட்கார்ந்து அமைச்சர்களிடத்தில் ஏதாவது பேசலாமே தவிர, ஒரே இடத்தில் நின்று கொண்டு பேசுவதையும் உறுப்பினர்கள் தவிர்க்க வேண்டும்.

முற்பகல் 10—20

திரு. ஆ. பாலையா : தலைவர் அவர்களே, இந்த நிதி நிலை அறிக்கையில் தெரு விளக்குகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்ற ஒரு அறிவிப்பை வெளியிட்டு இருக்கிறார்கள். தெரு விளக்குகளைப் பொறுத்தவரையில் ஊராட்சிகள், பேரூராட்சிகள், நகராட்சிகள் இவைகள் எல்லாம் தெரு விளக்குகள் அமைப்பதற்காக மின் வாரியத்துக்கு பணம் கட்டி பல வருடங்களாகியும் தெரு விளக்குகள் போடப்படாமல் காலம் தாழ்த்தப்படுகிறது. இந்த நிலை ஏன் ஏற்படுகிறது என்று கேட்டால் மின் இலாகாவினர் சொல்கிற பதில், எங்களிடம் உதிரி பாகங்கள் இல்லை, கம்பிகள் இல்லை என்பதாகும். அதைத்தான் அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த நிலையை மாற்றுவதற்கு அரசு நிச்சயமாக முன்வந்து உடனடியாக பஞ்சாயத்துகள், நகரப் பஞ்சாயத்துகள், நகராட்சிகளுக்கு தெரு விளக்குகள் போடுவதற்கு உரிய ஆணைகளை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நேசமணி போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்தவரையில் சில வருடங்களாகப் புதிய பேருந்துகள் விடப்படவில்லை என்பதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். அதே போல் டீசல் தட்டுப்பாட்டின் காரணமாக 25 சதமான பஸ்கள் நிறுத்தப்பட்டு இருக்கின்றன என்பதையும் இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். தற்போது டீசல் தட்டுப்பாடு இல்லை என்று சொல்கிறார்கள். இந்த டீசல் தட்டுப்பாடு இல்லாத நேரத்தில், நிறுத்தப்பட்ட பஸ்களையாவது உடனடியாக விடுவதற்கு அரசு முன்வருமா, அதற்கு ஆணை பிறப்பிக்குமா என்று நான் கேட்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பத்து சதவீதம் டீசல் கட்டுப்பாட்டை நிர்ணயித்தது மத்திய அரசுதானே தவிர, நாமல்ல. எனவே அங்கேயிருந்து உத்தரவு வருமானால், அடுத்த நிமிடமே நம்முடைய அரசின் அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களிலும் நிறுத்தப்பட்ட பேருந்துகள் இயக்கப்படும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆ. பாலையா : ஒரு நெருக்கடியான காலகட்டத்தில் இந்த டீசல் தட்டுப்பாடு ஏற்பட்டது. இப்போது டீசல் தட்டுப்பாட்டுக்கு எந்த விதமான நெருக்கடியும் இல்லை என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஆகவே மத்திய அரசுதான் டீசல் தட்டுப்பாட்டை ஏற்படுத்துகின்றது என்கிற ஒரு நிலையினை அமைச்சர் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். மத்திய அரசு அந்த நிலையில் இல்லை என்பதை உங்களுக்குத் தெளிவாகச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

புதிய பேருந்துகள் விடுவதற்கு இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? புதிய வழித்தடங்களில் பேருந்துகள் விடுவதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது? இதிலே அரசு என்ன செய்யப்போகிறது?

தமிழகத்திலே பெண் ஓட்டுநர் என்கிற பெருமையை ஒருவர் பெற்றிருக்கிறார் என்று சொன்னால், அது எங்கள் மாவட்டத்தில்தான். கன்னியாகுமரி மாவட்டத்திலே வசந்தகுமாரி என்கிற ஒரு இளம் பெண் ஓட்டுநருக்கு உரிய உரிமங்கள் அனைத்தும் பெற்றவர், முந்திய அரசாலே நேர்முகத் தேர்வுக்கு

1991 செப்டம்பர் 7] [திரு. ஆ. பாலையா]

அடிமைக்கப்பட்டு நியமனம் செய்வதற்காக முடிவு செய்யப்பட்ட நேரத்தில் அந்தப் பெண் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர் என்கிற காரணத்தாலே அந்தப் பெண் ஓட்டுநருக்கு வேலை கொடுப்பதற்கு அன்றைய அரசாங்கம் முன்வரவில்லை. நான் இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன். தமிழகத்திலே இருக்கிற ஒரே பெண் ஓட்டுநர், அந்தப் பெண் ஓட்டுநருக்கு வேலை கொடுப்பதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறதா........

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேர்வு செய்வதற்கு முன்னால், அந்தப் பெண் ஓட்டுநருடைய கோப்பு என்னிடத்திலே இன்றைக்கு வந்திருக்கிறது. அவர்கள் 156 சென்டி மீட்டர் உயரம் இருக்கிற காரணத்தால், அவர்களைத் தேர்வு செய்ய முடியவில்லை என்ற நிலையை நம்முடைய துறைச் செயலாளர் அவர்கள் நமக்குத் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, குறிப்பாக 160 சென்டி மீட்டர் உயரம் இருந்தால்தான் அவர்களைத் தேர்வு செய்ய முடியும் என்ற நிலையை அரசு வகுத்து இருக்கிற காரணத்தால்தான் அவர்களைத் தேர்வு செய்ய முடியவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : துணைத் தலைவர் அவர்களே, 160 சென்டி மீட்டர் என்பது ஆண்களுக்கு விதிக்கப்பட்டு இருக்கிற உயரம். பொதுவாக ஆண்களைக் காட்டிலும் பெண்கள் உயரம் குறைவாகத்தான் இருப்பார்கள். எனவே விதியைத் தளர்த்தி, 4 சென்டி மீட்டர்தான் குறைவு என்று சொன்னால், இரண்டு இன்ச் கூட வரவில்லை. எனவே, விதியைத் தளர்த்தி, பெண்கள் நிறையப் பேர்களுக்கு வேலை கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையில், நாம் விதியைத் தளர்த்தி, அவர்களுக்கு எல்லாம் வேலை கொடுக்க வேண்டும். வேலை கொடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். உயரம் குறைவாக இருந்தால், அவர்கள் அந்த இருக்கையில் அமர்ந்து கொண்டு இருக்கும்போது தொலை நோக்கு, தூரத்துப் பார்வை அவர்களுக்குத் தெரியாது என்கிற அடிப்படையில் அரசு வகுத்து இருக்கிற முறை 160 சென்டி மீட்டர் இருப்பவர்கள் தான் அந்த இருக்கையில் அமர்ந்து கொண்டு ஓட்டுநராக

பேருந்தை ஓட்டுகின்ற நேரத்தில் தொலை நோக்காக, தூரத்துப் பார்வையில் வருகின்றவர்களைப் புரிந்து கொண்டு, அதை இயக்க முடியும் என்ற காரணத்தால்தான் அந்த விதியைத் தளர்த்த முடியவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலையா அவர்கள் தொடர்ந்து பேசலாம்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அமைச்சர் அவர்கள் விளக்கம் சொன்னதற்குப் பிறகு வேறு எதுவும் வேண்டாம். (குறுக்கீடு) பிறகு பேசலாம். இதை ஏன் விவாதமாகக் கொண்டு போகிறீர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கத்தைச் சொல்லி விட்டார்கள். நீங்கள் வேறு ஏதாவது கேட்க வேண்டுமானால், எழுதிக் கொடுங்கள்.

உறுப்பினர் திரு. ஆ. பாலையா தொடர்ந்து பேசலாம்.

முற்பகல் 10-25

திரு. ஆ. பாலையா : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தப் பெண் ஓட்டுநரை நேர்முகப் பேட்டிக்கு அழைக்கின்ற போது, பாயிண்ட் 8 சென்டி மீட்டர்தான் உயரம் குறைவாக இருக்கிறது என்று அதிகாரிகள் அன்றையதினம் குறிப்பிட்டார்கள். அதன் காரணத்தால்தான் மறுக்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். நான் சொல்வதெல்லாம், இந்த அரசு, தாய்க்குலத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற அரசு. அவர்களுடைய நலனில் நாட்டம் கொண்ட அரசு. இந்த மாநிலத்திலே ஒரேயொரு பெண் ஓட்டுநர் இருக்கின்றார். அவருக்கு அரசு ஆணையிலிருந்து தளர்வு கொடுத்து சிறப்பாக ஒரு முன் உதாரணமாக அந்தப் பெண்ணுக்கு ஓட்டுநர் வேலைவாய்ப்பு கொடுக்க வேண்டுமென்று நான் மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், எங்களுடைய மாவட்டத்தில் ஆசாரிப்பள்ளத்திலே அரசு காச நோய் மருத்துவமனை ஒன்று இருக்கிறது. இந்தக் காச நோய் மருத்துவமனை பராமரிப்பின்றி, பழுதுபட்டு, பாழடைந்து கிடக்கின்ற ஒரு நிலைமையிலே இருந்து கொண்டிருக்கிறது. அந்தக் காச நோய் மருத்துவமனை அமைந்திருக்கின்ற நிலப் பரப்பினுடைய பரப்பளவு சுமார் 130 ஏக்கரா. இப்போது காச நோய் கட்டுப்படுத்தப்பட்ட காரணத்தினாலே வெளி நோயாளிகளும், உள் நோயாளி

1991 செப்டம்பர் 7] [திரு. ஆ. பாலையா]

களும் அதிகமாக அந்த மருத்துவமனைக்கு வருவது இல்லை யென்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அந்த ஆசாரிப்பள்ளம் மருத்துவமனை இருக்கின்ற இடத்திலே மருத்துவக் கல்லூரி ஒன்றினை அமைத்துத் தருவதற்கு மாண்பு மிகு தமிழக முதல்வர் அவர்கள் அனுமதி வழங்க வேண்டுமென்று நான் வேண்டி விரும்பி இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இன்னும் ஒரேயொரு நிமிடத்தில் முடிக்க வேண்டும்.

திரு. ஆ. பாலையா : எங்களுடைய மாவட்டத்தில் குடிநீர்த் தட்டுப்பாடு அதிகமாக இருந்துகொண்டிருக்கிறது. ஊராட்சிகள், பேரூராட்சிகள், நகராட்சிப் பகுதிகளிலே பல்வேறு குடிநீர்த் திட்டங்கள் போட்டும் இன்றுவரையிலே செயல்பட முடியாமலே இருந்து கொண்டிருக்கிறது. இது எதனால் ஏற்பட்டிருக்கிறது என்பதை எங்களாலே புரிந்து கொள்ள முடியவில்லை. குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகளைச் சந்தித்துக் கேட்கிறபோதெல்லாம் விரைவிலே முடிந்துவிடும், விரைவிலே முடிந்துவிடும் என்று சொல்கிறார்களே தவிர, அந்தத் திட்டத்தை முடிப்பதற்கான எந்த நடைமுறைகளையும் அவர்கள் எடுப்பதாகத் தெரியவில்லை. உதாரணத்திற்கு நான் ஒரு கருத்தை இங்கே வலியுறுத்த ஆசைப்படுகிறேன். குளச்சல் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட குறும்பணை மீனவர்கள் கிராமத்திற்குப் பல ஆண்டுக்காலமாக குடிநீர் வழங்கப்படாமல் இருந்து வருகிறது. அங்கே குடிநீர்த் தட்டுப்பாடு என்பது, வறட்சிக் காலமாக இருந்தாலும் சரி, மழைக் காலமாக இருந்தாலும்சரி, தொடர்ந்து குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுக் கொண்டிருக்கின்ற ஒரு நிகழ்ச்சியாகும். அங்கே ரூ. 7 இலட்சத்திற்குக் குடிநீர்த் திட்டம் ஒன்றுக்குக் குடிநீர் வடிகால் வாரியம் அனுமதி வழங்கியிருக்கிறது. வருடங்கள் பலவாகியும் அந்தத் திட்டம் இதுவரையிலும் நிறைவேற்றப் படவில்லை என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவதோடு, அதனை உடனடியாக முடித்துக் கொடுப்பதற்கு அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

குழித்துறை ஆற்றிலே கூட்டுக் குடிநீர்த் திட்டம்—சுமார் ரூ. 4 கோடிக்கு அதிகமான அந்தத் திட்டம்—இன்னும் செயல்பட முடியாமல் இருந்துகொண்டிருக்கிறது. அந்தத் திட்டம் விளவங்கோடு பகுதி, கிள்ளியூர் பகுதி, குளச்சல் பகுதி ஆகிய மூன்று தொகுதிகளுக்கும் சம்பந்தப்பட்ட ஒரு திட்டம். அந்தத் திட்டம் பல ஆண்டுகளாகியும் இன்னும் முடிக்கப்படாமல் இருக்கிறது.

அந்தத் திட்டத்தை முடித்து, அவர்கள் குறிப்பிட்ட பகுதிகளுக்கு அந்தப் பாதுகாக்கப்பட்ட குடிநீரை வழங்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே அரசை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொண்டு, இந்த நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்து, முடித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. வி.கே. சின்னசாமி அவர்கள்.

*திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள இந்த நிதிநிலை அறிக்கையைப் பாராட்டி, வரவேற்று என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். நம்முடைய மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கிற இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் கருத்துக்களையும், கோட்பாடுகளையும் உள்ளடக்கிய இந்த நிதிநிலை அறிக்கையில் பேசுகிற வாய்ப்பினைப் பெற்றமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து, நம்முடைய தமிழகத்தினுடைய முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கிற புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்கு நிதிநிலை அறிக்கையிலே கூறப்படாத ஒரு நல்ல காரியத்தை, மிகப் பெரிய ஒரு காரியத்தைச் செய்து வருகிறார்கள்.

பொது மக்களிடமிருந்து பணத்தை நன்கொடையாகப் பெற்று, தமிழகத்திலே இருக்கிற அனைத்துக் கோயில்களை, நிதி ஆதாரம் இல்லாத கோயில்களை எல்லாம் பராமரித்து, புதுப்பிப்பேன் என்ற ஒரு உறுதி மொழியை எடுத்துக் கொண்டு, வழிபாடற்ற பல தெய்வங்களை மக்கள் இன்னும் நல்ல முறையில் வழிபாடு செய்வதற்காக நல்லதொரு மிகப் பெரிய காரியத்தை, பெரியவர்களும், தெய்வபக்தி உள்ளவர்களும் போற்றுகிற மிகப் பெரிய காரியத்தைச் செய்து வருகிறார்கள். அதை இன்றைக்குத் தமிழகம் மட்டுமல்ல, இந்தியத் துணைக் கண்டத்திலே மட்டும் அல்லாது உலகத்திலே இருக்கிற அனைத்து தெய்வ பக்தி நிறைந்தவர்களும் பாராட்டுகிறார்கள், போற்றுகிறார்கள். அதே அடிப்படையில் நாம் தினந்தோறும் பத்திரிகைகளில் பார்க்கிறோம். ஒவ்வொருவரும் லட்சக்கணக்கான ரூபாய்களை நிதியாகத் தருகிறார்கள், நன்கொடையாகத் தந்து கொண்டிருக்கிறார்கள். நான் மாண்புமிகு துணைத் தலைவர் மூலமாகத் தெரிவிப்பது, நம்முடைய இந்தச் சட்டமன்றத்திலே சட்டமன்ற உறுப்பினர்கள் நம்முடைய ஒரு மாத

1991 செப்டம்பர் 7] [திரு. வி. கே. சின்னசாமி]

சம்பளத்தை முதலமைச்சருடைய கோயில் பராமரிப்பு நிதிக்கு நன்கொடையாகத் தருவதற்கு முன்வரவேண்டும் என்பதை இந்த நேரத்திலே பணிவன்போடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்கு இந்தச் சட்ட மன்றத்திலேயே ஒரு தீர்மானமாகப் போட்டு அனைத்துச் சட்ட மன்ற உறுப்பினர்களும் ஒத்துழைப்பு தந்து, தமிழகத்தினுடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் மேற்கொண்டிருக்கிற இந்த முயற்சியில், இந்தக் கோயில் பராமரிப்பு நிதிக்கு, சட்டமன்றம் மட்டுமல்ல; நாடாளுமன்ற உறுப்பினர்களும் சேர்ந்து—தமிழகத்தைப் பொறுத்த மட்டில்—அனைவரும் ஒரு மாத சம்பளத்தைக் கொடுப்பதற்கு முன் வரவேண்டும். என்னுடைய சம்பளத்தைக் கொடுப்பதற்கு நான் இன்றைக்கே தயார் என்பதையும் இந்த நேரத்திலே பணிவோடு தெரிவித்துக் கொண்டு, ஆக இப்படிப்பட்ட கோயில்களைப் பராமரிக்கின்ற நம்முடைய புரட்சித் தலைவி அவர்களுக்கு இலங்கை விடுதலைப் புலிகளால் மட்டும் அல்ல; வேறு யாரும் சதித் திட்டங்களைத் தீட்டினாலும், நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களை எள் அளவும் அசைக்க முடியாது. அவர்கள் நீண்ட நெடுங்காலம் வாழ்ந்து தமிழக மக்களுக்கும், மற்றும் இந்தியத் துணை கண்டத்திற்குமே வழி காட்டியாக வாழ்வார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே பணிவன்போடு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்று, கோயில்களுக்குப் பல ஆயிரக்கணக்கான சொத்துக்கள் இருக்கின்றன. கோடிக்கணக்கான சொத்துக்கள் பூமிகளாகவும், பல வகையான சொத்துக்களாகவும் இருக்கின்றன. குறிப்பாக இந்தப் பூமிகளையெல்லாம் பல்வேறு வசதி படைத்தவர்கள் கூறுகளாகப் போட்டு குடும்பத்திலே இருக்கின்றவர்களை வைத்து பினாமியாக அனுபவித்து வருகிறார்கள். வருடா வருடம் ஏலம் விடுவதாகக்கூட அறிக்கை விடுகிறார்கள். ஆனால் ஏலம் விடுவது இல்லை. அவர்களே ஒரு குறிப்பிட்ட தொகையை நிர்ணயம் செய்து, அந்த நிலங்களை அவர்களே அனுபவித்து வருகிறார்கள். ஆகவே எமர்ஜென்சியாக ஒரு அவசர உத்திரவைப் போட்டு அந்த நிலங்களையெல்லாம் கோயில்களுக்கே அரசாங்கம் கையகப்படுத்தி அவற்றைக் கோயில்களுக்கே தந்து, கோயில்களைப் பராமரிப்பதற்கு அவற்றையும் நன்கு பயன்படுத்த வேண்டும் என்பதை இந்த நேரத்திலே நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டும் அல்லாமல் இன்றைக்கு முறைசாராக் கல்வி என்ற ஒரு மிகப் பெரிய திட்டத்தை இங்கே அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். நாம் சிறிது எண்ணிப் பார்க்க வேண்டும். ஒரு நாடு விவசாயத் துறையிலோ அல்லது

தொழில் துறையிலோ முன்னேறினால் கூட, உலக அரங்கில் ஒரு நாடு முன்னேறியதாக ஒரு கணக்கு இருக்குமேயானால் அது அந்த நாட்டிலே இருப்பவர்கள் எத்தனை பேர் படிப்பு அறிவிலே உயர்ந்திருக்கிறார்கள் என்பதை வைத்துத்தான் ஒரு நாட்டினுடைய முன்னேற்றத்தைக் கணக்கிடுகிறார்கள். அப்படிப் பார்க்கும்போது 5 ஆம் கிளாஸ் படித்து முடித்து 8 ஆம் கிளாஸ் படிக்கின்ற மாணவர்களுக்கு 100 ரூபாய் பணமும் கொடுத்து, அவர்களுக்கு ஆசிரியர்களை நியமித்து படிக்கின்ற வாய்ப்பை உருவாக்கித் தந்திருக்கிறார்கள்.

அது மட்டும் அல்ல, தொடர்ந்து அவர்கள் பிளஸ் 2 வரைக்கும் படித்து, அவர்கள் வேலைக்குச் செல்ல வேண்டும், அரசாங்கத்தினுடைய சலுகைகளைப் பெற வேண்டும் என்ற அடிப்படையிலே, அடி மட்டத்திலே இருக்கின்றவர்கள், குறிப்பாகக் கிராமப் பகுதியிலே இருக்கின்ற தாழ்த்தப்பட்ட அரிசன மக்களுக்கு இது ஒரு மிகப் பெரிய வரப்பிரசாதமாக அமையும் என்பதை இந்த நேரத்திலே நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். எட்டாம் கிளாஸ் வரைக்கும் படித்த மாணவர்களை, மாதத்திற்கு 100 பேர்களாகத் தேர்வு செய்து அவர்களுக்கு ஊக்கத் தொகையாக ஆயிரம் ரூபாய் கொடுத்து, அவர்களைப் படிப்பறிவிலே உயர்த்துவதற்கு நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் முன் வந்திருக்கிறார்கள் என்றால் உண்மையிலேயே அவர்கள் புரட்சித் தலைவரையும் மிஞ்சி, புரட்சித் தலைவி அவர்கள் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நினைவு படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்று, கோவையிலே இரண்டு நாட்களுக்கு முன்பு ஏற்பட்ட மிகப் பெரிய சாதிக் கலவரம். நான் 1977லிருந்து சட்டமன்ற உறுப்பினராக இருந்திருக்கிறேன். இப்படிப்பட்ட சாதிக் கலவரங்கள் நடைபெறுகின்றன என்றால் உயர் அதிகாரிகள், போலீஸ் இலாகாவிலே இருக்கின்ற உயர் அதிகாரிகள்தான் அந்த இடத்திற்குச் செல்லுவார்கள். அங்கே நடக்கின்ற நடைமுறைகளைக் கவனித்து அதற்கு பதில் நடவடிக்கை எடுப்பார்கள்.

முற்பகல் 10—35.

ஆனால் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வரலாற்றிலே சிறப்பு பெறுகின்ற வகையிலே அந்த மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சர்களையும், சட்டமன்ற உறுப்பினர்களையும் நேரடியாகக் கோவைக்கு அனுப்பி வைத்து அங்கே மாவட்ட ஆட்சியரிடத்திலே ஒரு சமாதானக் கமிட்டியை உருவாக்கி நேற்றைக்கு, இன்று நடைபெறவேண்டியிருந்த இந்து முன்னணியினுடைய ஊர்

வலத்தைக் கூட வாபஸ் பெற்று அவர்கள் ஒரு நல்ல முடிவு எடுத்திருக்கிறார்கள். அந்த அளவிற்கு இன்றைக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பதைக் குறித்து நாம் உண்மையிலேயே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இன்னொன்று குறிப்பிட விரும்புகிறேன். எனக்குக் கிடைத்த செய்தி. **

டாக்டர் தே. குமாரதாஸ் : இல்லாத ஒன்றை ஏன் சொல்கிறார்? அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் ஒரு கட்சியைக் குறிப்பிட்டுக் குற்றம் சாட்டுவதைத் தவிர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. ஜி. பழனிசாமி : துணைத் தலைவர் அவர்களே....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவைக் குறிப்பில்ருந்து நீக்கப்பட்டதற்குப் பின்பு மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் தொடர்ந்து பேசுவது முறையல்ல.

திரு. வி. கே. சின்னசாமி : ** அதைத் தடுக்கின்ற வகையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதையும் இந்த நேரத்தில் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் குமாரதாஸ் அவர்கள் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். அந்த விஷயம் முடிவுக்கு வந்து விட்டது. அதைத் தொடர்ந்து நீங்கள் விவாதப் பொருளாக ஆக்குவது சரியாக இருக்காது. தயவு செய்து அமர வேண்டும்.

---

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

திரு. கே. பி. ராஜு: துணைத் தலைவர் அவர்களே, விடுதலைப் புலிகளே இல்லை என்று சொன்னார்கள். என்ன ஆயிற்று?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் ராஜு அவர்கள் தயவு செய்து அமர வேண்டும். மாண்புமிகு உறுப்பினர்கள் ஒன்றைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

நேரடியாக ஒரு உறுப்பினர் மற்றொரு உறுப்பினரோடு இந்த அவையிலே பேசுவது கூடாது. அது மரபு அல்ல என்பதை உணர்ந்து நடந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் குமாரதாஸ் அவர்களுடைய கருத்து ஏற்கப்பட்டு அவைக் குறிப்பிலிருந்து அந்தச் சொற்றொடர் நீக்கப்பட்டிருக்கிறது. அதற்கு பின்பும் தொடர்ந்து பேச முற்படுவது சரியல்ல.

திரு. வி. கே. சின்னசாமி: பல ஊராட்சி மன்றங்களில் இருக்கின்ற நிதியாதாரங்களைப் பயன்படுத்துவதற்கு தற்சமயத்திலே தடை விதித்து இருப்பதாக எனக்கு தகவல் கிடைத்திருக்கிறது. நான் பல ஊர்களுக்குச் செல்கின்ற நேரத்தில் அந்த ஊராட்சியிலே இருக்கின்ற மக்கள் பல பணிகளைச் செய்ய வேண்டும் என்று சொல்கின்ற நேரத்தில் இதைப்பற்றிச் சொல்கிறார்கள். ஆகவே ஊராட்சி மன்றங்களுடைய நிதிகளைப் பயன்படுத்துவதற்கு அந்தந்த மாவட்ட ஆட்சியர் அல்லது ஊராட்சி மன்றங்களுடைய தனி அலுவலராக இருக்கின்ற வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கு அதிகாரங்கள் உடனடியாக வழங்கப்பட வேண்டும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு விளக்கு திட்டம் என்பது தற்சமயம் ஊராட்சி மன்றங்களுக்கு மட்டும் தான் இருக்கிறது. அது நகரப் பஞ்சாயத்துக்களுக்கு இல்லை. நகரப் பஞ்சாயத்திலே கூட ரூரல் டவுன் பஞ்சாயத்து, கிராம நகரப் பஞ்சாயத்து, நகரப் பஞ்சாயத்து என்று பிரித்து வைத்திருக்கின்றோம். அந்த நகரப் பஞ்சாயத்து அல்லது கிராம நகரப் பஞ்சாயத்துக்களுக்கு இந்த ஒரு விளக்குத் திட்டத்தை அமல்படுத்த வேண்டும் என்பதை இந்த நேரத்திலே பணிவோடு கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக இந்த ஊராட்சி மன்றங்களில் குளம் ஏலம் விடுதல், குளத்திலே இருக்கின்ற மணல் ஏலம் விடுதல் அல்லது மரங்களை வெட்டுவதற்கு ஏலம் விடுகிறார்கள். அப்படி ஏலம் விடுகின்ற நேரத்தில் அந்தப் பணம் ஒரு ஆண்டு, இரண்டு ஆண்டுகள் முடிந்து கூட அந்த ஊராட்சி மன்றங்களுக்கு வந்து சேர்வது இல்லை. குறிப்பாக என்னுடைய பெரியார் மாவட்டத்தில் எலத்தூர் பேரூராட்சிக்கு உட்பட்ட வனத்துறையிலி

ருந்து மரம் ஏலம் விட்டார்கள். 1989லே ஏலம்விட்ட அந்தப் பணம் சீஃப் கன்சர்வேட்டார் ஆபீசிலிருந்து அதாவது வனத் துறைத் தலைவர் அலுவலகத்திலிருந்து அந்தப் பணம் இன்னும் அந்த ஊராட்சி மன்றத்திற்கு வரவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல காவளிவளையம் ஊராட்சி மன்றத்தில் மரம் ஏலம் விட்ட தொகையும் அந்த ஊராட்சி மன்றத்திற்கு வந்து சேராமல் இருக்கிறது. இவை எல்லாம் விரைவாக வந்து சேரவேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். (மணி யடிக்கப்பெற்றது).

சிறு சேமிப்புப் பத்திரங்கள் மூலமாக மத்திய அரசாங்கம் நிதி திரட்டுகிறது. அந்த நிதியினுடைய 25 பங்கை மத்திய அரசு எடுத்துக் கொள்கிறது. 75 சதவிகிதம் மாநில சர்க்காருக்குக் கடனாகத் திருப்பித் தருகிறார்கள். ஆகவே அது குறித்துக் கூட இன்றைக்கு நிதி அறிக்கையில் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தந்திருக்கிறார்கள். ஆகவே தமிழக அரசு அதிகாரிகளால் திரட்டப்படுகிற சிறு சேமிப்பு நிதி முழுவதும் தமிழக அரசுக்கே என்று ஒப்படைக்க வேண்டும். அப்படி ஒப்படைத்தால்தான் அதிகமாக நிதிகளை வசூல் செய்கின்ற வாய்ப்பும் அதைத் தருகின்ற மக்களுக்கு நல்ல பயனும் ஏற்படும். ஆக இன்றைக்கு ஆயிரம் கோடி தமிழகத்திலே வசூல் என்றால் அதை மாநில சர்க்காரே முழுவதுமாகப் பயன்படுத்த வேண்டும் என்ற அதிகாரத்தைத் தருவார்களேயானால் நிச்சயமாக அது 2,000 கோடி வரை எட்டும் என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 10-40

பொது மக்களுக்குச் சிறந்த முறையில் பணியாற்றுவதற்குப் பல சீர்திருத்தங்களை மாவட்ட, வட்ட அளவில் செய்து இருக்கிறீர்கள், அது குறித்தும் இந்த நேரத்தில் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நாட்டினுடைய நிர்வாக நிலைமைகளைப் பொறுத்தமட்டில் இன்றைக்கு மிகப் பெரிய பொருளாதார நிலவரம் குறித்த அதிகாரங்கள் பல மத்திய அரசின் பொறுப்பில் உள்ளன. என்றாலும் மாநில அரசுகளுக்கும் அவற்றைப் பொறுத்து மிகுந்த அக்கறை ஏற்பட நியாயம் உள்ளது. எனவேதான் இந்தியாவின பாதுகாப்புக்குத் தேவையான அதிகாரங்கள் மத்திய அரசின் கூட்டாட்சியின இடத்திலே வைப்பதற்கும் மக்களை வாழ வைப்பதற்குத் தேவையான அதிகாரங்கள் அனைத்தையும் மாநில அரசுகளிடத்திலே அமைய வேண்டும் என்ற கருத்தை இங்கே குறிப்பிட்டு இருக்கிறீர்கள். இன்றைக்கு மிகப் பெரிய வல்லரசு நாடுகளில் ஒன்றான சோவியத் ரஷ்யாவில் கூட மிகப்பெரிய மாற்றங்கள் இன்றைக்கு உருவாகிக் கொண்டிருக்கின்றன. இந்த நிலையில் நம்முடைய மத்திய அரசு நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சருடையகருத்துகளைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும், மாநிலங்

களுக்கு அதிக அதிகாரங்கள் தரவேண்டும என்பதைப் பரிசீலித்து நல்ல முடிவு எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நீதித்துறையில் ஒரு சின்ன கருத்து. மாவட்ட முனிசீப்புகள், மாஜிஸ்டிரேட்டுகளாக இருப்பவர்கள் 3 ஆண்டுக் காலம் அங்கே பணியாற்றலாம் என்ற ஒரு உத்தரவு இருக்கிறது. இதில் என்ன நடைபெறுகிறது என்றால் எல்லோரையும் நான் சொல்லவில்லை, ஒருசில இடங்களில் அப்படிப் பணியாற்றுகின்றவர்கள் தவறு செய்தால்கூட அதைத் தட்டிக் கேட்க முடியாத ஒரு அவல நிலை ஏற்படுகிறது. குறிப்பாக பலயிடங்களில் அப்படி ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இப்போது தாசில்தார்களும் மாஜிஸ்டிரேட் அந்தஸ்த்து பெற்று இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு அரசு அதிகாரி 3 ஆண்டுக்கு அங்கே இருக்க வேண்டுமென்ற ஒரு நடைமுறை இருந்தாலும், சட்டம் இருந்தாலும் கூட, அந்தக் குறிப்பிட்ட அதிகாரி தவறு செய்தால் அரசு நடவடிக்கை எடுக்கலாம் என்று விதி இருக்கிறது. குறிப்பிட்ட அதிகாரி ஏதாவது தவறு செய்திருந்தால் அரசின் கவனத்திற்கு, சம்பந்தப்பட்ட துறைக்கு, அது நீதித்துறையாக இருந்தாலும் சரி, வேறு எந்தத் துறையாக இருந்தாலும், சரி சம்பந்தப்பட்ட அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால் அந்த அதிகாரி நிச்சயமாக மாற்றி அமைக்கப்படுவார், அவர் குற்றம் செய்து இருந்தால் சட்ட ரீதியான தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சத்தியமங்கலம் மாவட்ட முனிசீப் கோர்ட்டில் கூட வழக்கறிஞர்கள் எல்லாம் அந்த முனிசீப் அவர்கள் கூட ஒருசில நேரங்களில் ஒத்து வராமல் சில தவறுகள் செய்கின்ற காரணத்தை முன்னிட்டு அவர்கள் ஹைகோர்ட்டுக்கு விண்ணப்பம் செய்து இருக்கிறார்கள். மற்ற மாவட்ட நீதிபதிகளுக்கு அவர்கள் மனுக் கொடுத்திருக்கிறார்கள். ஒரு மாத காலமாக அங்கே வழககறிஞர்கள் போகாததால் அங்கே எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாமல் அங்கே பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். என்னுடைய தொகுதியில் அந்த முனிசீப் கோர்ட் இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படிப்பட்ட இடங்களில் உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு முன்வர வேண்டும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக கொண்டு வர விரும்புகிறேன்.

1991 செப்டம்பர் 7]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முடிக்க வேண்டும்.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே பெண்களை ஓட்டுநர்களாக நிய மிப்பதற்கு ஒருசில கருத்துக்களைச் சொன்னார்கள். ஆகவே பெண்கள் ஓட்டுநர்களாக வரவேண்டும் என்றால் அவர்களுக்குப் பயிற்சி கொடுக்கின்ற பள்ளி அவசியம் தேவைப்படும். இப்போது ஓட்டுநர் பயிற்சிக்கு இருப்பது ஆண்களுக்கு மட்டும் தான் அங்கே பயிற்சி கொடுக்கிறார்கள். ஆகவே இப்போது ஆயிரக்கணக் கான மினி பஸ்களை விடுவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். ஆகவே அப்படிப்பட்ட மினி பஸ்களை ஓட்டுவதற்கு, அதை டவுனைச் சுற்றி ஓட்டுவதால் இந்த மினி பஸ்களை ஓட்டுவதற்குப் பெண்களை ஓட்டுநர்களாக நியமிப்பதற்குப் பயிற்சிப் பள்ளி ஒன்றைத் துவக்க வேண்டும் என் பதையும் இந்த நேரத்தில் நான் பணிவன்போடு கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற இந்தத் தீர்மானங்களை வரவேற்று என்னுடைய கருத்துக்களை எடுத்துக் கூற வாய்ப்புக் கொடுத்த பேரவைத் துணைத் தலைவர் அவர் களுக்கு நன்றி கூறி அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. எஸ். எம். கிருஷ்ணன் அவர்கள்.

*திரு. எஸ். எம். கிருஷ்ணன் : மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1991—92 ஆம் ஆண்டினுடைய நிதிநிலை அறிக்கை உண்மையிலேயே பெரிதும் பாராட்டுவதற்கு உரியதாக அமைந்து இருக்கிறது. காரணம், அதிகமான புது வரிகள் இல்லாமல் அத்தியாவசியப் பொருட்களுக்கு ஏற்கனவே இருக்கின்ற வரிகளில் ஒருசில சதவீதத்தைக் குறைத்தும், அதே போல் ஏழை மக்கள், நடுத்தர மக்கள் நல்வாழ்வை மையமாக வைத்து இயற்றப்பட்ட நிதிநிலை அறிக்கை என்ற உணர்வு எனக்கு இருக்கிறது. மிகச் சிரமமான இந்த நேரத்தில், மிகச் சாமர்த்தியமாக வைக்கப்பட்டிருக்கின்ற நிதிநிலை அறிக்கை என்றே நானும் கருதுகின்றேன்; என்னுடைய இயக் கமும் கருதுகின்றது.

முற்பகல் 10–45

கல்வியைப் பொறுத்த வரையில், மாநில பள்ளி சாராக் கல்வித் திட்டம் என்ற ஒரு திட்டத்தினை இந்த நிதிநிலை அறிக்கை அறிமுகப்படுத்தியிருக்கிறது. அதனை நாங்கள் மனப் பூர்வமாக வரவேற்கின்றோம். நடைபெற்றுக் கொண்டிருக்கிற அரசு பள்ளிகளைச் சென்றுபார்த்தால், அங்கே 5 வகுப்புகளுக்கு

இரண்டு ஆசிரியர்களும், இரண்டு அறைகளைக் கொண்ட பள்ளிகளில் 5 வகுப்புகளும் நடக்கின்ற சூழ்நிலையைப் பார்க்கும் போது கல்வியின் தரம் எப்படி இருக்கும் என்ற ஐயப்பாடு தோன்றுகிறது. எனவே, நான் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன்; எப்படியாவது ஒரு வகுப்பிற்கு ஒரு ஆசிரியர் என்ற நிலையையும், ஒரு அறைக்கு ஒரு வகுப்பு என்ற நிலையையும் எவ்வளவு சிரமம் இருந்தாலும் அதை ஒரு அத்தியாவசியமான உடனடி இலக்காக வைத்து அவர்கள் செயல்படுவார்களானால் அது கல்வியின் தரத்தை உயர்த்துவதற்குப் பெரிதும் துணையாக இருக்கும் என்று கருதுகின்றேன். கேள்வி நேரத்தின்போது, பல கல்லூரிகளிலே, பள்ளிகளிலே உண்ணாவிரதம் இருந்தது பற்றி இங்கே பேசப்பட்டது. ஆசிரியர் தினமான ஐந்தாம் தேதியன்று, சென்னை கிருத்துவக் கல்லூரியின் வாயிலிலே, தமிழ்நாடு கல்லூரி ஆசிரியர்கள் சங்கத்தின் ஆதரவோடு கிருத்துவக் கல்லூரி ஆசிரியர்கள் சங்கம் ஒரு அடையாள உண்ணாவிரதம் நடத்தியதைக் கல்வி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகின்றேன். சில ஆண்டுகளுக்கு முன்பு, எஸ். ஐ. ஈ. டி. கல்லூரியிலே என்ன நிலை இருந்ததோ அதைவிட மோசமான நிலை கிருத்துவக் கல்லூரியிலே உருவாகிக் கொண் டிருக்கிறது என்பது என்னுடைய கணிப்பு. அந்தக் கிருத்துவக் கல்லூரி ஆசிரியர்கள் போராட்டம், தமிழ்நாடு கல்லூரி ஆசிரியர் கள் தமிழ்நாடு முழுவதும் போராட்டம் துவங்குகின்ற நிலை ஏற்பட்டு, அதற்குப் பின்னே அவர்களுக்கு அனுதாபம் தெரிவிக் கின்ற வகையிலே மாணவர்களும் அதிலே தலையிடுகின்ற நிலை யும் ஏற்பட்டு ஒரு சிக்கலான நிலை வருவதற்கு முன்பே மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும், அவசியமானால் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும் தலையிட்டு, ஒரு சமாதான நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று அன்போடு, பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இராம **வீரப்பன்**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய பேச்சில் குறுக்கிட விரும்பவில்லை என்றாலும், அவர்கள் சொல்லிய ஒரு கருத்து பத்திரிகைகளிலே வரும் போது, அது வேறுவிதமாக வந்துவிடக்கூடாது என்பதற்காக விளக்கத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். கிருத்துவக் கல்லூரி யினுடைய ஆசிரியர்களிலே சிலர்—அது ஒரு தனியார் நிர்வாகத் திலே இருக்கிற கல்லூரி; சிறுபான்மையினர் நடத்துகிற கல்லூரி ஆசிரியர் தினமாக இந்தியாவெங்கும் கொண்டாடப்படுகிற நாளைத் தேர்ந்தெடுத்து, அவர்கள் உண்ணாவிரதம் இருந்தார்கள்

என்பதையும் சொன்னீர்கள். அதற்குத் தூண்டுகோலாக யார் இருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்தீர்கள். இவைகள் எல்லாவற்றையும் தெரிவித்ததற்குப் பிறகு, இதை எப்படி யெல்லாம் பின்னாலே பெரிதாக வளர்ப்பதற்கு திட்டமிடுகிறார் கள் என்கிற தகவலையும் தெரிவித்தீர்கள். இவ்வளவையும் தெரிவித்ததற்குப் பிறகு, முறையாக அவர்கள் அரசை அணு காமல் அவர்கள் ஏதோ ஒரு வழியைத் தேர்ந்தெடுத்துக்கொண்டு முயலுகிறார்கள் என்கிற முழுவிவரமும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிந்திருக்குமானால், அதை அருள்கூர்ந்து, அரசுக்குத் தந்தால், முறையாக அவர்களைச் சந்தித்துப் பேசுவதற்குத் தயாராக இருக்கிறோம். அவர்கள் குறைகளைத் தீர்ப்பதற்கும் முயற்சிகள் எடுப்போம். இல்லை, அதற்காக நாங்கள் இந்த முயற்சியிலே ஈடுபடவில்லை, வேறு ஏதோ நோக்கம் எங்களுக்கு இருக்கிறது என்று அவர்கள் கருதுவது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிந்திருக்குமானால் அதையும் இந்த அரசினுடைய நன்மையைக் கருதி, அவர்கள் எங்களுக்குத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 10—50

திரு. எஸ். எம். கிருஷ்ணன் : மாண்புமிகு துணைத் தலை வர் அவர்களே, கல்லூரி ஆசிரியர் சங்கம், டைரக்டர் ஆஃப் காலேஜியேட் எஜுகேஷன் அவர்களை சந்தித்துப் பேசியது. சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தரையும் சந்தித்துப் பேசியது; அரசுக் கல்விச் செயலாளர் அவர்களையும் சந்தித்துப் பேசியது. நான் இரு சாராரையும் சந்தித்து, சமாதானமாகப் போவதற்கு ஏதாவது வழி இருக்கிறதா என்று முயன்றேன். அது இதுவரை பலனளிக்கவில்லை. அதனால்தான் அமைச்சரவர்கள் —அதிலே உள் நோக்கம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை, எனக்குத் தெரிந்தவரை . . . கல்வியமைச்சரவர்கள்......

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மீண்டும் என்னை மன்னிக்க வேண்டும். அரசுச் செயலாளர் வரை வந்து பேசியவர்கள், எப்பொழுதும் சுல பமாகச் சந்திக்க வாய்ப்பிலே இருக்கிற அமைச்சரை ஏன் சந்திக்க வில்லை? அமைச்சரிடத்திலே ஏன் அந்தக் குறைகளைத் தெரிவிக்க வில்லை என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்கு உங்கள் மூலம் கொண்டு வருகிறேன்.

திரு. எஸ். எம். கிருஷ்ணன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் முயற்சித்தார்கள். ஆனால், இன்னும் முயற் சித்திருக்கலாம். நான் ஒரு உறுதிமொழியைச் சொல்கிறேன்

[திரு. எஸ். எம். கிருஷ்ணன்] [1991 செப்டம்பர் 7

ஆசிரியர்கள் சார்பாக நான் அமைச்சரைச் சந்தித்து, இதனை நல்ல முறையிலே முடிப்பதற்கு—அவர்களுடைய ஒத்துழைப்போடு முடிப்பதற்கு நானும் முயற்சிக்கிறேன். அதற்கு உதவுமாறு அமைச்சர் அவர்களை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ஆண்டுக்கு 30,000-க்குப் பதிலாக 40,000 ஒதுக்கியிருப்பது உண்மையிலேயே வரவேற்கத் தக்க ஒன்று; மகிழ்ச்சிக்குரிய ஒன்று. நான் அண்மையிலே மேடவாக்கம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சென்று பார்த்தேன். உண்மையிலேயே வருத்தத்தோடு சொல்லிக்கொள்ளுகிறேன். அங்கே பிரசவமும் நடைபெறுகிறது. அப்படிப்பட்ட ஆஸ்பத்திரி. ஆனால், அங்கே ஒரு கழிப்பறை கூட இல்லை என்பது வருத்தத்திற்குரிய விஷயம். இதுபோன்று பல இடங்களிலே இருக்கிறது என நினைக்கிறேன். அதை ஒரு குறையாகச் சொல்லவில்லை. அவைகளையெல்லாம் நிறைவு செய்யுமாறு நல் வாழ்வுத்துறை அமைச்சரவர்களை நான் அன்போடும், பணிவோடும் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே ஸ்டாண்டர்டு மோட்டார் கம்பெனி சென்ற முப்பது மாதங்களாக—3,000 தொழிலாளர்களைக் கொண்ட கம்பெனி—மூடப்பட்டதன் காரணமாக வேலையிழந்து இருக்கிறார்கள். அண்மையிலே, தொழிலாளர் நல அமைச்சரவர்கள் இந்த செப்டம்பர் மாதத்திற்குள்ளே ஆலை திறக்கப்படும் என்று உறுதியைச் சொல்லியிருக்கிறார்கள். அது உண்மையிலேயே மகிழ்ச்சிக்குரிய விஷயம்தான். என்றாலும் அது நடைபெறுமா, இடையே ஏதாவது தடங்கல்கள் வந்து விடுமா என்ற சந்தேகம் தொழிலாளர்கள் மத்தியிலேயும், அந்தப் பகுதி மக்கள் மத்தியிலேயும் இருக்கிறது. நான், அருள்கூர்ந்து தமிழக முதல்வரவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அவர்களும் இதிலே சற்றுக் கவனம் செலுத்தி ஒரு உறுதிமொழியைக் கொடுப்பார்களேயானால் உண்மையிலேயே நாங்கள் பெரு மகிழ்ச்சி கொள்வோம் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

அதேபோல என்னுடைய தொகுதியிலே ஜோனாஸ் கம்பெனி என்ற கம்பெனி பம்மலிலே 250 தொழிலாளர்களைக் கொண்ட கம்பெனி மூன்று மாதங்களாக மூடிக் கிடக்கிறது. பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருக்கிறது. இரு சாராரும் நெருக்கமாக வரக்கூடிய அளவிலே பேச்சுவார்த்தை இதுவரை இல்லை.

அதேபோல அதற்குப் பக்கத்திலே தாதா பார்மசூடிகல் என்ற கம்பெனியிலே 400 தொழிலாளர்கள்—தற்காலிகத் தொழிலாளர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள்.

இவைகளையெல்லாம் தொழிலாளர் நல அமைச்சரவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன்.

1991 செப்டம்பர் 7] [திரு. எஸ். எம். கிருஷ்ணன்]

அதேபோல, மின் இலாக்காவிலே இன்னும் ஏழெட்டு ஆண்டுகளிலே இன்னும் சுமார் 4,293 மெகாவாட் நமக்குத் தேவைப்படும் என்ற நிலையை நிதிநிலை அறிக்கையிலே தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது. அதற்கேற்ற வகையிலே தமிழக அரசு திட்டங்கள் தீட்ட வேண்டும். மின்சாரம் இல்லை என்றால் எதுவுமே இல்லை என்கின்ற நிலைதான் இன்றைக்கு இருக்கின்றது. அத்துணை வளங்களும் மின் வளத்தை வைத்துத் தான் நடைபெற வேண்டும். எனவே, அதற்கேற்ற வகையிலே, தமிழக அரசு முயற்சியெடுத்துக் கொள்ள வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கின்ற நேரத்திலே, பல பகுதிகளிலே குடியிருப்புகள்—1,000 வீடுகள் 2,000 வீடுகள், 3000 வீடுகள், 500 வீடுகள் இருக்கின்ற பகுதிகளிலே மின்னிணைப்புக்கு ''நோ அப்ஜெக்ஷன் சர்ட்டிபிகேட்''; என்ற சர்ட்டிபிகேட் தேவைப்படுகிறது. அந்த சர்டிபிகேட்டை வருவாய் இலாகாவிலே வாங்க வேண்டும். ஆனால், வருவாய் இலாகாவிற்குச் சென்றால், அந்தப்பகுதி குடியிருப்புப் பகுதியல்ல, மேய்ச்சல் புறம்போக்கு; நத்தம் புறம்போக்கு; குட்டை புறம் போக்கு என்றெல்லாம் இருக்கிறது; எனவே, அதற்கு 'நோ அப்ஜெக்ஷன் சர்டிபிகேட்' கிடையாது என்று சொல்கிறார்கள். 20 ஆண்டுகளுக்கு முன்பே, 30 ஆண்டுகளுக்கு முன்பே, 40 ஆண்டுகளுக்கு முன்பே, அது நத்தம் புறப்போக்கு என்பதை நானும் ஒப்புக் கொள்கிறேன். அது மேய்ச்சல் புறம்போக்கு என்பதை நானும் ஒப்புக் கொள்கிறேன். ஆனால், 15 ஆண்டுகளாக மக்கள் குடியிருப்புக்குப் பின்னே, அதனை மேய்ச்சல் புறம்போக்கு என்பதனை மாற்றி, குடியிருப்பு என்று மாற்றுவதுதான் முறையே ஒழிய, அதை இன்னமும் மேய்ச்சல் புறம்போக்கு என்று கணக்கில் வைத்துக் கொண்டிருப்பது எப்படி நியாயம் என்று எனக்குத் தெரியவில்லை. 15, 16 ஆம் நூற்றாண்டிலேயே நிலத்தை அளந்து, பிரித்து, தரம் வாரியாக அவ்வாறு வைத்தார்கள் என்ற சரித்திரத்தை நாம் படிக்கிறோம். ஆனால், இன்றைக்கு மக்கள் குடியிருக்கிற பகுதியை மேய்ச்சல் புறம்போக்கு என்றோ, நத்தம் புறம்போக்கு என்றோ வைத்துக் கொண்டிருப்பது சரியாக இருக்காது என்ற கருத்தினை வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப் பெற்றது).

முற்பகல் 10–55

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நேரம் ஆகிவிட்டது; சீக்கிரம் முடியுங்கள்.

திரு. எஸ். எம். கிருஷ்ணன் : மரியாதைக்குரிய வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் அதற்கு ஆவன செய்வார்கள் என நம்புகிறேன்.

என்னுடைய தாம்பரம் தொகுதியில் தாம்பரம் நகரம் மிகவும் ஏழ்மையான நகரம். வருவாய் மிக மிகக் குறைந்த நகரம். ஆனால், சென்னை நகரத்தை அடுத்த நகரம். சென்னை நகருக்குத் தெற்கே இருக்கிற மக்கள் அத்தனை பேருக்கும் நுழை

வாயில் போல அது இருக்கிறது. அப்படிப்பட்ட நகரில் உள்ள மக்களுக்கு வருவாய் இல்லாத காரணத்தால், ஒன்றும் செய்ய முடியவில்லை. சாலைகள் பழுதுபட்டுக் கிடக்கின்றன. மின் விளக்குகள் சரியாக இல்லை. குடிநீருக்கு நிறைய சிரமம் இருக்கிறது. ஆகவே அவற்றையெல்லாம் மனதிலே வைத்து, தாம்பரம் நகரத்திற்கு அதிகப் பணம் ஒதுக்குகிற அவசியம் இருக்கிறது என்பதனை இங்கே வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, பம்மலில் கழிவு நீர் தூய்மைப்படுத்தும் பொது நிலையம் துவங்க இருக்கிறது. அதனை விரைவிலே வேகமாகச் செயல்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிடுமாறு அன்போடும் பண்போடும் கேட்டு, இந்த நிதிநிலை அறிக்கையிலே பேசுகிற வாய்ப்பினை நல்கிய மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைச் சொல்லி விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பி. ராஜு அவர்கள்.

திரு. கே. பி. ராஜு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய இதய தெய்வம், காவல் தெய்வம், மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கும் என்னை இந்த நிதிநிலை அறிக்கையின் பேரில் பேசுவதற்கு இங்கு அனுப்பி வைத்த என்னுடைய பேரூர் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் உங்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையானது, உள்ளபடியே மனந்திறந்து சொல்வதென்றால், சிறப்பான அறிக்கை. ஒவ்வொருவருடைய உள்ளத்தையும் எடுத்துக்காட்டுகின்ற வகையில், எங்களுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையைத் தயார் செய்திருக்கிறார்கள். ஒவ்வொரு யூனியனுக்கும் ஒரு கோடி ரூபாய் திட்டம் என்று அறிவித்து, செயல்படுத்தி வருகிறார்கள். நாட்டு மக்களுடைய நாடி நரம்புகளையெல்லாம் அது சென்று தொட்டுக் கொண்டிருக்கிறது. காரணம் என்னவென்று கேட்டால், கிராமங்களிலே இருக்கிற தாய்மார்களுக்கும், மக்களுக்கும்தான் தெரியும். சாலைகள் இல்லாமல் எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள் ; குடிநீர் இல்லாமல் எவ்வளவு சிரமப்படுகிறார்கள்; போக்குவரத்துக்கள் இல்லாமல், சாலை இல்லாத போக்குவரத்துக்களை வைத்துக்கொண்டு எவ்வளவு சிரமப்படுகிறார்கள் என்பது அந்தக் கிராமத்து மக்களுக்குத்தான் தெரியும். அந்த மக்களுடைய நாடி நரம்புகளையெல்லாம் தொட்டுக் கொண்டிருக்கிற வகையில், எங்களுடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் இந்தத் திட்டத்தினை தயார்

1991 செப்டம்பர் 7] [திரு. கே. பி. ராஜு]

செய்து இருக்கிறபோது, நான் உள்ளபடியே இந்த நிதி நிலை அறிக்கையினை மனந்திறந்து பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்லாது, கள்ளச் சாராயத்தையே ஒழிக்க முடியாது என்றிருந்த நிலை மாறி, எந்த ஆட்சியிலும் கள்ளச் சாராயத்தை ஒழிக்க முடியாத நிலைமை இருந்தது; எத்தனையோ முதலமைச்சர்கள் ஆண்டார்கள்; அவர்கள் ஆண்ட போதெல்லாம் கள்ளச் சாராயத்தை ஒழிக்க முடியவில்லை; எங்களுடைய முன்னாள் முதலமைச்சர் மறைந்துவிட்ட எங்கள் தானைத் தலைவர் புரட்சித் தலைவரால்கூட முடியவில்லை; நான் மனந்திறந்து சொல்கிறேன்—கள்ளச் சாராயத்தை ஒழித்த பெருமை, எங்களுடைய முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுக்குத்தான் சேரும். (மேசையைத் தட்டும் ஒலி) காரணம் என்னவென்று கேட்டால், காலையிலேயே தண்டல் காரனும், மணியக்காரனும் சைக்கிளை எடுத்துக் கொண்டு ஓடுகிறார்கள். எங்கே ஓடுகிறார்கள் என்று கேட்டால், 'எங்கே சாராயம் விற்றாலும் எங்களுடைய வேலை போய்விடும்' என்று ஓடிச் சென்று, சாராயத்தைத் தடுக்கின்ற ஒரு சூழ்நிலையை எங்களுடைய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் தான் செய்தார்கள்.

முற்பகல் 11–00

அந்த வகையிலே இந்த நிதிநிலை அறிக்கையில் 300, 400 கோடி ரூபாய் மதுவிலக்கினால் நட்டம் ஏற்பட்டாலும் 500 கோடி ரூபாய் பற்றாக்குறை ஏற்பட்ட நிதிநிலை அறிக்கையாக இருந்தாலும், உள்ளபடியே தமிழ்நாட்டு மக்கள் அத்தனைபேரும் மனம் திறந்து பாராட்டுகிற ஒரு நிதிநிலை அறிக்கையாகத்தான் இந்த அறிக்கை இருக்கிறது என்பதை நான் மனதாரச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அது மட்டுமல்ல, இவ்வளவு நல்ல அறிக்கையை இந்த நாட்டு மக்களுக்கு நிதிநிலை அறிக்கையாக்கித் தந்த எங்களுடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு, விடுதலைப் புலிகளால் ஆபத்து இருக்கிறதென்று நாங்கள் எண்ணுகின்றபோது உள்ளபடியே எங்கள் மனம் குமுறுகிறது. 90 பேர் கொண்ட ஒரு படை உள்ளே நுழைந்து எங்களுடைய முதல்வர் அவர்களுக்குக் குறிவைத்துக் கொண்டிருப்பதாக நாங்கள் கேள்விப்படுகிறோம். 90 பேர்தான் அவர்கள் இருக்கிறார்கள். ஆறு கோடி மக்கள் எங்களுடைய இதய தெய்வம், புரட்சித் தலைவியின் பின்னாலே இருந்து கொண்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களை வாழ விட்டவர்களை நீங்கள் ஒரு கணம் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒற்றைக் கண் சிவராசனைக் கொன்று விட்டார்கள் என்று

சொல்கிறார்கள். ஒற்றைக் கண் சிவராசனைக் கொன்றிருந்தாலும் அந்த சிவராசனை வாழ விட்டவர்கள் எல்லாம் இன்று ஒரு கண்ணோடு நாட்டுக்குள்ளே இருக்கின்றார்கள். அவர்களையெல்லாம் கண்டுபிடிக்க வேண்டும். அனுமதி இல்லாமல், கள்ளத் தோணியில் சென்று மறைந்த பாரதப் பிரதமர் அவர்களைக் கொலை செய்வதற்குத் திட்டம் போட்டுக் கொண்டிருந்தவர்கள் எல்லாம் நாட்டிலே நடமாடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை இந்தச் சட்டம் ஒன்றும் செய்யவில்லை. ஆகவே, அவர்களையும் இந்த நேரத்தில் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று நான் கனம் பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த வகையிலே நாங்கள் பார்க்கின்றபோது எத்தனை விடுதலைப் புலிகள் இந்த நாட்டுக்குள்ளே நுழைந்தாலும் மக்கள் சக்தி இருக்கின்ற வரைக்கும் இந்த தமிழ்நாட்டு மக்கள் அத்தனை பேரும் புரட்சித் தலைவியின் பின்னால் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஏற்கனவே முடிவு எடுத்து விட்டார்கள். எந்தச் சக்தி எதிர்த்து நின்றாலும் இந்த நாட்டிலே புரட்சித் தலைவிக்குத்தான் வாக்களிப்பது என்று தமிழ்நாட்டு மக்கள் ஏற்கனவே தீர்மானித்துத்தான் வாக்களித்திருக்கிறார்கள். மக்களின் ஏகோபித்த வாக்கைப் பெற்ற எங்களுடைய முதல்வர் அவர்கள் இங்கே நிதி நிலை அறிக்கையை செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள், யாரும் எதிர்பார்க்காத அளவிற்கு. இவருக்கு அரசியல் தெரியுமா, நிதிநிலை அறிக்கையைத் தயாரிக்க முடியுமா என்றெல்லாம் ஏளனம் பேசியவர்கள், வியக்கும் வண்ணம், தமிழ்நாட்டு மக்கள் அத்தனை பேர்களும் தங்களுடைய எண்ணங்களிலே சந்தோஷப்படுகின்ற அளவுக்கு நிதிநிலை அறிக்கையைத் தயார் செய்திருக்கிறார்கள். ஆகவே நான், நிதி அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போல் என்னுடைய தொகுதியில், பேரூர் தொகுதியில், செட்டிப்பாளையம் என்ற ஒரு கிராமம் இருக்கிறது. கிட்டத்தட்ட 5,000 மக்கள் கொண்ட கிராமம். அங்கே மின்சாரம் தேவை என்று நான் அமைச்சர் அவர்களிடம் கேட்டு மனுக் கொடுத்தேன் அங்கே இண்டஸ்ட்ரியல் ஏரியா வருவதற்காக. அக்ரிகல்ட்சுரல் லைன் தான் இருக்கிறது என்று சொன்னார்கள். ஆகவே, 3 பேஸ் லைன் ஆக அதைக் கொடுத்து அந்த கிராம மக்களுடைய குறையைப் போக்க வேண்டும். அங்கே மழையே 15 ஆண்டுகளாக இல்லாமல் இருக்கிறது. மக்கள் அத்தனை பேரும் வாடிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, முதல்வர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அங்கே 3 பேஸ் லைன் கொடுத்தால் இண்டஸ்டிரீஸ் வருவதற்கு வசதியாக இருக்கும். பக்கத்திலே ஒரு கிலோ மீட்டர் தூரத்திலே ஆயிரக் கணக்கான தொழிற் சாலைகள் இருக்கின்றன. இந்த ஒரு கிலோ மீட்டர் நீளத்திற்கு 3 பேஸ் லைன் கொடுத்தீர்களானால், அந்த

1991 செப்டம்பர் 7] [திரு. கே. பி. ராஜு]

மக்கள் அத்தனை பேரும், தண்ணீர் இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிற விவசாயிகள், தொழிலாவது செய்து பிழைத்துக்கொள்வார்கள் என்று இந்த நேரத்தில் சொல்லிக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியில், சி.வி.எம். கல்லூரி என்று ஒன்று இருக்கிறது. அந்தக் கல்லூரியினுடைய தாளாளர் 1975ஆம் ஆண்டு முன்னால் ஆட்சி செய்த கட்சியைச் சார்ந்தவர். ஒரே நாளில், 45 விவசாயிகளுடைய தலையில் அடித்து 1 ஏக்கர், ½ ஏக்கர் என்று பட்டா செய்துவிட்டார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மாநில மாநாடு நடக்கின்ற போது ஒரே நாளில், ஒரே இரவில், 49 ஏழை விவசாயிகளின் தலையில் அடித்து அநியாயமாகப் பட்டா செய்து ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள், தனியார் கல்லூரி என்று. அந்த ஏழை விவசாயிகள் அத்தனை பேரும் போராடி., சாப்பாட்டுக்கு வழியில்லாமல் வாடிக்கொண்டிருக்கிறார்கள். அந்தப் புறம்போக்கு நிலங்களை வளைத்துப் போட்டுக் கொண்டு கொள்ளையடித்துக் கொண்டிருக்கிறார்கள். நான் இதைச் சொல்வதற்குக் காரணம், அவர்களுக்கு முன்னால் இருந்த அரசு கொடுக்க வேண்டியதைக் கொடுத்து அந்த ஏழைகளுக்குத் துரோகம் செய்து விட்டு அந்த நிலங்களை அபகரித்துக் கொண்டு வளைத்துப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த நிலங்களை எடுத்து இந்த விவசாயிகளுக்குக் கொடுத்தால் அவர்கள் நன்றியுள்ளவர்களாக இருப்பார்கள் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே போல் எங்களுடைய பேரூர் தொகுதியில் ஏ.சி.சி. சிமெண்ட் என்ற ஒரு நிறுவனம் இருக்கிறது. சிமெண்ட் கம்பெனி அது. அதனால் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் நலமாக வாழ்கிறார்கள் என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

முற்பகல் 11-05

ஆனால் முதல்வர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்வது, லட்சக் கணக்கான ஏழை விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். விவசாயமே வளர்வது கிடையாது. அந்த சிமெண்ட் புகையினால் அந்த விவசாய நிலங்கள் எல்லாம் பாதித்து, அதனால், நோய் ஏற்பட்டு பலபேர்கள் மடிகிறார்கள். பல உயிர்கள் மடிகின்றன. பல கால்நடைகள் மடிகின்றன. ஆகவே அந்த சிமெண்ட் புகையினால் வருகின்ற கேடுகளைத் தயவு செய்து நீக்குமாறு நான் பணிவன்போடு மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[திரு. கே. பி. ராஜு] [1991 செப்டம்பர் 7

அதேபோல் என்னுடைய தொகுதியில் இந்திரா இன்ஜினீயரிங் கார்ப்பரேஷன் என்று ஒரு கம்பெனி இருக்கிறது. கைப்பம்புகள் வாங்குவதைப் பொறுத்த வரையில் டான்சியில் வாங்க வேண்டும் என்று ஒரு ஜி. ஓ. இருக்கிறது. ஆனால் இந்திரா இன்ஜினீயரிங் கார்ப்பரேஷன் என்ற கம்பெனி 'யுனிசெப்' நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற கம்பெனி, ஏற்கனவே ஆண்டுகொண்டிருந்த புரட்சித் தலைவர் அவர்கள் அதற்கு ஆதரவு கொடுத்து, தமிழ்நாட்டின் 80 சதவீதத் தேவையினை அவர்கள் பூர்த்தி செய்துகொண்டிருந்தார்கள். ஆனால் சென்ற திராவிட முன்னேற்றக் கழக அரசு 8–12–1989 அன்று அந்த இந்திரா கார்ப்பரேஷன் என்ற கம்பெனியை மூடிவிட்டார்கள். அதனால்—டான்சியிலிருந்தும் கைப்பம்ப் கிடைக்கவில்லை; குடிநீர்ப் பிரச்சினையையும் தீர்க்க முடியவில்லை. ஆகவே அந்த இந்திரா இன்ஜினியரிங் கார்ப்பரேஷனுக்கு நீங்கள் மீண்டும் அனுமதி வழங்க வேண்டும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் என்னுடைய தொகுதியில் வேலாண்டிபாளையம் பகுதியில் வீட்டு மனைப்பட்டாவுக்கென்று, அதாவது ஹவுஸிங் போர்டு-க்கென்று ஏழைகளான விவசாயிகளிடமிருந்து கிட்டத்தட்ட முக்கால் ஏக்கர், ஒரு ஏக்கர், ஒன்றரை ஏக்கர் என்று ஏகப்பட்ட நிலங்களை எடுத்துவிட்டார்கள். அந்த விவசாயிகள் எல்லாம் அதை நம்பித்தான் பிழைத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த நிலங்களை மீண்டும் அந்த விவசாயிகளுக்கே திருப்பிக் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் கோயம்புத்தூரில் அக்ரிகல்சுரல் யூனிவர்சிட்டி அதாவது விவசாயப் பல்கலைக் கழகம் இருக்கிறது. அந்தப் பல்கலைக் கழகத்தில் 16 ஆண்டுகள், 20 ஆண்டுகள் என்று தொழிலாளர்கள் கூலிகளாகப் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். சென்ற முறை 48 நாட்கள் அவர்கள் ஸ்ட்ரைக் செய்து, உண்ணாவிரதம் இருந்தும்கூட அந்தத் தொழிலாளர்கள் நிரந்தரமாக்கப்படவில்லை. ஆகவே அந்தத் தொழிலாளர்களை உடனடியாக நிரந்தரமாக்கித் தரவேண்டும் என்று நான் மாண்புமிகு விவசாய அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல என்னுடைய தொகுதியில், குறிச்சியில், 65,000 மக்கள் தொகை கொண்ட இடத்தில் ஒரு பள்ளிக்கூடம் கூட இல்லை. பள்ளிக்கூடம் தேவையென்றால் பி.டபிள்யூ.டி. துறையிலிருந்து ஒரு குளத்திலிருந்து நிலம் வேண்டும். அவர்கள் ஏற்கனவே 5 ஏக்கர் நிலம் கொடுத்திருக்கிறார்கள். அதேபோல் குறிச்சி பள்ளிக்கூடத்திற்கும் 5

1991 செப்டம்பர் 7] [திரு. கே. பி. ராஜு]

ஏக்கர் நிலம் கொடுத்து அங்கே பள்ளிக்கூடம் வருவதற்கு நீங்கள் தயவுசெய்து ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆகத்தொழில் துறையிலும், வேளாண்மைத் துறையிலும் நல்ல நிதிநிலை அறிக்கையைத் தயார் செய்து கொடுத்த எங்களுடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கும், நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்களுக்கும் இந்த நிதிநிலை அறிக்கையைப் பாராட்டி எனக்கு வாய்ப்புத் தந்துள்ள அத்தனைப் பேர்களுக்கும் நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. என். சுப்பிரமணியன்,

திரு. வி. என். சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையின் மீது விவாதிக்கின்ற வாய்ப்பு நல்கிய தங்களுக்கு எனனுடைய நன்றியை முதலில் நான் தெரிவித்துக்கொள்கிறேன. மிகவும் ஒரு மோசமான நிதிநிலை இருந்த அந்த நேரத்தில் எல்லோரும் பாராட்டுகிற அளவில் ஒரு நல்ல நிதிநிலை அறிக்கையை அளித்திருக்கிற மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கு எங்களுடைய பாராட்டுதல்களை முதலில் தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்த அரசு பொறுப்பேற்றதும் நிதியமைச்சர் அவர்களை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அழைத்து வந்து அவர்களுடைய நாற்காலியில் அமர வைத்தபோது நாங்கள 5, 6 சட்டமன்ற உறுப்பினர்கள் அங்கே இருந்து அந்தக் காட்சியைப் பார்த்த பிறகு நிதியமைச்சர் அவர்கள் என்னிடத்தில் சொன்னார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு கையெழுத்திட்டதும் அவர்களுக்கும் மகிழ்ச்சி, அதைக் கேட்ட உங்களுக்கும் மகிழ்ச்சி, நாட்டிலே இருக்கின்ற மக்களுக்கும் மகிழ்ச்சி, ஆனால் எனக்குத்தான் வருத்தம் என்று சொல்லி, முதல்வர் அவர்கள் ஒரு கையெழுத்திட்ட காரணத்தாலே இந்த அரசுக்கு ஏறத்தாழ 320 கோடி ரூபாய் வருமான இழப்பு ஏற்பட்டதாக நிதியமைச்சர் அவர்கள என்னிடத்திலே சொன்னார்கள். ஆக இந்த அரசு பொறுப்பேற்றதும் ஒரு பக்கத்தில் மலிவு விலை மதுவை ஒழித்ததன் காரணமாக ஆண்டு ஒன்றுக்கு அரசுக்கு 320 கோடி ரூபாய் வருமான இழப்பு ஏற்பட்டிருக்கிறது.

முற்பகல் 11—10

அதே நேரத்திலே வளர்ச்சிப் பணிகள் குறித்து ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஆண்டு ஒன்றுக்கு ஒரு கோடி ரூபாய் என்று சொல்லி அதன் மூலம் 384 கோடி ரூபாய் இந்த அரசுக்குப் புதிய செலவினங்கள் ஏற்பட்டிருக்கிறது. ஒரு புறம் வருமானம் இழப்பு. ஒரு பக்கம் வளர்ச்சிப் பணிகளுக்காக அதிகச் செலவு

என்ற வகையில் இந்த நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு முதல்வர் அவர்களும் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும் தயாரித்துக் கொடுத்து இருக்கிறார்கள். இந்த நிதிநிலை அறிக்கையைத் தயாரிக்கின்றபோது அன்றைக்கு, முன்பு 2, 3 நாட்களுக்கு முன்பாக முதல்வர் அவர்கள் தமிழகத்திலே இருக்கின்ற ரேஷன் கடைகளிலே இருக்கின்ற அரிசியின் விலையை 40 காசுகள் மேலும் உயர்த்தியதன் மூலம் அரசுக்கு மானிய இழப்பு 100 கோடி ரூபாய் தவிர்த்து இருப்பதாக அறிவிப்பு வந்தது. அப்படி அறிவிப்பு வந்ததுமே நாங்கள் எல்லாம் கூட, ஏழையெளிய மக்களை பாதிக்கின்ற ஒரு அறிவிப்பாக இருக்கிறதே என்று நினைத்தோம். இருந்தாலும் இப்பேர்ப்பட்ட இக்கட்டான சூழ்நிலையில் நிதிநிலை அறிக்கையைத் தயார் செய்கின்ற நேரத்தில் ஏதோ 100 கோடி ரூபாய் மானிய இழப்பைத் தவிர்த்தால் தான் முடியும் என்ற சூழ்நிலை இருக்கிறது என்பதை நினைத்துப் பார்த்து நாங்கள் எல்லாம் உள்ளத்திலே வருத்தப்பட்டுக் கொண்டிருந்தாலும்கூட, அடுத்த நாள் நாம், சட்டமன்ற உறுப்பினர்களோ அல்லது அமைச்சர் பெருமக்களோ அல்லது வேறு யாருமே சொல்லாமலே கூட, இந்த அரிசி விலையை உயர்த்துவதன் காரணமாக ஏழையெளிய மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்பதை உணர்ந்து நிதிநிலை அறிக்கை சமர்ப்பிப்பதற்கு முன்பாகவே அந்த அரிசி விலையைக் குறைத்திருக்கிறார்கள்.

இதே நிலையை நான் எண்ணிப் பார்க்கிறேன். கடந்த அரசின் போது நாங்கள் எல்லாம் எதிர் அணியிலே அமர்ந்து இருந்தோம். அன்றைய முதல்வர் அவர்கள் கிலோவுக்கு ஒரு ரூபாய் அரிசியின் விலையை உயர்த்தியதன் மூலமாக தமிழக அரசு 400 கோடி ரூபாய் ஆண்டு ஒன்றுக்கு மானியமாக வழங்கிக் கொண்டிருந்த அந்த மானிய இழப்பைச் சரி செய்து விட்டோம் என்று மார்தட்டிக் கொண்டு கிலோவுக்கு ஒரு ரூபாய் உயர்த்தினார்கள். அந்த மானியக் கோரிக்கையின் மீது நான் பேசுகிறபோது சொன்னேன். ''நீங்கள் ஒரு ரூபாய் கிலோவுக்கு அரிசி விலையை உயர்த்தியதன் மூலம் ஏழையெளிய மக்களை, குறிப்பாக நடுத்தர மக்களையெல்லாம் பாதிக்கின்ற ஒரு செயலாகச் செய்திருக்கிறீர்கள். அந்த ஒரு ரூபாய் அரிசி விலையை உயர்த்தியதன் மூலம் 400 கோடி ரூபாய் அரசுக்கு மானிய இழப்பைத் தவிர்த்திருப்பதாக நீங்கள் சொல்லி இருக்கிறீர்கள். மானிய இழப்பைத் தவிர்ப்பது என்பது உண்மையிலேயே நீங்கள் அந்த ஏழையெளிய மக்கள் மீது 400 கோடி ரூபாய்க்குப் புதிதாக வரி விதித்திருக்கிறீர்கள்'' என்ற குற்றச்சாட்டை நான் சொன்னேன். இன்னும் சொன்னேன். 'You are takIng the poor' அந்த 400 கோடி ரூபாயை வரியை ஏழைகளின் மீது விதித்திருக்கிறீர்கள் என்று சொன்னபோது அன்றைய முதல்வர் அவர்கள் கூட அதற்குப் பதில் சொல்ல முடியாத அளவுக்கு இருந்தார்கள். அப்படி நான் சொல்லி விட்டு 400 கோடி ரூபாய் ஏழையெளிய

1991 செப்டம்பர் 7] [திரு. வி. என். சுப்பிரமணியன்]

மக்கள் மீது வரி விதித்து இருக்கிறீர்களே, இதை எப்பாடு பட்டாவது தயவு செய்து பொதுமக்களுடைய குறைகளாக, பொது மக்களுடைய கோரிக்கையாக நாங்கள் சொல்கிறோம், எதிர்க் கட்சியைச் சார்ந்த நாங்கள் சொல்கிறோம், அரிசி விலை உயர்த்தியதை தயவுசெய்து குறையுங்கள் என்று இந்த மாமன்றத்தில் நானும் என்னைப் போன்ற உறுப்பினர்களும், காங்கிரஸ் பேரியக்கத்தினைச் சேர்ந்த உறுப்பினர்கள் எல்லாம் பல முறை மன்றாடிக் கேட்டுக் கொண்டபோது கூட ஒரு பைசாகூட குறைக்க வில்லை அன்றைய அரசு. அதையும் நான் இப்போது நினைத்துப் பார்க்கிறேன்.

அதே நேரத்திலே இங்கு நாங்கள் கேட்காமலே கூட, இந்த மாமன்றத்திலே இருக்கின்ற உறுப்பினர்கள் கேட்கவில்லை, அமைச்சர் பெருமக்கள் கேட்கவில்லை. யாருமே கேட்காத நிலையிலே கூட இந்த 40 காசுகள் உயர்த்தியதை, அந்த அரிசி விலை உயர்வு பொது மக்களை, தாழ்த்தப்பட்ட மக்களை, ஏழையெளிய மக்களை பாதிக்கும் என்ற ஒரே காரணத்தினாலே, அது பாதிக்கும் என்று உணர்ந்த காரணத்தினாலேயே புரட்சித் தலைவி அவர்கள் உடனடியாக அவர்கள் இந்த மாமன்றக் கூட்டம் ஆரம்பிப்பதற்கு முன்பாகவே உயர்த்திய அரிசி விலையை யும் குறைத்து விட்டார்கள். இதை நினைத்துப் பார்க்கின்ற போது, உண்மையிலேயே எந்த அளவுக்கு புரட்சித் தலைவி அவர்கள்—புரட்சித் தலைவர் அவர்கள் எந்தத் திட்டம் போட் டாலும் ஏழையெளிய மக்கள் இதனாலே பாதிக்கப்படுவார்களா, நன்மை பெறுவார்களா என்று நினைத்து நினைத்து பார்த்து திட்டம் தீட்டுவார்களே அதே அடிப்படையிலே, பாணியிலே—நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் இன்றைய தினம் திட்டம் தீட்டிக் கொண்டிருக்கின்றார்கள்.

இந்த நிதிநிலை அறிக்கையினுடைய விவாதத்திலே கலந்து கொண்டு பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. சிங்காரம் அவர்கள் சென்ற முறை எதிர் அணியிலே அமர்ந்து இந்த சட்டமன்ற நிகழ்ச்சியிலே கலந்து கொண்டிருக்கிறார்கள். சாதாரணமாக அரசினுடைய நடவடிக்கைகளை அவர் விமர்சிப்பார். வேகமாக விமர்சிப்பார். அவர் புகழ்ந்து பேசியது இந்த பட்ஜெட்டை மட்டும்தான். இந்த பட்ஜெட்டை எதிர் அணியிலே இருந்து, எதிர்க் கட்சியிலே இருந்து மாண்புமிகு சிங்காரம் அவர்கள், உண்மையிலேயே நாங்கள் எல்லாம் பெருமைப்பட்டுக் கொள் கின்ற அளவுக்கு, நன்றி கூறுகின்ற அளவுக்கு அவர் மிகவும் வானளாவப் பாராட்டிப் புகழ்ந்தது இந்த பட்ஜெட் ஒன்றே. இந்த பட்ஜெட்டினுடைய முக்கியத்துவத்தை மக்கள் புரிந்து கொள்வார்கள் என்ற அளவில் அவர்களுடைய பாராட்டுக்கள் அமைந்திருந்தன. ஆகவே, அவருக்கு உண்மையிலேயே நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம்.

[திரு. வி. என். சுப்பிரமணியன்] [1991 செப்டம்பர் 7
முற்பகல் 11-15

அதுபோல இந்த பட்ஜெட்டில் எங்களுடைய கோரிக்கைகளாக, எங்களுடைய எண்ணத்தை கவர்கின்ற வகையிலே, மின்சார இலாகா இலவசமாக விவசாயிகளுக்கு மின்சாரம் வழங்குவதன் மூலம் ஆண்டு ஒன்றுக்கு 550 கோடி ரூபாய் இழப்பு ஏற்படுகிறது என்ற குறிப்பை தந்திருக்கிறார்கள். இந்த இழப்பை ஈடு கட்டுவதற்கு, அந்த மின் சப்ளையை சீர் செய்வதற்கு என்ன கருத்துக்கள் இருக்கின்றன என்பதை இந்த மாமன்றத்திலுள்ள உறுப்பினர்கள் தெரிவிக்க வேண்டுமென்ற வகையிலே அந்தக் குறிப்பு அமைந்துள்ளது. தயவு செய்து இந்த நேரத்தில் விவசாயிகள் மனம் புண்படும் என்றோ அல்லது விவசாயிகள் கோபித்துக் கொள்வார்கள் என்றோ அந்த அடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினர்கள் எண்ணாமல் ஒவ்வொரு உறுப்பினரும் இந்த சீர்கேட்டை எப்படி நிவர்த்தி செய்யலாம் என்று உங்களுடைய மேலான எண்ணங்களை, உணர்வுகளை வெளிப்படுத்த வேண்டும். எங்களைப் பொறுத்த அளவில் இலவச மின்சாரம் என்று தெரிவித்தாலும், நான் பல விவசாயிகளிடம் சென்று கருத்துக்களைக் கேட்டேன். அவர்கள் கூட மிகத் தெளிவாக கருத்துக்களைச் சொன்னார்கள். இலவச மின்சாரம் என்று சொன்னால் மீண்டும் விவசாயிகள் புதிய மின்சார இணைப்புகள் கிடைப்பது கஷ்டம் என்றும், அதே நேரத்தில் இப்பொழுது இருக்கின்ற மின் இணைப்புகளுடைய மேற்பார்வைகள் சரியாக அமையாது என்றும், அதுமட்டுமல்லாமல் இலவசம் என்று சொன்னால் ஏழை விவசாயிகளுக்கு பொருத்தமாக இருக்கும், 50 ஏக்கர், 100 ஏக்கர் உள்ள பாசன வசதியுள்ள மிகப் பெரிய விவசாயிகளுக்கு எப்படி இது சாத்தியக்கூறாக அமையும் என்றும் கருத்துக்களைச் சொன்னார்கள். ஆகவே, அந்த அடிப்படையில் எங்களுடைய உளமார்ந்த கருத்துக்களை நான் முதலமைச்சர் வாயிலாக தெரிவித்துக் கொள்கின்றேன். தயவு செய்து எல்லோருக்கும் இலவச மின்சாரம் என்ற அந்தக் கருத்தை அடியோடு விட்டு விட்டு ஏழை விவசாயிகளுக்கு வேண்டுமானால் அந்த இலவச மின்சாரம் பயன்படட்டும், ஆனால் பணக்காரர்களுக்கு, இன்னும் சொல்லப் போனால் காவிரிப் படுகையிலே 50 எச்.பி., 40 எச்.பி. மின் மோட்டார் வைத்து ஆயிரக்கணக்கான ஏக்கர் பாசன வசதி மூலம் விவசாயம் செய்து கொண்டிருக்கின்ற அந்த விவசாயிகளுக்குக் கூட இலவச மின்சாரம் என்பது இந்த இலவசம் என்பது எந்த கொள்கைக்கோ, அந்தக் கொள்கைக்கே கூட அது மாறுபாடானது என்பதை இந்த மாமன்றத்தின் வாயிலாக எங்களுடைய கருத்தாக, ஏழை விவசாயிகளுடைய கருத்தாக இங்கே நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதுபோல போக்குவரத்து பற்றி ஒரு கருத்து நிலவிக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் கூட இங்கே தனியார் பஸ் அதிபர்கள் 1 பஸ், 2 பஸ் வைத்துக் கொண்டு நல்ல லாபகரமாக நடத்திக் கொண்டிருக்கிறார்கள், அதே நேரத்

1991 செப்டம்பர் 7] [திரு. வி. என். சுப்பிரமணியன்]

தில் அரசு போக்குவரத்துக் கழகங்கள் எல்லாம் நட்டத்திலே
நடந்து கொண்டிருப்பதைப் பற்றி பல விமர்சனங்கள் நடந்து
கொண்டிருப்பது பற்றி குறிப்பிட்டார்கள். அது உண்மைதான்.
அரசு போக்குவரத்துக் கழகங்களைப் பொறுத்தவரை இந்தியா
விலேயே மிகச் சிறந்த போக்குவரத்துக் கழகங்களாகத்தான்
தமிழகத்தில் உள்ள போக்குவரத்துக் கழகங்கள் செயல்பட்டுக்
கொண்டிருக்கின்றன. ஆனாலும் தவிர்க்க முடியாத வகையில்
பொதுமக்களுடைய நன்மைக்காக பல புதிய வழித் தடங்களைக்
கொடுக்கிற காரணத்தாலே இந்த போக்குவரத்துக் கழகங்
களுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. சிலர் இங்கே அதைப்பற்றிச்
சொன்னார்கள். பொதுவுடைமையாக்குவதைப் பொறுத்தவரை
யில், இன்றைய தினம் பொதுவுடைமையாக்கப்பட்ட தொழில்கள்,
தொழில் மையங்கள், போக்குவரத்துக் கழகங்கள் எல்லாம் கூட
லாபத்தில் இயங்கி அரசுக்கு அதன்மூலம் வருமானம் வருகிற
வகையில் இருக்க வேண்டும். அதை விடுத்து மீண்டும் பொது
மக்களுடைய வரிப் பணம் அந்த நஷ்டத்திலே இயங்குகின்ற
போக்குவரத்துக் கழகங்களுக்கு போகக் கூடாது என்ற அடிப்
படையில் புதிதாகக் கொடுக்கப்படுகின்ற வழித் தடங்களைப்
பொறுத்தவரையில்—இன்னும் சொல்லப் போனால் அமைச்சர்
அவர்களை வைத்து நான் 1 ஆம் தேதி என்னுடைய தொகுதி
யிலே 4 புதிய வழித் தடங்களை துவக்கி வைத்து விட்டு தான்
வந்திருக்கிறேன்.— நீங்கள் தொகுதிக்கு செல்கின்ற நேரத்தில்
அத்தனை கிராமங்களிலும் எங்கள் ஊருக்கு பஸ் வேண்டும்,
பஸ் வேண்டும் என்று பஸ்கள் கேட்காத கிராமங்களே கிடை
யாது. அப்படி இருக்கின்ற போது நாங்களும் அமைச்சர் அவர்
களிடத்திலே வந்தோம். ஏன் என்றால் மீண்டும் என் தொகுதி
மக்களைச் சென்று பார்க்க வேண்டும். அப்படி அங்கே நாம்
போகும்போது புதிய பஸ்களை விட்டுவிட்டுத்தான் செல்ல
வேண்டுமென்ற பய உணர்வின் காரணமாக அவர்களிடத்தில்
கெஞ்சிக் கூத்தாடி எப்படியாவது பஸ் விட வேண்டுமென்று
சொல்கின்றோம். அமைச்சரும் பார்க்கின்றார். தேடித் தேடிப்
பார்க்கின்றார். எம்.டி.யை எல்லாம் அழைத்துப் பேசுகிறார்.
அவர்கள் உடனே 'பஸ் இல்லை' என்று சொல்லும் நிலை இருக்
கிறது. இருந்தாலும் கூட ஏதோ முடிந்த அளவுக்கு பஸ் விடு
கிறார்கள். இன்னும் சொல்லப் போனால், நாங்கள் கேட்கின்ற
ரூட்டுகளில் எல்லாம் பஸ் விட்டுக் கொண்டிருந்தால் அத்தனை
ரூட்டுகளிலும் நஷ்டத்தில் தான் பஸ்கள் ஓடிக் கொண்டிருக்கும்.
கலெக்ஷன் அதிகமாக இல்லாத ரூட்டுகளாகத் தான் இருக்கின்றன.
ஆகவே, பொதுமக்களுடைய நலனுக்காக அரசு அதைச் செய்
கிறது. ஆனால் அதே நேரத்தில் இப்படி ஏற்படுகின்ற நஷ்டத்
தைத் தவிர்க்க வேண்டுமென்ற ஒரு எண்ணம் பரவலாக நாட்டு
மக்களிடத்தில் இருக்கிறது. இதைப் போக்குவதற்கு என்னுடைய
கருத்தாக ஒன்றை சொல்ல ஆசைப்படுகின்றேன். புதிதாக
பேருந்து வழித் தடங்கள் மக்களுக்காக நாம் கேட்கின்றோம்.

அப்படி கேட்கின்ற புதிய வழித் தடங்களை மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் அவர்கள் தனியார் துறைக்கு கொடுப் பதற்கு முன் வர வேண்டும்.

முற்பகல் 11-20

அந்த அடிப்படையிலே உங்களுடைய கொள்கைகளை வகுத் துக்கொள்ள வேண்டும். நாங்கள் கேட்கின்ற வழித் தடங்களில் லாபம் இல்லாத காரணத்தால், நஷ்டம் வருமென்று தெரிந்தால், தனியார்கள் வர மாட்டேன் என்று சொல்லுவார்கள். அப்படி அவர்கள் சொல்லுகின்றபோது, இப்போது பேருந்து வழித் தடங்களை நடத்தும் தனியார் துறையினரை அழைத்து, இந்தந்த கிராமங்களை கவர் செய்யக்கூடிய டவுன் பஸ்ஸை நீங்கள் ஓட்ட வேண்டும், தனியாக அதற்கு லைசென்ஸ் தருகிறோம். நீங்கள் கட்டாயம் ஓட்ட வேண்டும். அப்படி ஓட்டினால்தான் நஷ்டம் வருகின்ற ஒருவழித் தடத்தில் ஓட்டினால்தான், லாபகரமாக ஓடக் கூடிய ஒரு வழித் தடத்திற்கு லைசன்ஸ் தரப்படுமென்ற கண்டி ஷனைப்போட்டு, எப்படியாவது புதிய வழித் தடங்களை தனி யாரிடம் விட்டு, அதன்மூலம் போக்குவரத்துக் கழகங்களிலே நடைபெறுகின்ற நஷ்டத்தைத் தவிர்க்க உதவ முடியும் என்ற அடிப்படையிலே சிந்திக்க வேண்டும்.

இந்த மாமன்றத்திலே சென்ற முறை சட்டமன்ற உறுப்பின ராக இருந்தபோது கூட, என்னுடைய தொகுதியிலே, என் னுடைய ஊரிலே சிப்காட் இண்டஸ்டிரியல் குரோத் சென்ட்டர் என்ற பெரிய அமைப்பு, அன்றைய தினம் பாரதத்தினுடைய பிரதமராக இருந்த மரியாதைக்குரிய திரு. ராஜீவ் காந்தி அவர் களுடைய ஒத்துழைப்போடு வந்திருக்கிறது. நடுவண் அரசுகூட 40 கோடி ரூபாய் மானியமாக வழங்கி இருக்கிறார்கள். ஆனால் இன்னும் நில ஆர்ஜிதம் போன்ற வேலைகள் எல்லாம் ஆரம்பிக் காமல் உள்ள நிலை உள்ளது. ஆகவே என்னுடைய தொகுதி மக்கள் சார்பாக மாண்புமிகு முதல்வரவர்களே அந்தத் துறை யினுடைய அமைச்சராக இருக்கின்ற காரணத்தாலே, அவர்களி டம் நான் மெத்தப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். அந்த நில ஆர்ஜித வேலைகளுக்கு என்னுடைய ஊரிலே என்னுடைய பூமி 24 ஏக்கர்கள் எடுக்க இருக்கிறார்கள். அதை நான் மன முவந்து வரவேற்று இருக்கிறேன். அந்த சிப்காட் இண்டஸ்டிரியல் குரோத் சென்டர் மிகத் துரிதமாகச் செயல்படுவதற்கு, அதனை ஆரம்பிப்பதற்கு மாண்புமிகு முதல்வரவர்கள் முடிவெடுக்க வேண்டுமென்று இந்த நல்ல நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல் என்னுடைய மாவட்டத்திலே 3 அமைச்சர் கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு மிக நன்றாகத் தெரியும். எங்களுடைய மாவட்டத்திலே பெருந்துறை தொகுதிதான் மிகுந்த வறட்சியான தொகுதி. குடி தண்ணீருக்கு மிகுந்த பற்றாக்குறை உள்ள தொகுதி அது. ஆகவே என்னுடைய தொகுதியைப் பொறுத்த அளவில் குடி தண்ணீருக்காக காவிரி ஆற்றிலிருந்தும், பவானி ஆற்றிலிருந்தும் இரண்டு பெரிய ஸ்கீம்கள் போட்டுக்

கொடுத்திருக்கிறேன். நம்முடைய குடிநீர் வடிகால் துறை அமைச்சரவர்கள் என்னுடைய தொகுதியை சுற்றிப் பார்த்து, அதனுடைய வறட்சியை மனதிலே கொண்டு, என்னுடைய தொகுதியில் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்துக் கொடுக்குமாறு கேட்டுக் கொண்டு, வாய்ப்பு அளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. செல்வராஜ்.

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் வரவு செலவுத்திட்டத்தை அரசு சமர்ப்பிக்கும்போது, எப்போதுமே வரவு செலவுத் திட்டம் அறிவிக்கும் முன்பே பெரும் வியாபாரிகள் எல்லாம் பொருட்களுக்கும் விலையேற்றுவார்கள், பதுக்குவார்கள். அந்த நிலை மாறி, இப்போது இந்த சட்டமன்றத்தில் சமர்ப்பித்த வரவு செலவுத் திட்டத்தின் மூலம், அரசுக்குப் பக்கபலமாக வியாபாரிகள் இருக்கும் விதத்தில் பொருள்களைப் பதுக்காமல், விலை ஏற்றாமல் செயல்படுத்தி, ஒரு நல்ல வரவேற்பினை இந்த வரவு செலவுத் திட்டம் பெற்றுள்ளது என்பதை இந்த அவையில் தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் உறுதியான செயல்கள் போற்றுதற்குரியதாகும். இந்தப் பொருளாதார நெருக்கடி மிக்க நேரத்தில் எந்தவித பெரிய மாற்றமும் இல்லாமல் சாதுர்யமாகச் சமாளிக்கும் இந்த வரவு செலவுத் திட்டம் பாராட்டுக்குரியது.

சத்துணவுக் கூடங்களில் இப்போது உள்ள நிலையை மாற்றி, வாரம் ஒரு முறை ஆரம்ப சுகாதார நிலையங்களின் மருத்துவர்களைக் கொண்டு சத்துணவு உண்ணும் குழந்தைகளைப் பரிசோதனை செய்து, நோயற்ற முறையில் சிறப்பாக அவர்களைப் பராமரிக்க வேண்டும். இன்று நாட்டில் தனியார்கள், சிறுவர் ஆங்கிலப் பள்ளி என வைத்து எல்.கே.ஜி., யு.கே.ஜி. வகுப்புகள் நடத்தி, ஒரு குழந்தைக்கு 5,000. 10,000 ரூபாய் என நன்கொடை வாங்குகிறார்கள். ஒருசிலர் கடன் வாங்கி குழந்தைகளைச் சேர்க்கிறார்கள். இந்த நிலை மாற சத்துணவு கொடுப்பதுடன், குழந்தைகளுக்கு ஆங்கிலம்-தமிழ் ஆரம்பப் பாடங்களைக் கற்றுக் கொடுத்து, கல்வி நிலையை உயர்த்தினால், குழந்தைகள் பள்ளி என வைத்துக் கொண்டு கொள்ளையடிப்பதைத் தடுக்க முடியும்.

முற்பகல் 11-25

என்னுடைய தொகுதி கிராமமே இல்லாத நகரமாகும். இங்கு மொத்த வியாபாரிகள் வங்கிகள், ஜவுளிக்கடைகள், நகைக் கடைகள் அதிகமாக உள்ளன. தினசரி கோடிக் கணக்கான ரூபாய் புழக்கம் உள்ள அந்த இடங்களில் அடிக்கடி கலவரங்கள்,

கொலைகள், கொள்ளைகள் நடக்கின்றன. இதைத் தடுக்கும் விதத்தில் உடனடி நடவடிக்கையாக நகரத்தில் முக்கியப் பகுதிகளில் துணைக் காவல் நிலையங்களை அமைக்க வேண்டும். இதன் மூலம் உடனடியாகக் கொள்ளைகள், கொலைகள் ஆகிய வற்றைத் தடுக்க முடியும்; தக்க நேரத்தில் நடவடிக்கை எடுக்க வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். காவல் நிலையங்களில் காவலர்கள் குறைவாக உள்ளதால், அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து, காவலர்களை அதிகப் படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கோவையை மாநகரக் காவல் துறையாக மாற்றிய பிறகு காவலர்கள் போதாததால் உடனடி நடவடிக்கை எடுக்க முடியாமல் இருக்கிறது. எனவே, அரசு தக்க நடவடிக்கை எடுத்து காவலர்களை கோவை மாநகர காவல் துறைக்கு அதிகப்படுத்திக் கொடுத்து, வாகன வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கோவை மாநகராட்சிக்குச் சொந்தமான தியாகி குமரன் மார்க்கெட்டில் 25 ஆண்டுகளுக்கு மேலாக வியாபாரம் செய்து வருகின்றார்கள். இந்த வியாபாரிகளுக்கு வாடகை உடனடியாக 100 சதவீதமாக உயர்த்தி விட்டார்கள். இந்த 100 சதவீத வாடகை உயர்த்திய பிறகு அவர்களுக்கு வாடகை கொடுப்பது கஷ்டமாக உள்ளதால் அந்த வியாபாரிகளுக்கு உதவுகின்ற விதத்தில் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து அந்த வாடகை உயர்வைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் செல்வ சிந்தாமணி குளம், எரிமேடு பகுதிகளில் 2,000 குடிசை வீடுகள் கட்டி ஏழைகள் வசித்து வருகிறார்கள். முன்பு ஆட்சியில் இருந்தவர்கள், அ.இ.அ.தி.மு.க.வுக்கும் காங்கிரஸ் கட்சிக்கும் உறுதுணையாக இருக்கிறார்கள் என்ற காரணத்தினால், அந்தக் குடிசை வாசிகளில் பாதிப் பேரை அப்புறப்படுத்தி செல்வ சிந்தாமணி குளம் என்னும் பகுதியை அவர்களுக்கு ஒதுக்கித் தந்தார்கள். இப்போது அதையும் காலி செய்ய வேண்டும் என்று அரசு அதிகாரிகள் அவர்களை அச்சுறுத்துகின்ற காரணத்தினால், அவர்களுக்கு மீண்டும் அங்கேயே குடி இருக்க வீட்டு மனைகளைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

கோயம்புத்தூர் மாநகராட்சியில் உள்ள மின்சார இலாகாவில் பல ஆண்டுகளுக்கு முன்பு பொருத்தப்பட்ட குறைந்த மின்னழுத்தம் உள்ள டிரான்ஸ்பார்மர்களை உபயோகததில் வைத்து உள்ளதால், முன்பு குறைந்த மின் இணைப்பு கொடுத்து இருந்தார்கள். ஆனால், இப்போது புதிதாக அதிகமான மின் இணைப்புகள் கொடுத்து இருப்பதால், தினசரி தொடர்ந்து பல முறை மின்சாரத் துண்டிப்பு வருகிறது. எனவே, புதிய அதிக

1991 செப்டம்பர் 7] [திரு. சே. செல்வராஜ்]

மின்னழுத்தம் உள்ள டிரான்ஸ்பார்மர்களைக் கொண்டு இந்தக் குறையைத் தீர்க்க வேண்டுகிறேன். இப்போது மின்சாரம் இல்லாத நேரங்களில் பல சமூக விரோதிகள் கொள்ளை அடிப்பதற்குக் கூட தயாராகி விடுகிறார்கள் என்பதனைத் தெரிவித்து, உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் எங்களுடைய கோவை மாநகராட்சிக்கு அதிக மின்னழுத்தம் உள்ள மின்சார இணைப்புக்களைத் தருவதற்குப் புதிய டிரான்ஸ்பார்மர்களை வாங்க உதவ வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கோவை செம்பட்டி பகுதியில் 40 ஆண்டுகளுக்கு மேலாக 3,000க்கும் அதிகமான குடிசைகளில் நிறைய பேர் வசித்து வருகிறார்கள். இங்கு வசித்து வருபவர்களுக்கு இதுவரை பட்டா கொடுக்கவில்லை. சில அரசியல் சமூக விரோதிகள், சில அரசியல் சக்திகளைப் பயன்படுத்திக் கொண்டு அவர்களை அச்சுறுத்தி, பயமுறுத்தி மிரட்டியும் வருகிறார்கள். அரசு தக்க நடவடிக்கை எடுத்து, நீண்ட நாட்களாக வசித்து வரும் அவர்களுக்கு நிரந்தரமாக அங்கே வசிக்க வீடுகள் கட்டித் தர வேண்டுகிறேன்.

செல்வபுரம், கோவை செம்பட்டி காலனி, வின்சன்ட் காலனி பகுதிகளில் எனது தொகுதியில் வீட்டுவசதி வாரியத்தின் மூலமும் குடிசைமாற்று வாரியத்தின் மூலமும் முன்பு கட்டிய வீடுகள் பராமரிக்க முடியாமல் இடிந்து விழுந்து கொண்டிருக்கின்றன. எப்போது கூரை விழுந்து, என்றைக்கு அவர்கள் ஆபத்தில் மாட்டிக்கொள்வார்களோ என்கின்ற நிலையில், கான்கிரீட் கம்பிகள் தொங்கிக் கொண்டு இருக்கின்றன. உடனே, மாண்புமிகு வீட்டு வசதி வாரிய அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுத்து, பரிசீலனை செய்து அவர்களுடைய வீடுகளைப் புதுப்பித்துக் கொடுக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

அமைதியாக இருந்த மாநிலத்தில் முந்தைய ஆட்சியினர் மூலம் நாடு முழுவதும் எங்கு பார்த்தாலும் கொலைகளும், கொள்ளைகளும் தினமும் நடந்து வந்தது. காரணம் துப்பாக்கிக் கலாசாரத்தை உருவாக்கி விட்டவர்கள் செயல்பட்டு, விடுதலைப் புலிகளைப் பரவலாக இருக்கவும் செயல்படவும் தி.மு.க அரசு உதவியதன் காரணமாகத் தான் எங்கள் அன்புத் தலைவர் ராஜீவ் காந்தி அவர்களைப் பறி கொடுத்தோம். இன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அதிரடி நடவடிக்கை எடுத்து தமிழகத்தில் அடியோடு விடுதலைப் புலிகளைக் கண்டு பிடித்து, கைது செய்தும் அவர்கள் ஆயுதக் கிடங்குகளைக் கண்டுபிடித்தும் அவர்களை அடக்கியதால் உலக அரசியல் அரங்கில் மாபெரும் சரித்திரம் படைத்துவிட்ட நமது முதல்வர் அவர்களைப் பாராட்டுகிறேன்; வரவேற்கிறேன்.

[திரு. கே. செல்வராஜ்] [1991 செப்டம்பர் 7

எந்த ஒரு பிரச்சினையானாலும் உடனுக்குடன் முடித்து, தாயுள்ளத்துடன் செயல்படும் மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். என்றும் உங்களின் நல்ல செயலுக்கும், அரசின் திட்டங்களுக்கும் நாங்கள் துணை நிற்போம்: செயல்படுவோம்; அதில் எந்தவித அச்சமும் இல்லை. ஒரு சிலர் தாங்கள் தங்கள் அரசுக்கு வேண்டியவர்கள் என, சொந்தக் காலில் நிற்க முடியாமல் அரசியல் குளிர் காய முயலுகிறார்கள். அவர்களை நம்பாதீர்கள் என வேண்டுகிறேன். எத்தனை சோதனைகள் வந்தாலும் எங்கள் தலைவர்கள்—மறைந்த அன்னை இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி அவர்கள் உருவாக்கிய இந்த நட்பை, உறவை, சகோதரத்துவத்தை எந்த சக்தியாலும் ஒன்றும் செய்துவிட முடியாது என்பதைத் தெளிவாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கிராமப்புறப் பணியாளர்களுக்கு, தி. மு. க. அரசு, அரசு வரிப் பணத்திலிருந்து எடுத்து சம்பளமாகக் கொடுத்த, அவர்களை அப்புறப்படுத்திவிட்டு, வரிப்பணத்தை மிச்சப்படுத்திய இந்த அரசுக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். என்னுடைய கோவை தொகுதியில் 5—9—1991 அன்று நடந்த கலவரப் பகுதிக்கு நான் சென்று மாவட்ட ஆட்சித் தலைவரோடு சேர்ந்து அமைதிக் குழுவில் கலந்து கொண்ட அந்த இரு சமுதாயத்தினரையும் அழைத்துப் பேசி அந்தப் பிரச்சினையை சுமுகமாக முடிப்பதிலே பங்கு கொண்டேன் என்பதைத் தெரிவித்து எனக்குப் பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன். வணக்கம்.

முற்பகல் 11-30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எம். தங்கவேல்.

*திரு. எம். தங்கவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991-92ஆம் ஆண்டு பட்ஜெட் விவாதத்தில் கலந்து கொண்டு பேசுவதற்கு முன்னதாக, என்னை இரண்டாவது முறையாக இந்தச் சட்ட மன்றப் பேரவை வேட்பாளராக அறிவித்து சட்டமன்ற உறுப்பினராக ஆக்கிய தமிழகத்தினுடைய காவல் தெய்வம், என்னுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை அவருடைய பொன் மலர்ப் பாதங்களில் சமர்ப்பித்து, என்னுடைய முசிறி தொகுதியில் இரண்டாவது முறையாக என்னை சட்ட மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுத்ததற்காக என்னுடைய முசிறி தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் நன்றியைக் காணிக்கையாக்கி, இந்த நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்திலே கலந்து கொண்டு

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் பேச வாய்ப்பளித்தமைக்குத் தங்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராகப் பொறுப்பேற்ற இரண்டு, மூன்று மாதங்களுக்குள், சோதனையான, நெருக்கடியான ஒரு காலக் கட்டத்திலே இந்தப் புதிய பட்ஜெட்டைத் தயாரித்திருக்கிறார்கள். தமிழகத்திலே உள்ள ஏழை எளிய நடுத்தர மக்கள் பயன் அடைகிற வகையிலே இந்தப் புதிய பட்ஜெட்டைத் தயாரித்திருக்கிறார்கள். புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடனே, அவர் எப்படி செயல்படுவார், எப்படி பட்ஜெட்டைப் போடுவார் என்று எதிர்பார்த்தவர்களும், இந்த பட்ஜெட்டைப் பற்றி எப்படி குறை சொல்லலாம் என்று நினைத்துக் கொண்டிருந்தவர்களும், புரட்சித் தலைவி அவர்களுக்கு என்ன தெரியும், அவர் எப்படி நிர்வாகத்தை நடத்த முடியும் என்று ஏளனம் செய்தவர்களும், இதே அவையில் முன்பு புரட்சித் தலைவியைப் பற்றி ஏளனம் செய்தவர்களும், தலைமை இல்லாத கட்சியில் இருக்கிறார்கள் என்று எங்களையெல்லாம் பார்த்து சென்ற முறை ஏளனம் பேசியவர்களும் இன்றைக்குச் சபைக்கே வர முடியாத சூழ்நிலையில், புரட்சித் தலைவி அவர்கள் செயல்படுகிற ஆற்றலையும், அவர் தயாரித்துள்ள இந்த பட்ஜெட்டையும் நேரிடையாகப் பார்க்க வெட்கப்பட்டுக் கொண்டு தங்கள் தொகுதியில் வாக்களித்த வாக்காளர்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

அது மட்டுமல்ல. இந்த பட்ஜெட்டைப் பொறுத்த வரை கிட்டத்தட்ட 575.35 கோடி ரூபாய் பற்றாக் குறை வரும் என்று தெரிந்தும், தேர்தல் நேரத்தில் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக, எந்த இழப்பு வந்தாலும் பரவாயில்லை, தமிழகத்தினுடைய தாய்மார்களுடைய கண்ணீரைத் துடைக்க வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் மதுவிலக்கை இன்றைக்குத் தீவிரமாக அமுல்படுத்தியிருக்கிறார்கள்.

அது மட்டுமல்ல. ஏழை எளிய மக்கள் பயன் அடைகிற வகையிலே, ஏழை மக்கள் அன்றாடம் உபயோகிக்கிற சமையல் பொருள்களுக்கு இந்த பட்ஜெட்டில் வரியைக் குறைத்திருக்கிறார்கள். ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு கோடி ரூபாய் வீதம் நிதி ஒதுக்கி ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் அந்தப் பணம் போய்ச் சேருகிற வகையில் அதிகப்படியான நிதியை பட்ஜெட்டில் ஒதுக்கியிருப்பதற்காக புரட்சித் தலைவிக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. எம். தங்கவேல்] [1991 செப்டம்பர் 7

விவசாயிகளுக்கு உதவி அளிக்கும் வகையில் வரி வசூல் தொல்லையிலிருந்து விடுதலை அளித்து, நெல், கரும்பு, மஞ்சள், வெற்றிலை, வாழை, தென்னை, சோளம், பருத்தி போன்ற பயிர்களுக்கு வருமான வரியை அறவே விலக்கியிருப்பதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முதியோர்களுக்கு புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்தில் இலவச அரிசியையும், வேட்டியையும் கொடுத்தார்கள். ஆனால் முந்தைய அரசாங்கம் அதை நிறுத்திவிட்டார்கள். இன்றைக்கு புரட்சித் தலைவி அவர்கள் மீண்டும் அந்தத் திட்டத்தை மேற்கொண்டு பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளான செப்டம்பர் 15ஆம் தேதியிலிருந்து கொடுக்க வேண்டும் என்று உத்தரவிட்டிருக்கிறார்கள்.

முற்பகல் 11-35

அதுமட்டுமல்ல. கைத்தறி நெசவாளர்களுக்கு குடும்ப ஓய்வூதியம் கொடுக்கப்பட வேண்டும் என்ற திட்டத்தையும் புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்கு அறிவித்திருக்கிறார்கள். ஆதி திராவிடர்கள், பழங்குடியினருக்கு, நடப்பு ஆண்டில் 50 ஆயிரம் வீடுகள் கட்டப்படும் என்றும், அதேபோல் ஐந்து ஆண்டுகளில் மூன்று இலட்சம் வீடுகள் கட்டிக்கொடுக்கப்படும் என்றும், இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் இந்த பட்ஜெட் மூலம் அறிவித்திருக்கிறார்கள். இதுபோன்று பல்வேறு நலத் திட்டங்களை புரட்சித் தலைவி அவர்கள் இந்த பட்ஜெட்டின் வாயிலாக அறிவித்திருக்கிறார்கள். இந்த பட்ஜெட்டைப் பொறுத்தவரையில் அதை முழு மனதுடன் வரவேற்று, என் தொகுதியில் உள்ள முசிறி, மற்றும் மணச்சநல்லூர் ஆகிய இரண்டு ஊராட்சி ஒன்றியப் பகுதிகள் இருக்கின்றன. அந்தத் தொகுதியில் 60 சதவிகிதம் பகுதி வறட்சிப் பகுதியாக உள்ளது. முந்தைய அரசாங்கம் அதை கடந்த இரண்டாண்டு காலமாக புறக்கணித்திருக்கிறது. என்னை இரண்டாவது முறையாக யார் எதற்காக சட்டமன்றத்திற்கு அனுப்பினார்களோ அவர்கள் கடந்த இரண்டாண்டு காலம் புறக்கணிக்கப்பட்டார்கள். எனது தொகுதிக்கு புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சிக் காலத்தில் விடிவு காலம் ஏற்படுகின்ற வகையில், காவிரி ஆற்றிலிருந்து முசிறி அருகாமையில் உள்ள ஆமூர் பகுதியிலிருந்து கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் 25 ஆயிரம் மக்கள் பயன் அடைகின்ற வகையில் அங்கே தொகுதியில் உள்ள 7 ஊராட்சிகள் பயன் அடைகின்ற வகையில் கொடுந்துறை, தின்னகோணம், வேனகநத்தம், டி. புத்தூர், நெய்வேலி, கோமங்கலம், சித்தாபூர் வரை சுமார் 15 கிலோ மீட்டர் தூரம் தண்ணீரைக் கொண்டுவந்து நிறைவேற்றித்தர

1991 செப்டம்பர் 7] [திரு. எம். தங்கவேல்]

வேண்டுமென்று தங்கள் மூலமாக குடிநீர் வாரியத்துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அதை நிறை வேற்றித் தர வேண்டும். அதேபோல், முசிறி தொகுதியில் எந்தத் தொழிற்சாலையும் இல்லை. அதனால் படித்தவர் களுக்கு வேலைவாய்ப்பும் இல்லை. இப்படிப்பட்ட அவல நிலைமையை போக்க தொழில் துறை அமைச்சர் அவர்கள் நட வடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நிறைய படித்த, பட்டம் பெற்ற இளைஞர்கள் வேலை வாய்ப்பு இல்லா மல் இருக்கிறார்கள்.

முசிறி தொகுதியில் அருள்மிகு சமயபுரம் மாரியம்மன் திருக் கோயில் இருக்கிறது. அங்கு ஆண்டு வருமானம் ஒரு கோடி ரூபாயைத் தாண்டிவிட்டது. அந்த வருமானத்தை வைத்து, தேவஸ்தான சார்பில் சமயபுரத்தில் அரசு மகளிர் கல்லூரி ஒன்றை அமைக்க வேண்டுமென்று உங்கள் மூலமாக தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அதே போல அந்த தேவஸ்தானத்தின் மூலமாக பாலிடெக்னிக் ஒன்றும் அங்கே அமைத்துத் தரவேண்டுமென்று உங்கள் மூலமாக புரட்சித் தலைவி அவர்களைக் கேட்டுக்கொள் கிறேன். அதேபோல, தமிழகத்தில் சிறப்பான சுற்றுலா மைய மாக இருக்கிற முக்கொம்பு, வாத்தலையில் அந்த மையத்தில் தமிழ்நாடு சுற்றுலா வாரியம் மூலமாக " தமிழ் நாடு ஓட்டல் " ஒன்றைக் கட்டித் தர ஆவன செய்யுமாறு சுற்றுலா அமைச்சர் அவர்களை தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

முசிறியைப் பொறுத்தவரையில் அதிகப்பட்ச குடிசைத் தொழிலாக விளங்குவது செயற்கை வைரக் கற்களைப் பட்டை தீட்டும் தொழில்தான். இந்தத் தொழிலில் சுமார் 80 ஆயிரம் பேர், ஆண், பெண்கள், ஏழைத் தாய்மார்கள் போன்றவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். அந்தத் தொழிலுக்கு சென்றமுறை இருந்த ஆட்சியாளர்கள் வரியைப் போட்டு, அந்தத் தொழில் பாதிக்கக் கூடிய வகையில் நிலைமையை ஏற்படுத்திவிட்டார்கள். கருணை உள்ளம் கொண்ட புரட்சித் தலைவி அரசு அதற்கு வரிவிலக்கை அளிக்க வேண்டுமென்று தங்கள் மூலமாக தமிழ்நாடு முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களைக் கேட்டுக்கொள் கிறேன். முசிறி தொகுதி மேலும் வளம் பெறும் வகையில் அரசு நடவடிக்கைகளை இந்த பட்ஜெட் மூலம் எடுக்க வேண்டும் என்று கேட்டு, இந்த பட்ஜெட்டைப் பாராட்டி, எனது தொகுதி விவசாயப் பகுதியாக இருப்பதால் அதற்கும் பல நல்ல திட்டங் கள் தீட்ட வேண்டுமென்று கேட்டு, எனக்கு பேச வாய்ப்பு அளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து திரு. எஸ். அண்ணாமலை அவர்கள்.

*திரு. எஸ். அண்ணாமலை : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, நான் வணங்கும் ஆதிபராசக்தி, தமிழக முதல்வர், மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் பாதங்களில் முதலில் என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆலந்தூர் தொகுதியானது, பல்லாவரம் நகராட்சி, ஆலந்தூர் நகராட்சி, நந்தம்பாக்கம் பேரூராட்சி, மீனம்பாக்கம் பேரூராட்சி, திரிசூலம் ஊராட்சி, மூவரசம்பேட்டை ஊராட்சி, சென்னை மாநகராட்சியின் 129, 130, 131 ஆகிய வட்டங்கள் அடங்கிய தொகுதியாகும். இங்கு குடிநீர்ப் பற்றாக்குறை கடுமையாக உள்ளது. கொடுக்கிற குடிநீர்த் திட்டத்தின் மூலம் மக்களின் தேவையில் 40 சதவீதம்தான் குடிநீர் வழங்கப்படு கிறது. இதனால் தொகுதியில் பெரும்பான்மையோர் குடிநீர் இன்றி கஷ்டப்படுகிறார்கள். தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு முதல்வர் அவர்கள், பாலாற்று படுகையிலிருந்து மேலே ஒரு கிணற்றைத் தோண்ட நடவடிக்கை எடுத்து, ஆலந்தூர் பகுதியில் தனிக் கவனம் செலுத்தி, அங்குள்ள மக்களுக்குத் தேவையான குடிநீர் கிடைக்க ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-40

என்னுடைய தொகுதியில் ஆலந்தூர் நகராட்சியில் நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களால் 5-7-1990, எண். 10359/89-4 என்ற கடிதத்தில் 1990–91 முதல் 1993–94 முடியவுள்ள காலத் தில் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்ட கூடுதல் வளர்ச்சிப் பணி களுக்கு கீழ்க்கண்டவாறு ரூ. 1,908.65 இலட்சத்தில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அந்தத் திட்டங்களை அரசு அனுமதிக்கு அனுப்பப்பட்டுள்ளது.

சுடுகாடு, இடுகாடு அபிவிருத்தி செய்தல் ரூ. 11.13 இலட்சம், பூங்காக்கள் அபிவிருத்தி செய்தல் ரூ. 18 இலட்சம், மழைநீர் கால்வாய் அமைத்தல் ரூ. 92.6 இலட்சம், சாலை அபிவிருத்திப் பணிகளுக்கு ரூ. 240 இலட்சம், குடிநீர்த் திட்டப் பணிகளுக்கு ரூ. 110 இலட்சம், பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு ரூ. 137.5 இலட்சம், வருவாய் பெருக்குகிற இனங்களுக்கு ரூ. 10 இலட்சம், கல்யாண மண்டபம் அமைத்தல் ரூ. 20 இலட்சம், சோடியம் வேப்பர் விளக்கு அமைத்தல் ரூ. 25 இலட்சம், சாலைப் பகுதி களை சீரமைக்க ரூ. 15 இலட்சம்; ஆக மொத்தம் ரூ. 1,908.65 இலட்சத்திற்கு அரசு ஆணைக்கு அனுமதிபெற அனுப்பி இருக் கிறார்கள். மேலும், இதேபோன்று பல்லாவரம் நகராட்சியும் அரசுக்கு மதிப்பீடு அனுப்பியுள்ளது. ஆகவே, 1991–92 ஆம் ஆண்டின் நிதிநிலையிலிருந்து இதற்கு ஒதுக்கீடு தந்து, திட்டப் பணிகளை நடத்திட மாண்புமிகு முதல்வர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

1991 செப்டம்பர் 7] [திரு. எஸ். அண்ணாமலை]

இதைப்போல நந்தம்பாக்கம் பேரூராட்சி, மீனம்பாக்கம் பேரூராட்சி, திரிசூலம் பஞ்சாயத்து, மூவரசம்பேட்டை பஞ்சாயத்து வளர்ச்சித் திட்டப் பணிகளுக்கு 1991–92 ஆம் ஆண்டு நிதிநிலையிலிருந்து ஒதுக்கீடு தந்து, திட்டப் பணிகளை நடத்திட மாண்புமிகு முதல்வர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை மாநகராட்சியில் இருக்கிற 129, 130, 131 வட்டங்களில் மின் விளக்குகள், சாலை வசதிகள் செய்து, பொது மக்களுக்கு வசதியாக ஒரு மார்க்கெட் கட்டித்தர மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். எம்.ஜி.ஆர். நகர் நடுநிலைப் பள்ளியில் மதில்சுவர் கட்டித்தர மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

எம்.ஜி.ஆர். நகர் சத்துணவுக் கூடத்தினை சீரமைக்க மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். எம்.ஜி.ஆர். நகர் இடுகாட்டில் எரிகூடங்களும், சுற்று மதில் சுவர்களும் எழுப்ப மாண்புமிகு முதல்வர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன். கே.கே. நகரில் உள்ள மருத்துவமனையில் புறநோயாளிகள் பிரிவில் போதுமான டாக்டர்களும், நர்ஸ்களும் இல்லாத நிலைமை இருக்கிறது. அவர்கள் எண்ணிக்கையை அதிகரித்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். ஆபரேஷன் தியேட்டருக்கு குளுகுளு வசதியும், பராமரிப்பு வசதியும் செய்து கொடுக்கக் கேட்டுக்கொள்கிறேன். சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட எம்.ஜி.ஆர். நகர், சாலிகிராமம், சிவலிங்கபுரம், விஜயராகவபுரம், கன்னிகாபுரம், தசரதபுரம், மதியழகன் நகர், பகுதிகளில் உள்ள குடிசைவாழ் மக்களுக்கு இலவசமாக பாதாள சாக்கடை வீட்டு இணைப்புத் தர மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மேற்குறித்த பகுதியில் குறைந்த கட்டணத்தில் குடிநீர் இணைப்பு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எம்.ஜி.ஆர். நகரில் அமைந்துள்ள பஸ் நிலையம் கே. கே. நகர் பஸ் நிலையம் என்று இருக்கிறது. இதனை எம்.ஜி.ஆர். நகர் பஸ் நிலையம் என்று மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எம்.ஜி.ஆர். நகரில் வருகிற பேருந்துகள் கே.கே. நகர் பஸ் டெப்போ என்று வருகிறது. அதனை எம்.ஜி.ஆர். நகர் பஸ் டெப்போ என்று மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பல்லாவரம் அரசு மருத்துவமனையில் பிணவறை உள்ளது. அதற்கு குளுகுளு வசதி செய்து தர கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-45

மருத்துவ அவசரச் சிகிச்சை பெற சென்னைக்கு வருவதற்கு ஆம்புலன்ஸ் வாகன வசதிகளும் செய்துதரக் கேட்டுக்கொள்கிறேன்.

பம்மல் பகுதியில் உள்ள தோல் தொழிற்சாலைகளிலிருந்தும், பல்லாவரம் பகுதியில் உள்ள தோல் தொழிற்சாலைகளிலிருந்தும் வருகின்ற கழிவு நீர் பல்லாவரம் பகுதியில் உள்ள நிலத்தடி நீரைக் கெடுத்து, சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டு நோய்கள் ஏற்படுகின்றன. இதைத்தடுத்து இதற்கு ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஹட்கோ நிறுவனத்தின் மூலமாக பல்லாவரம் நகராட்சிப் பகுதியில் உலர் கழிப்பிடங்களைக் கட்டித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மூவரசன்பேட்டை, திரிசூலம், மீனம்பாக்கம், நந்தம்பாக்கம் பகுதிகளில் உள்ள இடங்களிலும், இதுபோன்ற திட்டப் பணி களை செய்துகொடுக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

மீனம்பாக்கம் ஆதி திராவிடர் அரசினர் பள்ளியில் புதிதாகக் கட்டிடம், கழிப்பிடம் மற்றும் சுற்றுச் சுவர் கட்ட திட்ட மதிப்பீடு செய்து, ஆதி திராவிடர் நலத்துறை இயக்குநர் மூலம் அரசுக்கு அனுப்பப்பட்டு உள்ளது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் 1991–92 ஆம் ஆண்டு நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்துதரக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆதம்பாக்கம் திருவள்ளுவர் நடுநிலைப் பள்ளி தற்போது தனியாரிடத்தில் உள்ளது. இந்தப் பள்ளி மிகவும் சீர்கெட்டு உள்ளது. ஆதிதிராவிட மக்களின் குழந்தைகள் பெரும்பான்மை யாகப் படிப்பதால் மேற்கண்ட தனியார் பள்ளியை ஆதி திராவிடர் நலத்துறையே ஏற்று நடத்துமாறு கேட்டுக் கொள்கிறேன்.

குரோம்பேட்டை பாரதி நூற்றாண்டு அரசினர் மகளிர் மேல்நிலைப்பள்ளி தனியார் நிலத்தில் உள்ளது. அதற்குப் புதியதாகக் கட்டிடம் கட்ட இயலாததால், கொட்டகைக்குள் மாணவிகள் மழைக் காலங்களில் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். நிதிநிலை அறிக்கையில் கல்வித்துறைக்கு நிதி ஒதுக்கியிருந்தாலும் புதிதாகக் கட்டிடம் கட்ட இயலவில்லை. எனவே, வருவாய்த் துறை மூலம் நில ஆர்ஜிதம் செய்து தரக் கேட்டுக்கொள்கிறேன்.

1991–92 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் அறிவித் திருக்கிற மலிவு விலை மது ஒழிப்புத் திட்டத்தை அமுல்படுத்தி, இதனால் அரசுக்கு 322 கோடி ரூபாய் அளவிற்கு வருவாய் இழப்பு ஏற்பட்ட நிலையிலும் தமிழகத்தில் இருக்கிற தாய்மார்கள் நிம்மதியாக வாழ இந்தத் திட்டத்தை அமுல்படுத்திய முதல்வர் அவர்களுக்கு, தமிழக மக்களும், ஆலந்தூர் சட்டமன்ற உறுப் பினர் என்ற முறையில் நானும், நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

1991 செப்டம்பர் 7] [திரு. எஸ். அண்ணாமலை]

அதேபோல் ஏழை எளிய மக்கள் தங்க நகைகள் வாங்குவதற்கு வரிச்சலுகை அறிவித்திருக்கிற முதல்வர் அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழக மக்களுக்கு கிடைக்கின்ற உணவுப் பொருட்களின் விலை உயராமல் அதே நிலையில் இருக்கச் செய்திருக்கும் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். மக்களுக்குத் தேவையான மிளகாய், மஞ்சள் போன்ற பொருட்களுக்கு வரிச்சலுகை செய்திருப்பதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

காவல் துறையினரிடம் உள்ள நிதிநிலையை விட அதிகமான நிதிநிலையை வைத்திருக்கின்ற, தமிழகத்தில் உள்ள விடுதலைப் புலிகள் மூலம் ஆயுதக் கலாச்சாரம் பரவி, நாடெங்கும் ஆயுதத் தொழிற்சாலை மற்றும் கிடங்குகள் அமைத்து, சட்டம் ஒழுங்கு சீர்கெட்டுப் போய் இருக்கிறது. இந்த நிலையில் மக்கள் அச்சமின்றி வாழ காவல்துறையைச் சீரமைத்து நவீனப்படுத்தினால் காவல்துறையில் உள்ளவர்கள் ஊக்கத்துடன் பணிபுரிய முடியும். எஞ்சியிருக்கும் விடுதலைப் புலிகளை விரட்டி, தமிழக மக்களுக்கு பாதுகாப்பு அளித்துள்ள மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவிக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11.50

அரசுப் பணியாளர்கள், கைத்தறி நெசவாளர்கள், மீனவர்கள் ஆகியோர்கள் இறந்தால், அரசு உதவித் தொகை அளிக்கிறது.

அதைப் போன்று கட்டிடத் தொழிலாளர்களைக் குறித்து நிதிநிலை அறிக்கையில் எதுவும் குறிப்பிடவில்லை. நான் ஒரு கொத்தனார் என்பதை அன்பு கூர்ந்து முதல்வர் அவர்கள் மனதில் கொண்டு, கட்டிடத் தொழிலாளர்களுக்கு இந்த நிதியுதவியைத் தரவேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போன்று கைத்தறித் துறையில் பணியாற்றுகின்ற அலுவலர் திரு. க. வீரபத்திரன் விளையாட்டில் பல சாதனைகளைப் புரிந்திருக்கிறார். என்னை தமிழ்ப் பண்பாட்டு மையத்தில் ஒரு பாராட்டிற்காக வரவழைத்த போது அவருக்கும் பாராட்டுதல்களைத் தந்தார்கள். இந்த ஆண்டு 1991 இல் ஐரோப்பாவில் பின்லாந்து நாட்டில் நடைபெற்ற உலக விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்டு மரத்தான் ஓட்டப் பந்தயத்தில் 42 கிலோமீட்டர் ஓடி, வெண்கலப் பதக்கத்தைப் பெற்றிருக்கிறார்கள். கடந்த ஆண்டு 1990ல் மலேசியாவில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டியில் மரத்தான் ஓட்டப்

பந்தயத்தில் வெண்கலப் பதக்கத்தைப் பெற்றிருக்கிறார்கள். அதைப் போன்று பல சாதனைகளைப் புரிந்திருக்கின்ற விளையாட்டு வீரர்களுக்கு பொதுவாக இந்தியாவிலும், உலக நாடுகளிலும் பதவி உயர்வு, பரிசுத் தொகைகளைக் கொடுத்து பாராட்டுகின்றார்கள், உற்சாகப்படுத்துகின்றார்கள்.

குறிப்பாக கேரள மாநிலத்தைச் சேர்ந்த பி.டி. உஷாவிற்குப் பதவி உயர்வும் ரொக்கப் பணமும் அந்த அரசால் கொடுக்கப்பட்டுள்ளது. வீடுகள் கொடுத்துள்ளார்கள். ஆந்திர அரசு கிரிக்கெட் வீரர் அசாருதீனுக்கு பதவி உயர்வும், ரொக்கப் பணமும் கொடுத்துள்ளார்கள். வீடுகளும் கொடுத்திருக்கிறார்கள். தமிழ்நாட்டைச் சேர்ந்த ஹாக்கி வீரர் பாஸ்கரனுக்கும், கிரிக்கெட் வீரர் ஸ்ரீகாந்திற்கும் தமிழக அரசு வீடுகள் கொடுத்துள்ளது.

தண்ணீரில் மிதந்து கின்னஸ் சாதனை புரிந்த போலீஸ்காரர் சண்முகத்திற்கு சப்-இன்ஸ்பெக்டராக பதவி உயர்வு அளிக்கப்பட்டுள்ளது. அதைப் போன்று கைத்தறித் துறை அலுவலர் திரு. க. வீரபத்திரனுக்கும் தமிழகத்தில் பதவி உயர்வு அல்லது ரொக்கப் பணமும், வீடும் கொடுத்து உற்சாகப்படுத்துமாறு மாண்புமிகு முதலமைச்சர், புரட்சித் தலைவியைக் கேட்டுக்கொண்டு, இன்று தமிழகத்திலே நிதிநிலையில் பற்றாக்குறை இருக்கின்றபொழுது தமிழ்நாட்டு மக்கள் எல்லோரும் எதிர்பார்த்துக்கொண்டிருந்த நாளில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், கழகத்தினுடைய காவல்தெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவியினுடைய நிதிநிலை அறிக்கையை அளிக்கின்றபொழுது தமிழகத்து மக்கள், ஏழையெளிய, நடுத்தரவாசிகள் எல்லோரும் உள்ளார மனமார்ந்து இந்த பட்ஜெட்டினை பாராட்டி வரவேற்கிறார்கள் என்று சொல்லி நான் இந்த நிதிநிலை அறிக்கையை மனமாரப் பாராட்டி எனக்கு வாய்ப்பளித்த பேரவைத் தலைவருக்கு நன்றி சொல்லி, விடைபெறுகின்றேன், நன்றி வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். எஸ். ராமசுப்பு.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991–92ஆம் ஆண்டிற்கான பட்ஜெட் விவாதத்தில் பேச வாய்ப்பளித்த பேரவைத் தலைவருக்கு நன்றியைச் சொல்லிக்கொண்டு, பொருளாதாரச் சிக்கல், விலை உயர்வு போன்ற ஒரு இக்கட்டான சூழ்நிலையில் மிகத் திறமையாக, அருமையாக இந்த பட்ஜெட்டினை நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் தயாரித்திருக்கிறார்கள். இந்த பட்ஜெட்டில் சுமார் ரூ. 575 கோடிக்கு பற்றாக்குறையாக இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு வழிவகைகள் இந்த பட்ஜெட்டிலே சொல்லப்படவில்லை. கடன்

1991 செப்டம்பர் 7] [திரு. எஸ். எஸ். ராமசுப்பு]

ஈட்டுப் பத்திரங்களை வெளியிட்டு இந்த பற்றாக்குறையை நீக்குவதற்கு நிதியாதாரத்தைத் தேடுவதற்கு மத்திய சர்க்காரிடம் அனுமதி கேட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருப்பது மிகவும் வரவேற்கத் தகுந்த ஒரு நிகழ்ச்சியாகும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

எங்கும் இலவசம், எதிலும் இலவசம் என்று இலவச அரிசி, இலவச வேட்டி, இலவச சேலை என்றெல்லாம் இதற்கு முந்தைய அரசானது பல்வேறு இலவச திட்டங்களைப் போட்டு, வாக்குகளுக்காக மக்களை ஏமாற்றி அந்த இலவசத் திட்டங்களை நிறைவேற்ற முடியாமல் போன காலங்கள் எல்லாம் உள்ளன. ஆனால் அந்தத் திட்டங்கள் எல்லாம் இங்கே இல்லாமல் இலவசத் திட்டங்களைக் கைவிட்டு ஆக்க பூர்வமான திட்டங்களை இந்த பட்ஜெட்டில் போட்டிருப்பது மிகவும் வரவேற்கத் தகுந்ததாகும்.

முற்பகல் 11-55

அடுத்து அரசு இயந்திரம். மிக முக்கியமாக நான் இதிலே சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கும் அதைப் போல மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும்-நான் பொதுப்பணிக் குழுவிலே இருப்பதனால்—பொதுக் கணக்குக் குழுவிலே இருப்பதனால் அதை நான் சொல்ல விரும்புகிறேன். நீங்கள் போடுகின்ற பட்ஜெட்டானது அங்கே திறமையாக மக்களுக்குச் செயலாற்ற வேண்டுமென்றால், அரசினுடைய அதிகாரிகள் சிறப்பாக செயலாற்ற வேண்டும். ஆனால் அந்த தணிக்கைத் துறை அதிகாரிகள் சொல்லும்போது சுமார் 880 தணிக்கை அறிக்கைகளுக்கு அதில் சம்பந்தப்பட்ட துறைகளிடமிருந்து எந்தப் பதிலும் வரவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இவ்வளவு மோசமான நிர்வாகத்தை வைத்துக்கொண்டு, நீங்கள் எவ்வளவு ரூபாய் கொட்டினாலும் கூட இந்தப் பட்ஜெட்டானது மக்களுக்குச் சென்று அடையாது. மக்களுக்கு சிறப்பான முறையில் திட்டங்கள் தீட்டப்பட முடியாது என்பதை உங்கள் மத்தியிலே சொல்லிக் கொண்டு, சம்பந்தப்பட்ட அரசு அதிகாரிகளின் துறைகளிலே இருந்து உடனடியாக பதிலை தருவதற்கு, அந்தநீதத் துறைக்கு நீங்கள் சொல்ல வேண்டும் என்பதை இந்த அவையின் மூலமாக நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதற்கு அடுத்தாற்போல் காவல் துறை. காவல் துறைக்கு 10 கோடி ரூபாய் இன்றைக்கு ஒதுக்கியிருக்கிறார்கள். பத்து கோடி ரூபாய் காவல் துறையை நவீனப்படுத்துவதற்காக, காவல் துறையிலே புதிய வாகனங்கள் புதிய ஒயர்லெஸ் கருவிகளெல்லாம் கொடுப்பதோடு மட்டுமல்லாமல், பல்வேறு காவல் நிலையங்களிலே போய்ப் பார்த்தால் போலீஸ் அதிகாரிகள் போலீஸ்

[திரு. எஸ். எஸ். ராமசுப்பு] [1991 செப்டம்பர் 7

காவலர்கள் எல்லாம் 15 ஆண்டுகளுக்கு முன்னால் எப்படி இருந்தார்களோ அதே நிலையில் தான் இன்றைக்கும் இருக்கிறார்கள். அந்த நிலைமைகள் எல்லாம் மாற்றி அமைக்கப்பட வேண்டும். ஏனென்றால் இப்போது கள்ளச் சாராயத்தை ஒழிப்பதிலே நம்முடைய அரசாங்கமானது மிகத் தீவிரமாக செயலாற்றிக் கொண்டிருக்கிறது. இந்த செயலாற்றலைத் தீவிரப் படுத்தி மிகச் சிறப்பாக பணி ஆற்ற வேண்டுமென்றால் போலீஸ் அதிகாரிகளுக்கு, நிறைய போலீஸ் காவலர்களை கொடுக்க வேண்டும். அதேபோல காவல் துறையானது கள்ளச் சாராய சமூக விரோதிகளிடமும் ஆரோக்கியம் இல்லாத சில அரசியல் வாதிகளிடமும் சிக்கித் தவித்த அந்த நிலைமைகள் எல்லாம் இப்போது இல்லாமல் செய்வதை இந்த அரசு கண்காணித்து வருவது மிகவும் வரவேற்கத் தகுந்த ஒன்றாகும்.

அடுத்து வேளாண்மை. இந்த நாட்டில் வேளாண்மையானது மிகவும் முக்கியமானதாகவும், முதுகெலும்பாகவும் இருக்கிறது. இங்கே தரமான விதைகள் கொடுப்பதற்கும் பூச்சி மருந்துகள் கொடுப்பதற்கும் திட்டங்கள் வகுத்திருக்கிறார்கள். ஆனால் அந்த தரமான பூச்சி மருந்துகளும், விதைகளும் அங்கே டெப்போக்களிலே கொடுக்கப்படுகின்றனவா, விவசாயிகளுக்குச் சென்று அடைகின்றனவா என்றால் நிச்சயமாக இல்லை என்ற சூழ்நிலை தமிழகத்திலே இருக்கிறது. இதை மாற்றி அமைக்க வேண்டும். ஏனென்றால் வெளியே உள்ள கடைகளிலே மார்க்கெட்டுகளிலே, பப்ளிக் மார்க்கெட்டுகளிலே அரசாங்கம் கொடுக்கும் விதைகள் பூச்சி மருந்துகள் எல்லாம் கிடைக்கக் கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. இப்போது பூச்சி மருந்துகளுக்கான வரியை 31/2 சதவீதத்திலிருந்து 3 சதவீதமாக குறைத்திருக்கிறீர்கள். இது வரவேற்கத் தகுந்ததாக இருந்தாலும் வெளியே உள்ள கடைகளிலே இவைகள் அதிகமாக விற்பதைத்தடை செய்வதற்கு ஒவ்வொரு ஊரிலேயும், அரசாங்கமே இந்த விநியோகக் கடைகளை திறந்து பூச்சி மருந்துகள் போன்ற விவசாயப்பொருள் களை விற்பதற்கு வழி வகை செய்ய வேண்டும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து பாசனத் திட்டம், விவசாயத்திற்கு பாசனத் திட்டம் முக்கியமானது ஆகும். வரப்பு உயர நீர் உயரும். நீர் உயர நெல் உயரும் என்று சொல்லுவார்கள். இன்றைக்கு காவிரி நதிநீர் பிரச்சினையை தஞ்சாவூரிலே உள்ள விவசாயிகள் உயிர்ப் பிரச்சினையாக கருதக்கூடியது சுப்ரீம் கோர்ட்டிலே இருக்கிறது என்பதை இந்த மாமன்றத்திலே நாம் எல்லோரும் பேசியிருக்கிறோம். அதிலே எங்களுடைய தலைவர், வாழப் பாடி இராமமூர்த்தி அவர்கள் தன்னுடைய பதவியைக் கூட துச்சமாக மதித்து ராஜினாமா செய்து தமிழகத்தினுடைய குரலை அங்கே ஒலிக்கச் செய்திருக்கிறார்கள். இந்த மாபெரும் தியாகத்திற்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு பெரிய புகழாரமே செலுத்தினார்கள். ஆனால்,

அதோடு மட்டுமல்லாது நம்முடைய மாமன்றத்திலே—ஒரு காலத்திலே இந்தி ஆதிக்கம் வந்து விடாமல் இருப்பதற்காக—மாண்புமிகு திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் அன்றைக்கு தன்னுடைய பதவியை எப்படி ராஜினாமா செய்தார்களோ தமிழகத்தினுடைய குரல்வளை நெறிக்கப்படும்போது, தமிழனுடைய உரிமைக்காக அங்கே குரல் கொடுத்ததைப் போல இன்றைக்கு அவர்கள் ராஜினாமா செய்திருக்கிறார்கள். அதற்காக இந்த மாமன்றத்திலே ஒரு பாராட்டுத் தீர்மானமாக அதனை வைக்கவேண்டும் என்பதை உங்கள் மத்தியிலே கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து எங்களுடைய பகுதியான உக்கிரங்கோட்டை அருகில் உள்ள வாகைக் குளத்தில், அங்கேயிருந்து ஒரு கால்வாயை வெட்டிக் கொண்டு வருவதற்கும், அதைப் போல மானூரான் கால்வாய், மாறாந்தைக் கால்வாய், என்று எங்கள் தொகுதியில் உள்ள கால்வாய்களை சீர்படுத்துவதற்கும் நீங்கள் வழி வகை செய்து கொடுக்க வேண்டும் என்பதோடு, ஆலங்குளத்திலேயிருந்து வருகின்ற ஒரு கால்வாய் 20 ஆண்டுகளுக்கு முன்னால் பெருந்தலைவர் காமராசர் அவர்கள் காலத்திலே கட்டப்பட்ட கால்வாய் இன்னமும் சீர்படுத்தப் படாமல், தண்ணீர் வருவதற்கு ஏதுவாக இல்லாமல் இருக்கிறது. அதில் அலைவுகள் எல்லாம் பாய்ச்சி சிறப்பாக அந்தக் கால்வாயை செம்மைப் படுத்தித் தரவேண்டும் என்பதை இந்த மாமன்றத்திலே சொல்ல விரும்புகிறேன்.

நண்பகல் 12-00

'தமிழன் என்று சொல்லடா, தலை நிமிர்ந்து நில்லடா' 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்று ஒரு காலத்திலே தமிழனுக்கு என்று ஒரு தனிப் பெருமை இருந்தது. ஆனால் நம்முடைய ராஜீவ் காந்தி அவர்களை—எங்களுடைய ஒப்பற்ற தலைவரை இந்தத் தமிழகத்திலே இழந்ததனால் அந்தப் பெருமை போய்விட்டது. திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சிக் காலத்திலே விடுதலைப் புலிகளுக்கு இங்கே வித்திட்டு துப்பாக்கி கலாச்சாரத்தை இந்த நாட்டிலே பரவவிட்டதனால் இன்று அந்தத் தலைவனை இழந்து தவிக்கின்றோம். இந்த காலக் கட்டத்திலே சி.பி.ஐ. அதிகாரிகள் மற்றும் சி.பி.ஐ. துறையினர் மிகச் சிறப்பாக சில நடவடிக்கைகள் எடுத்தாலும் கூட இன்னும் அவர்கள் சிறப்பாக நடவடிக்கை எடுத்து, யார் யார், எந்தெந்த பின்னணியிலிருந்து இந்தக்கொலை புரிவதற்கு காரணமாக இருந்தார்களோ அவர்கள் யாராக இருந்தாலும் சரி, எந்தப் புலியாக இருந்தாலும் சரி, எந்த கட்சியினுடைய அரசியல் தலைவராக இருந்தாலும் சரி அவர்களை கொண்டு வருவதற்கு கடுமையாக முயற்சி எடுக்க வேண்டும். அவர்களுக்கு கடும் தண்டனை கொடுக்க வேண்டும் என்று இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. எஸ். எஸ். ராமசுப்பு] [1991 செப்டம்பர் 7

அடுத்து போக்குவரத்துத் துறை. போக்குவரத்து அமைச்சர் அவர்களுக்கு மிக முக்கியமான ஒன்றை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு திருநெல்வேலி மாவட்டத்தை எடுத்துக் கொண்டால், ஒவ்வொரு கிராமத்திற்கும் நாங்கள் செல்லும்போது பஸ் பிரச்சினையால் மக்கள் பேரவதிக்கு உள்ளாகியிருக்கிறார்கள். காலையில் மாணவர்கள் செல்ல முடியவில்லை. பொது மக்கள் செல்ல முடியவில்லை என்ற சூழ்நிலை இருக்கிறது. நீங்கள் மிகக் கவனமாக இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன். ஏனென்றால் பஸ்ஸை ஓட்டுகின்ற தொழிலாளர்களுக்கும், பொது மக்களுக்கும் இடையிலே எந்தக் மன கசப்பும் ஏற்பட்டு விடாமல் இங்கே இருக்கின்ற நம்முடைய அமைச்சர் பெருமகனார் அவர்கள் சீக்கிரமாக இதற்கு வழிவகை செய்து கூடுதலாக பஸ்ஸை விடுவது அல்லது ஏதாவது ஒரு வழியை உருவாக்கி இந்த பஸ் பிரச்சினையைத் தீர்த்து வைக்கவேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு கிராமத்திற்கும் சென்று வரும்போது அங்கே சாலைகள் எல்லாம் மோசமாக இருக்கின்றன என்று இந்த மாமன்றத்திலே சொல்லியிருக்கிறார்கள். சாலைகள் பழுதுபார்க்கப்பட வேண்டும்.... ஏனென்றால் எங்களுடைய தொகுதியிலே, ஊத்துமலை, ரெட்டியார்பட்டி, மருக்காலங்குளம், கிடாரக்குளம், பிள்ளையார்குளம், பூராங்குளம், செட்டிக்குறிச்சி, நாலாங்குறிச்சி, களக்குடி, காலாமடை, சானார்பட்டி போன்ற ஊர்களுக்கு சுமார் 10 ஆண்டுகளாக சாலைகளே போடப்படாமல், பஸ் போக முடியாத ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கிறது. இதுபோன்ற சாலைகளை நீங்கள் செம்மைப்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து தொழில் துறை. தொழில் துறையிலே முன்னேற்றம் காணவேண்டும் என்று இந்த பட்ஜெட்டிலே சொல்லப்பட்டு இருக்கிறது. தொழிற்சாலையே இல்லாத எங்களுடைய தொகுதியிலும் மற்றும் தமிழகத்திலே தொழிற்சாலைகளே இல்லாத பல பகுதிகளிலும் நீங்கள் புதியதாக தொழிற்சாலைகளை அமைத்து தொழில் வளத்தை பெருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து குடிநீர் பிரச்சினை. இது ஒரு முக்கியமான பிரச்சினை. ஒவ்வொரு கிராமத்திற்கும் குடிநீர் பிரச்சினை முக்கியமான பிரச்சினையாக இருக்கிறது. எங்கள் பகுதிகளிலே கூட அடி பம்புகள் எல்லாம் ரிப்பேராகிக் கிடக்கின்ற சூழ்நிலை இருக்கிறது. அதற்கு ஒரு குழுவை அமைத்து, அந்த அடி பம்புகளை ரிப்பேர் செய்வதோடு மட்டுமல்லாமல் நல்ல நீரைக் கொடுக்க ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

1991 செப்டம்பர் 7] [திரு. எஸ். எஸ். ராமசுப்பு]

எங்கள் பகுதியில் தாமிரபரணி திட்டத்தின் மூலமாக சங்கரன்கோவில் செல்லக்கூடிய அந்த தண்ணீர் திட்டத்தை விரைவாக செயல்படுத்த வேண்டும். அது செயல்படுத்தப்படாமல் இருப்பதனால் பல்வேறு கிராமங்களிலே இந்த இணைப்புகள் கொடுக்கப்படாமல் இருப்பதால் இன்றைக்கு தண்ணீர் பிரச்சினை கடுமையாக இருந்து கொண்டிருக்கிறது. இதை நீங்கள் தீர்த்து வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கீழப்பாவூர் தண்ணீர் திட்டத்தை விரைவாகச் செயல்படுத்தி அங்கே குடிநீர் வழங்கவும் கேட்டுக்கொள்கிறேன்.

கல்வி இல்லாதவர்கள் களர் நிலத்திற்கு சமம் என்று சொல்வார்கள். மாநில பள்ளி சாராக் கல்வியை ஏற்படுத்தி இன்றைக்கு ஒரு புரட்சியை ஏற்படுத்தியிருக்கிறீர்கள். படிப்பு சொல்லிக் கொடுக்கும் ஆசிரியர்களுக்கு, ஒரு மாணவருக்கு 100 ரூபாய் வீதத்தில் அளிக்க நீங்கள் வழி வகுத்திருக்கிறீர்கள். அந்த 100 ரூபாய் போதுமானதாக இருக்காது என்பது என்னுடையகருத்தாகும். ஒவ்வொரு மாணவனுக்கும் 250 ரூபாய் என்ற வீதத்தில் நீங்கள் கொடுக்க வேண்டும் என்று இந்த மாமன்றத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், நம்முடைய நிதியமைச்சர் அவர்களையும், கல்வி அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது.) இன்றைக்கு கள்ளச் சாராயமானது மிகச் சிறப்பாக.........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒரு நிமிடத்தில் முடித்து விடுங்கள் மாண்புமிகு உறுப்பினர்கள் கவனிக்க வேண்டும். இன்னும் 9 பேர்கள் பேசி முடிக்க வேண்டும். அவர்களுக்கெல்லாம் வழிவிட்டு மாண்புமிகு உறுப்பினர் ராமசுப்பு அவர்கள் ஒரு நிமிடத்தில் முடித்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-05

திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்விச் சாலைகளைப் பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்போது சொன்னார்கள் அதாவது அரசு நடத்துகிற யூனியன் பள்ளிகளில் மிக சிறப்பாக பாடம் சொல்லிக் கொடுக்கப்படாமல் உள்ளது. அதுமட்டுமல்ல. அதன் கட்டிடங்கள் மிகவும் பாழடைந்த நிலையில் உள்ளன. கழிப்பிட வசதிகள் இல்லாத பள்ளிகள் ஏராளமாக உள்ளன. இது போன்ற நிலைமைகளை மாற்றி அமைக்க வேண்டும். ஒரு கூடத்திற்குள்ளேயே 8-வது வகுப்பு வரைக்கும் நடத்துகிறார்கள். ஒரு மறைப்புக்கூட இல்லாமல் அங்கே கிளாஸ் நடத்தப்படுமானால் எப்படி 'ஸ்டாண்டர்டு ஆப் எடுகேஷன்'—ஐ அங்கே

கூட்ட முடியும் என்பதை நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். இதுபோன்ற நிலைமைகளை இந்த அரசு மாற்றியமைக்க வேண்டும் கள்ளச் சாராயத்தை ஒழித்ததற்காக மக்கள் இன்றைக்கு பெரிதும் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். இந்தத் திட்டத்தை இறுதி வரை முழுமையாக பூரண மது விலக்கை ஏற்படுத்தும் வரை நீங்கள் சிறப்பாக செயற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, ஆதி திராவிட மக்களுக்காக சிறப்பான திட்டத்தை இங்கே வைத்து இருக்கிறீர்கள். 50 ஆயிரம் வீடுகள் கட்டிக் கொடுக்கப் போவதாகச் சொல்லியிருக்கிறீர்கள். நான் இங்கே ஒரு கோரிக்கை வைக்க விரும்புகிறேன். ஆதி திராவிட கிருத்துவ மக்கள் அந்தப் பலனை அடையாமல் இருக்கிறார்கள். அந்த ஆதி திராவிட கிருத்துவ மக்களும் அந்தப் பலனை அடைவதற்கு எப்படி இந்துக்களுக்குக் கொடுக்கிறீர்களோ அதேபோல் ஆதி திராவிடர்கள் அனைவருக்கும் அனைத்துச் சலுகைகளையும் வழங்குவதற்கு இந்த அரசு சட்டங்கள் போட வேண்டும் என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல பனையேறும் தொழிலாளர்கள் பிற்படுத்தப் பட்ட மக்களாக மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களை தாழ்த்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட இனத்தில் சேர்த்து அவர்களுக்கு சலுகைகள் வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இவ்வளவு நேரம் பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறுகிறேன். இந்த அருமையான பட்ஜெட்டை வரவேற்று மக்களுக்காக அரசு மிஷினரியை நீங்கள் முடுக்கிவிட்டு அவர்கள் இந்தத் திட்டங்களை எல்லாம் சிறப்பாக செயலாற்றுவதற்கு கண்காணிப்பாக இருக்க வேண்டுமென்று சொல்லி முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. கே. முனி வெங்கடப்பன்.

திரு. கே. முனிவெங்கடப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டங்கள் செய்வதும் பட்டங்கள் ஆள்வதும் பாரினில் பெண்கள் அன்றோ என்று புரட்சிக் கவிஞன் கண்ட கனவை நனவாக்கிய நாடு போற்றும் நல்ல தலைவியே ; பேரறிஞர் அண்ணாவின் கொள்கைகளையும் மறைந்த மாமேதை டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் செயல் திட்டங்களை நிறைவேற்ற வந்த மாதர்குல மாணிக்கமே ; தமிழ் மக்களின் காவல் தெய்வமே ; நீங்கள் தமிழ்நாட்டுக்கு மட்டுமா காவல் தெய்வம் ; இல்லவே இல்லை நல்லதமிழ் பேசும் அனைத்துலக மக்களுக்கும் நீங்கள் காவல் அரணாக இன்றைக்கு காட்சி அளிக்கிறீர்கள். எம்.ஜி.ஆர். பள்ளியில் அரசியல் பயின்ற அரசியல் வித்தகரே ; பல இன்னல்களையும், துன்பங்களையும் வெற்றியின் படிக்கட்டு

களாக்கி உங்களை மின்மினிப் பூச்சி என்று சொன்னவர்களை எல்லாம் மின்னல் வேகத்தில் வேரோடும் வேரடி மண்ணோடும் வீழ்த்திய உன்னத தலைவியே; நான் வணங்கும் மனித தெய்வமே; புரட்சித் தலைவி அவர்களே, உங்களை வாழ்த்த எனக்கு வயது இல்லை வணங்குகிறேன் அம்மா. உங்கள் பொற்பாதங்களைத் தொட்டு வணங்கி என் கன்னிப் பேச்சை இந்த மாமான்றத்தில் துவக்குகின்றேன் வாழ்த்துங்கள் தாயே. இந்த மாமான்றத்தில் என்னைப் பேச அனுப்பி வைத்த என்னுடைய கிருஷ்ணகிரி தொகுதி வாழ் மக்களுக்கும் என் மனம் நிறைந்த நன்றியை அவர்களின் பாதங்களில் காணிக்கையாக்குகிறேன்.

சொல்வதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம் என்று வெறும் வார்த்தை மாய ஜாலங்களைப் போல் இல்லாமல் சொல்வதை எல்லாம் செய்வோம் என்று நிரூபிக்கும் வகையில் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும் இந்த நிதிநிலை அறிக்கையை தயாரித்து இன்றைக்கு நாடே போற்றும் வகையில் அளித்து இருக்கிறார்கள். பின்தங்கிய மாவட்டமான தர்மபுரி மாவட்டத்தை முன்னேற்ற தத்து எடுத்துக்கொண்டு 15 கோடி ரூபாயில் கருங்கல் மெருகூட்டும் தொழிற்சாலையும், சுமார் 25 கோடி ரூபாயில் பல்வேறு நலத் திட்டங்களையும் கொண்டு வந்த இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கு காலம் எல்லாம் நன்றி சொல்ல தர்மபுரி மாவட்ட மக்கள் கடமைப்பட்டு இருக்கிறார்கள். கடந்த 50 ஆண்டு காலமாக கிருஷ்ணகிரியில் தீர்க்கப் படாமல் இருந்த பெருங்குறையை போக்கி பேருந்து நிலையத்திற்கு அடிக்கல் நாட்டிய மாபெரும் தலைவி அவர்களுக்கு எங்கள் தொகுதி வாழ் மக்கள் சார்பாகவும், என்னுடைய சார்பாகவும் நன்றியை தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12—10

இதற்கு மேலாக எங்கள் மாவட்டத்தில் பல ஆண்டு காலமாக வேண்டிக்கொண்டிருந்த பெண்கள் கல்லூரியை இதுவரையில் எந்த அரசும் கொண்டு வராததை, இன்றைக்கு நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே எங்கள் மாவட்ட மக்கள் சார்பாகவும், மாவட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பாகவும் நான் என் நன்றி கலந்த காணிக்கையை புரட்சித் தலைவி அவர்களின் பொற்பாதங்களில் வைத்து வணங்குகிறேன். மேலும் இதுவரை எந்த அரசும் செய்யாத இந்த நல்ல காரியத்தை தாயுள்ளத்தோடு செய்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களிடம் ஒரு அனுமதி கோருகிறேன். அதேநேரத்தில் இந்தக் கல்லூரி அமைய அனுமதி கொடுத்த மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறுவதோடு, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களிடத்திலும் ஒரு அனுமதி கோருகிறேன். தாயுள்ளத்தோடு மாண்புமிகு முதல்வர் அவர்கள்

கொடுத்த இந்தக் கல்லூரிக்கு அன்னை வேதா மகளிர் கல்லூரி என்ற பெயர் சூட்ட இந்த மாமன்றம் அனுமதி கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை இந்த மாமன்றத்திலே வைக்கிறேன். அதே மாதிரி இன்றைக்கு நாம் எல்லோரும் போற்றிப் புகழும்படி ஒரு நல்ல சூழ்நிலையில் நிதிநிலை அறிக்கையை தயாரித்து அதன்மூலம் ஏழையெளிய மக்கள் பயன்பெறவும், படித்த இளைஞர்கள் வேலை வாய்ப்பு பெறவும், பெரிய, வசதி படைத்த பணக்காரர்கள் பல தொழில்களைத் துவக்கினால் இந்த அரசாங்கம் பல சலுகைகளைக் கொடுக்கவும் தயாராக இருக்கிறது எல்லாவகை மக்களும் பயன்பெறத்தக்க அளவிற்கு அரசாங்கம் நடத்திக் கொண்டிருக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வெற்றிபெற்ற மாவட்டம் தர்மபுரி மாவட்டம். மாண்புமிகு புரட்சித் தலைவி தத்து எடுத்துக்கொண்டுள்ள மாவட்டம் தர்மபுரி மாவட்டம். ஆகவே, இந்த மாமன்றத்தை நான் கேட்டுக்கொள்ள விரும்புவது எங்கள் தர்மபுரி மாவட்டத்திற்கு அன்னை வேதா-தர்மபுரி மாவட்டம் என்று பெயர் சூட்டுவதற்கு அனுமதி கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இந்த மாமன்றத்தின் சார்பாக மத்திய அரசுக்கு ஒரு கோரிக்கையை வைக்க விரும்புகின்றேன். நம்மையெல்லாம் வளர்த்து ஆளாக்கிய உத்தமத் தலைவன், பொன்மனச் செம்மல், டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள், '' என்ன வளம் இல்லை இந்த திருநாட்டில்; ஏன் கையை ஏந்த வேண்டும் வெளி நாட்டில்'' என்று கூறினார்கள். அவர் கூறியதுபோல, எல்லா வளங்களையும் கொண்டு வருவதற்கு இந்த நாட்டிலுள்ள அனைத்து நதிகளையும் தேசியமயமாக்கி வடக்கிலே எப்போதும் வெள்ளப் பெருக்கை உண்டாக்கிக் கொண்டிருக்கிற கங்கையையும் இங்கே நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமாக தேய்ந்து வருகிற காவிரியையும் இணைத்துவிட்டால் இந்த நாட்டிலே பஞ்சம் இருக்காது நமது புரட்சித் தலைவர் அவர்கள் பாடிய அந்தப் பாடலின் கருத்து இந்த நாட்டிற்கு நல்ல பயன் அளித்ததாகவும் இருக்கும் என்று தெரிவித்துக் கொள்வதோடு அதை நிறைவேற்றிக் கொடுக்கவேண்டுமென்று, மத்திய அரசை, இந்த மாமன்றத்தின் சார்பாக கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் எத்தனையோ நல்ல திட்டங்களைப் புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்தில் கொண்டு வந்தும், நாம் இன்றைக்கு நிதிநிலை அறிக்கையை சமர்ப்பிக்கும்போது பல நெருக்கடியான சூழ்நிலைகள் ஏற்படுவதற்கு காரணமாக இருப்பது, இதற்கு முன்பு இந்தத் தமிழகத்தை ஆண்டு கொண்டிருந்த தி. மு. க. ஆட்சியால் ஏற்பட்ட ஊழலேயாகும். ஊழல் இல்லாமல் நல்லதொரு ஆட்சியை நடத்தியிருந்தார்களானால் இந்த அளவிற்கு நிதிநிலை மோசமாக இருந்

1991 செப்டம்பர் 7] [திரு. கே. முனிவெங்கடப்பன்]

திருக்காது. ஆகவே, கடந்த ஆட்சியிலே போடப்பட்ட திட்டங்கள் ஆகட்டும், கொண்டுவந்த திட்டங்கள் ஆகட்டும், அவற்றில் ஒன்றுகூட மக்களுக்குப் பயன்படவில்லை. அவைகள் அனைத்தும் அமைச்சர்களுக்கும், தி.மு.க. கட்சிக்காரர்களுக்கும் பயன்படும் வகையிலேதான் இருந்தன. ஆகவே, ஊழல் புரிந்த அந்த அமைச்சர்கள் மீது மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு விசாரணைக் கமிஷன் அமைத்து, அவர்களை விசாரிக்க வேண்டுமென்று இந்த மாமன்றத்தின் சார்பாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் தேர்தல் வாக்குறுதியிலும், மேதகு ஆளுநர் உரையிலும் உறுதியாகக் கூறினார்கள். இந்த மாநிலத்தை இந்தியாவிலேயே முதல் மாநிலமாக, தொழில் துறையில் கொண்டு வருவோம் என்று அதை நிறைவேற்றும் வகையில் பல தொழில்களைத் துவங்க திட்டங்கள் கொண்டு வந்துள்ளதை இந்த நாட்டு மக்கள் வரவேற்கிறார்கள். பொது நிறுவனங்கள் குழுவில் உறுப்பினர் என்ற முறையில் ஒன்றை இங்கே நான் சொல்ல விரும்புகிறேன். அரசாங்கத் தொழில் நிறுவனங்களான டிட்கோ, டிக், சிப்காட் ஆகிய நிறுவனங்கள் நஷ்டத்திலே இயங்கிக் கொண்டு இருக்கின்றன. இந்த நிறுவனங்கள் அரசாங்கப் பணத்தை விரயம் செய்கின்ற நிறுவனங்களாக இருக்கின்றனவே தவிர, அரசாங்கத்திற்கு பணத்தை வசூல் செய்து கொடுக்கும் நிறுவனங்களாகச் செயல்படவே இல்லை. குறிப்பாகச் சொல்லப்போனால், இந்த நிறுவனங்கள் அதிகபட்சம் 30 விழுக்காடுகள்கூட வசூல் செய்து கொடுப்பதில்லை. இந்த நிறுவனங்கள் நல்லமுறையில் இயங்கி 75 விழுக்காடுகளாவது வசூல் செய்து கொடுத்தால் இந்த நாட்டிலே, மாண்புமிகு முதல்வர், புரட்சித் தலைவி அவர்கள் கூறிய அந்த தொழில் வளத்தை நிறைவேற்றுவதற்கும், நமது தமிழகம் இந்தியாவிலேயே தொழில் வளத்தில் முதல் இடத்தில் வருவதற்கும் ஏதுவாக இருக்கும்.

பிற்பகல் 12-15

மேலும், அரசாங்கப் பொது நிறுவனங்களாகச் செயல்படுகின்ற அனைத்து நிறுவனங்களும், அதனுடைய செயல்பாடுகள் திருப்தியளிக்கும் வகையிலே இல்லை. எந்த நிறுவனங்களாக இருந்தாலும் சரி, அது போக்குவரத்துக் கழக நிறுவனங்களாக இருந்தாலும் சரி, மின்சார நிறுவனங்களாக இருந்தாலும் சரி, அவைகளுடைய செயல்பாடுகள் இன்றைக்கு எல்லாம் நஷ்டத்தில் இயங்கிக்கொண்டு இருக்கின்றன. யாராலும் அழிக்க முடியாது, ஒழிக்க முடியாது என்று, அங்கு, இங்கு, எனாதபடி எங்கும் இருந்த கள்ளச்சாராயத்தை ஒரே வாரத்தில் எங்கும் இல்லை என்று இந்திய நாடே போற்றும் அளவிற்கு உத்தமத் தலைவி, நம்முடைய மாண்புமிகு புரட்சித்

தலைவி அவர்கள் உத்தரவு பிறப்பித்து, அதைச் செயல் படுத்திய பெருமை உத்தமத் தலைவி மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களையே சாரும். ஆகவே, மாண்புமிகு முதல்வரவர்கள் இந்தப் பொது நிறுவனங்களின் மீது தனிப் பார்வை செலுத்தி னால் எல்லா நிறுவனங்களும் கட்டாயம் இலாபத்திலே இயங்கி நல்ல பலனை அளிக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள் கிறேன். (மணியடிக்கப்பெற்றது) அதே மாதிரி . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : முடித்துவிடுங்கள்.

திரு. கே. முனிவெங்கடப்பன் : இன்று, நமது மறைந்த மாமேதை டாக்டர் எம். ஜி. ஆர். அவர்களின் கனவை நனவாக் கிட, ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஒரு கோடி ரூபாய் வழங்க உள்ளதை இந்த நாட்டு மக்கள் வரவேற்பதுடன், இது நமது மாண்புமிகு மறைந்த மாமேதை எம். ஜி. ஆர். அவர்களின் அரசு என்பதை நிரூபிக்கும் வகையில் அமைந்துள்ளது.

மேலும், இரு மொழிக் கொள்கையே எங்கள் அரசின் கொள்கை என்று கூறியிருப்பது, இது அண்ணாவின் வழி நடக்கும் அரசு என்பதை உலகுக்குப் பறைசாற்றும் வகையிலே அமைந்துள்ளது.

மேலும், இந்த நல்ல திட்டங்களை தர்மபுரி மாவட்டத் திற்குக் கொண்டு வந்தது மட்டுமல்லாமல், மேலும் தர்மபுரி மாவட்டத்தைத் தொட்டுச் செல்லுகின்ற காவேரி—காவேரியை நாங்களும் தொட்டுச் செல்லுகின்ற ஒரு நிலையிலே இருக்கிறதே தவிர, அதைப் பயன்படுத்த முடியவில்லை. காவேரி நீரைப் பருக முடியவில்லை. இன்றைக்கு தர்மபுரி மாவட்டத்திற்குக் குடிநீர்ப் பிரச்சினையைப் போக்க பல கோடிக்கணக்கான பணம் செலவழித்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே, புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்தில் கொண்டு வந்த, காவேரி நதி நீரை தர்மபுரி மாவட்டத்திற்கு குடிநீராக வழங்கும் திட்டத்தை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் அரசு நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், கிருஷ்ணகிரி வட்ட (மணியடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ; மாண்புமிகு உறுப் பினர் திரு. வ. சத்தியமூர்த்தி**

**திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவரவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்களுடைய வழியில் ஆண்டு கொண்டிருக்கின்ற**

1991 செப்டம்பர் 7] [திரு. வ. சத்தியமூர்த்தி]

பொன் மாதா புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் நமது மாண்புமிகு நடமாடும் பல்கலைக் கழகம் நிதியமைச்சரவர்கள் நம் மத்தியிலே அளித்திருக்கின்ற நிதிநிலை அறிக்கையைக் காண்கின்றபொழுது, ஏழை எளிய மக்களுக்கு இந்த நிதி நிலை அறிக்கை ஒரு அட்சய பாத்திரமாக விளங்குகிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நாட்டிலுள்ள வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்கு இந்த நிதிநிலை அறிக்கை ஒரு வரப்பிரசாதம்—வரப்பிரசாதம் என்று சொல்ல விரும்புகிறேன்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது, வரப்பிரச்சாரமா அல்லது வரப்பிரசாதமா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்களே அதைச் சரி செய்து விட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்களுடைய ஆலோசனை இப்பொழுது தேவைப்படவில்லை. மாண்புமிகு உறுப்பினர் சத்தியமூர்த்தி அவர்கள் தொடர்ந்து பேசலாம்.

திரு. வ. சத்தியமூர்த்தி: இலவச வேட்டி, சேலை வழங்கப் போவதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது. நமது அன்பு உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள்கூட ஆளுநர் உரையிலே குறிப்பிடுகின்ற பொழுது, இலவச வேட்டி, சேலை போன்ற திட்டங்களை மனக் குறையோடு சுட்டிக்காட்டினார்கள். ஆனால், நான் இங்கே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன், எப்படிப்பட்ட சூழ்நிலையில் இந்தத் திட்டத்தை புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் அன்று இந்த நாட்டுக்கு அளித்தார்கள் என்பதை நான் ஒரு உதாரணத்திற்குச் சொல்ல விரும்புகிறேன்.**

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உதாரணத்திற்குக் கூட யாரையும் புண்படுத்துகின்ற வார்த்தைகளைப் பயன்படுத்த வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் சொன்ன வார்த்தைகள் அவைக்குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகின்றன.

திரு. வ. சத்தியமூர்த்தி: **

---

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

பிற்பகல் 12.20

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனிக்க வேண்டும். ** நீங்கள் அப்படிச் சொல்வது சரியாக அமையாது.

திரு. வ. சத்தியமூர்த்தி : சாலையோரத்தில், இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது பயணம் செய்கிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். அவர்களே கருப்புக் கண்ணாடி போட்டுத் தான் செல்வார்கள். அவருடைய காருக்கும் கருப்புக் கண்ணாடி உண்டு. அப்படிச் செல்கிறபோது, ஒரு ஓரத்தில், ஓரிடத்தில் ஒரு பெண் தன்னுடைய மேலாடை இல்லாமல் நின்று கொண்டிருப்பதைப் பார்க்கிறார்கள். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய சிந்தனையில், ஏன் ஒரு பெண் தன்னந்தனியே ஒரு காட்டில் மேலாடை இல்லாமல் இருக்க வேண்டும் என்ற எண்ணம் அவரைத் தூண்டுகிறது. காரில் உள்ள கருப்புக் கண்ணாடியை இறக்குகிறார்கள். தன் கண்ணலே இருக்கிற கருப்புக் கண்ணாடியையும் எடுத்து விடுகிறார்கள். அங்கே அந்தத் தாய் தன்னுடைய மேலாடையின் சேலையின் ஒரு முகப்பை உடுத்திக் கொண்டு, ஒரு முகப்பை ஒரு மரத்தின் கிளையிலே கட்டி வைத்து, அதை உலர்த்திக் கொண்டிருப்பதைப் பார்க்கிறார்கள். ஏன் அந்தத் தாய் தன்னுடைய இல்லத்திற்குச் சென்று, உடையை மாற்றிக் கொள்ளக் கூடாது என்று மறு கேள்வி அவருடைய உள்ளத்திலே எழுகிறது. புரட்சித் தலைவர் அவர்கள் எண்ணிப் பார்க்கிறார்கள் அப்போது. இந்தத் தாய் வீட்டிற்குச் சென்றால், அங்கே கட்டிய சேலைக்கு மாற்று சேலை இல்லை என்ற நிலைமையை அவர் உணர்கிறார். ஆகவே, தமிழக கோட்டைக்கு வருகிறார் ; முதலமைச்சர் ஆசனத்திலே அமர்கிறார். ஏழை எளிய மக்களுக்கு, வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள மக்களுக்கு ஓராண்டுக்கு இரண்டு முறையாவது இலவசமாக சேலை வேஷ்டி வழங்க வேண்டுமென்று உத்தரவிடுகிறார்கள். இதுவே கற்பனை வளம் மிக்க ஒருவருடைய பார்வையில் பட்டிருக்குமேயானால், கதாசிரியர்களாக இருப்பவர்களுடைய பார்வையில் பட்டிருக்குமேயானால், அவர்களும் அந்தக் கருப்புக் கண்ணாடியைக் கழற்றி பார்த்துத்தான் இருப்பார்கள். ஆனால், அவர்களுடைய கற்பனை வளத்தில் இங்கே வந்து உட்கார்ந்து, திரைப் படத்திற்கு அந்தச் சூழ்நிலையையும் அந்தப் பெண்ணின் வயதையும், அவருடைய அங்க அமைப்பையும், பார்த்து, பாடலாக எழுதி சம்பாதித்திருப்பார்கள். ஆனால், ஒரு நல்ல உள்ளம் படைத்த,

---

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1991 செப்டம்பர் 7] [திரு. வ. சத்தியமூர்த்தி]

ஒரு கருணையுள்ளம் படைத்த, தாயுள்ளம் படைத்த புரட்சித் தலைவர் அவர்கள் அப்படிப்பட்ட ஒரு கோலத்தினைக் கண்ட தினால், அந்த உத்தரவு வந்தது என்பதை இங்கே நான் சுட்டிக் காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். ஆகவே, இலவசத் திட்டத்தை ஏளனமாகப் பேசியதை வரவேற்க முடியாது என்பதை நான் இங்கே சொல்லிக் கொள்ளக் கடமைப் பட்டிருக் கிறேன்.

எங்களுடைய இதய தெய்வம் தமிழக முதல்வர் அவர்க ளுடைய கையில் காலிப் பானை என்ற கஜானாவைக் கொடுத்து விட்டு இருந்தாலும், இன்றைய தினம் அதை அட்சயப் பாத்திர மாக மாற்றியிருக்கிறார்கள் என்பதை நான் ஏற்கனவே சுட்டிக் காட்டினேன். ஒரு தாய் மிகவும் வறுமைப் பட்டாலும் கூட, அன்றாடம் உணவிற்கு பொருள் ஈட்டுவதில் சிரமப்பட்டாலும் கூட, தன்னுடைய குழந்தைகளுக்கு வயிறார உணவு அளித்து விடுவாள். வீட்டிலே பானையில் சிறிதளவு உணவு இருந் தாலும், தன் குழந்தைகள் வயிறார உண்ண வேண்டுமென்ற மனம் இருக்கிற காரணத்தினால், எங்கோ பொருள் ஈட்டி, சமைத்து, தன்னுடைய குழந்தைகளுடைய பசியைப் போக்கு வாள். அந்த வகையில்தான், இன்றைய தினம், தமிழக முதல் வர் இந்த நாட்டிற்குத் தேவையான அத்தனைத் திட்டங்களை யும், வெறும் காலிப் பானையான கஜானாவை வைத்துக் கொண்டு நிறைவேற்றி இருக்கிறார்கள் என்பதை நான் நினைவு படுத்த விரும்புகிறேன். நமது தமிழ்நாட்டுப் பெண்கள் வீட்டி லிருந்து காலிப் பானையை எடுத்துக் கொண்டு, கிணற்றிற்கு நீர் எடுக்கச் சென்றால், கிணற்றில் போதுமான ஊற்று இல்லை யென்றாலும் கூட, அவர்கள் காத்திருந்து திரும்ப வீட்டிற்கு நிறை குடத்தோடுதான் திரும்பி வருவார்கள். அதைப் போன்றுதான், இன்றைய தினம் கடந்த இரண்டு மாத காலம் புரட்சித் தலைவியார் அவர்கள் காத்திருந்து, இந்த நிதிநிலை அறிக்கையை ஒரு நிறைவான அறிக்கையாக நாட்டிற்குத் தந் திருக்கிறார்கள். அப்படிப்பட்ட அறிக்கையில் உள்ள திட்டங் களில், எங்கள் பகுதியில் மீனவர் பிரச்சினையை, மிகவும் தலை யாய பிரச்சினையாக இருக்கிற கச்சத் தீவுப் பிரச்சினையை, குறிப்பிட்டிருப்பதை நான் வரவேற்று பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். ஏறக்குறைய இருபதாயிரம் மீனவர் குடும் பங்கள் இந்த அறிக்கையின் மூலம் ஒரு புத்துணர்ச்சி பெற் றிருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கையில் ஒரு நம்பிக்கை ஒளி தென்படுகிறது என்பதைச் சுட்டிக் காட்டக் கடமைப்பட் டிருக்கிறேன். கச்சத்தீவு, ஆரம்பக் காலத்தில் இராமநாதபுரம் மன்னர் குடும்பத்திற்குச் சொந்தமானது. அது ஒருவரை விட்டு ஒருவருக்கு கிரயச் சொத்தாக மாறியிருக்கிறது. அதற்குப் போதுமான ஆதாரங்கள் இன்றைய தினம் அந்தக் குடும்பத்தில் இருக்கிறது என்பதையும் நான் இங்கே நினைவு படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நமது நிதிநிலை அறிக்கையில் மாநில பள்ளி சாரா கல்வித் திட்டங்கள் என்ற ஒரு புதிய திட்டத்தை புரட்சித் தலைவி அவர்களே சிந்தித்து, யாரும் கேட்காமல் தந்துள்ளார்கள். இயேசுநாதர் அவர்களைப் பார்த்து பாடுவார்கள் ; 'தட்டுங்கள் திறக்கப்படும் ; கேளுங்கள் தரப்படும்' என்று, ஆனால், இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களிடமும் சரி ; எங்களுடைய பொன்மாதா புரட்சித் தலைவி செல்வி ஜெயலலிதா அவர்களிடமும் சரி, யாரும் தட்டவும் வேண்டிய தில்லை ; கேட்கவும் வேண்டியதில்லை.

பிற்பகல் 12.25

தட்டாமல், கேட்காமல் அவர்கள் கொண்டு வந்த திட்டம் நமது மாநில பள்ளி சாரா கல்வித் திட்டம், 14 வயதுக்குள் தங்களுடைய பள்ளிப் படிப்பை இடையில் விட்டுச் செல்பவர்களுக்கு ஆங்காங்கே குக்கிராமங்களிலே கல்வி போதிக்கவகை செய்யப் பட்டுள்ளது. 15 இலட்சம் குழந்தைகள் பயிலவும் ஆயிரக்கணக் கானபடித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும் வகையிலும் ஒரு புதிய திட்டத்தை இங்கே தந்து இருப்பதைப் பாராட்டுகிறேன். கல்விக் கண் திறக்கப்பட்டிருப்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். எங்களுடைய தொகுதியில் மலட்டாறு நீர்த்தேக்கம் என்ற ஒரு புதிய திட்டத்திற்கு புரட்சித் தலைவி அவர்கள் 17 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அனுமதி தந்திருக்கிறார்கள். இந்த மன்றத்தில், இந்த மன்றம் தோன்றிய காலத்திலிருந்து, இராமநாதபுரம், முதுகுளத்தூர், கடலாடி, சட்டப்பேரவைத் தொகுதி உறுப்பினர்கள் இந்தக் குறையை வலியுறுத்தாத சந்தர்ப்பமே கிடையாது. யார் காதிலேயும் எங்கள் சொல் அன்று ஏறவில்லை. ஆனால், இன்றைய தினம், தாய் உள்ளம் படைத்த புரட்சித் தலைவி அவர்கள் எங்களுக்கு இந்தத் திட்டத்திற்கு தாராள மனத்தோடு அனுமதி அளித்திருக்கிறார்கள். கடலாடி பகுதி, கமுதி, முதுகுளத்தூர் விவசாயப் பெருங்குடி மக்கள் காலம் காலத்திற்கு நன்றி உள்ளவர்களாக இருப்பார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் உத்தரவாதத்துடன் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மலட்டாறு நீர்த் தேக்கத் திட்டம் என்று சொன்னால் இந்தஅவையில் முன்னால் தலைவராக இருந்த அண்ணன் உணவுத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், சத்தியமூர்த்தி மலட்டாறு, பேரே மலட்டாறு உட்கார் என்று சொன்னார்கள். அந்தத் திட்டம் இன்றைய தினம் 17 கோடி ரூபாயில் அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. ஒரு தாய் ஸ்தானத்தில் இருந்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தத்

திட்டத்திற்கு நிதி ஒதுக்கம் செய்திருப்பதால், அந்த மலட்டாறு என்ற பெயரை மாற்றி, தாயாற்றுப் பாசனம் என்று அதற்கு, புரட்சித் தலைவியின் நினைவாக இந்த அரசு பெயர் மாற்றிக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய கடலாடி தொகுதியில் குடிதண்ணீர் வசதிக்காக கடலாடிக்கான கூட்டுக் குடிநீர்த்திட்டம் என்று 1979-ல் இதய தெய்வம் எம். ஜி. ஆர். அவர்கள் வாகைக்குளம் திட்டம் கொண்டு வந்தார்கள். அங்கு நடந்த துப்பாக்கிச் சூட்டின் காரணமாக அந்தத் திட்டம் அன்று தடைப்பட்டது. அதற்குப் பிற்பாடு 1984-ல் 4 1/2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய திட்டத்திற்கு புரட்சித் தலைவர் அனுமதி தந்தார்கள். ஆமை வேகத்தில் அந்தத் திட்டம் கடந்த 2 ஆண்டுக் காலமாக முடக்கி வைக்கப்பட்டிருக்கின்ற நிலையில் இருக்கின்றது. கடந்த 2 தினங்களுக்கு முன்பு, வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே நான் அதைச் சுட்டிக்காட்டிய போது, கடலாடிக்கு என்று போட்ட குடிநீர்த் திட்டம், கூட்டுக் குடிநீர்த் திட்டம், வரும் வழியெல்லாம் திசை மாறிப் போய் புதிய திட்டங்களை உள்ளடக்கி கடலாடியில் இறுதியில்தான் அதை செயல்படுத்த முடியும் என்ற அளவிற்கு குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகள் துரைத்தனத்தோடு பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். கடலாடி பகுதியில், பகுதி இரண்டில் உள்ள கிராமங்களுக்கு குடிநீர் கொடுக்கப்படவில்லை என்பது இந்த மாநிலத்திலேயே ஒரு முக்கியமான பிரச்சினை என்பதை இந்த மன்றத்தின் மூலம் நான் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குச் சுட்டிக்காட்டக் கடமைப் பட்டிருக்கின்றேன். இந்தத் திட்டத்தை விரைவுபடுத்தி முடித்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது) அதே போல் எனது தொகுதியில், கீழக்கரை பேரூராட்சி சுமார் 50,000 மக்களுக்கு மேல் வாழ்கின்ற கிராமம் ஆகும். இடநெருக்கடியான கிராமம். விரிவான சாலைகள் இல்லை. அங்கு கழிவு நீரை அகற்றுவதற்கு, எந்த வசதியும் இல்லாத வகையிலே 20 ஆண்டுக் காலமாக இருக்கிறது. பாதாள சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று சொல்லி, அதற்கு ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து கடன் வாங்கித் தரவேண்டுமென்ற முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். மக்கள் நலனில் அக்கறை கொண்டிருக்கிற இந்த அரசு என்னுடைய தொகுதியில் உள்ள கீழக்கரையை தூய்மையாக்குகின்ற வகையில் பாதுகாப்போடு, சுகாதாரத்தோடு அங்கு வாழ்வதற்கு அங்குள்ள மக்கள் சுகாதாரமான பாதையில் நடப்பதற்காவது ஒரு வசதி செய்கின்ற வகையில் பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு நிதி உதவி அளிக்க வேண்டும். ஒரு தாய் 8 அடி பாய்ந்தால், குட்டி 16 அடி பாயும் என்று சொல்வார்கள். இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் அன்றைய தினம் தன்னிறைவுத் திட்டத்திற்கு ஒரு ஒன்றியத்திற்கு 48 இலட்சம் தந்தார்கள். புரட்சித் தலைவி அவர்கள் இன்றைய தினம் ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் 100

இலட்சத்தை அளித்திருக்கிறார்கள். அந்தத் திட்டம் மிகச் சிறப்பாக நல்ல முறையில் நடைபெறவேண்டுமானால், அங்குள்ள ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள பொறியாளர்களுடைய பணிப்பளுவை குறைக்கும் வகையில் கூடுதல் பொறியாளர்கள் நியமிக்கப்பட்டு, வேகமாகப் பணிகள் நடைபெற அந்த வேலைகளை மிக நன்றாகக் கண்காணித்தால் தான் நல்ல பலன் கிடைக்கும் என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்டி, எனது தொகுதியில் கீழக்கரைக்கு நல்ல குடிநீரையும் வழங்குவதற்கு நல்ல நடவடிக்கைகள் எடுக்க அரசு அதிகாரிகள் முன்வரவேண்டுமென்று இந்த அரசை நினைவுபடுத்தி, அடிக்கடி என்னை துணைத் தலைவர் அவர்கள் அமருமாறு சொல்வதனால், இத்துடன் முடித்து நன்றி கூறி அமைகிறேன். வணக்கம்.

பிற்பகல் 12-30

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. ஆர். தங்கராஜ்.

திரு. ஆர். தங்கராஜ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1991-92 ஆம் ஆண்டினுடைய நிதிநிலை அறிக்கையின் மீது பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி என்னை இந்த மாமன்றத்திற்கு பெருவாரியான வாக்குகள் அளித்துத் தேர்ந்தெடுத்த ஆண்டிமடம் சட்டமன்ற வாக்காளப் பெருமக்களுக்கு நன்றி கலந்த வணக்கத்தை கூறிக்கொள்கிறேன். இன்றைக்கு இந்திய நாட்டின் ஈடு இணை இல்லாத தலைவராக விளங்கிய அமரர் ராஜீவ் காந்தி அவர்களின் ஆசியோடும், இன்றைக்குத் தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கிற புரட்சித் தலைவி செல்வி ஜெயலலிதா அவர்களுடைய பேராதரவோடும், எங்களுடைய காங்கிரஸ் கட்சியினுடைய தமிழகத் தலைவர் வாழப்பாடியார் அவர்கள் என்னை காங்கிரஸ் கட்சியினுடைய வேட்பாளராக அறிவித்ததற்காக என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைக் கூறி என்னுடைய கன்னி உரையைத் துவக்குகிறேன்.

வரலாறு காணாத வகையில் ஏழை எளிய மக்களும், தாழ்த்தப்பட்டவர்களும், நெசவாளர்களும், வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கின்ற பிற்படுத்தப்பட்ட மக்களும், வாக்களித்து வெற்றி பெறச் செய்ததற்கு நன்றிக் கடனாக நிதி நெருக்கடியான நிலையிலும் அனைத்துப் பிரிவு மக்களும் பாராட்டத்தக்க வகையில் வரவு-செலவு திட்டத்தைத் தமிழக அரசு அறிவித்துள்ளதை இதயபூர்வமாகப் பாராட்டுகிறேன்.

இன்றைக்குத் தமிழகத்தில் தாய்மார்களின் கண்ணீரைத் துடைப்பதற்காக மலிவு விலை மதுவை ஒழித்து, கள்ளச் சாராயத்தை யாராலும் அடியோடு ஒழிக்க முடியாது என்று

1991 செப்டம்பர் 7] [திரு. ஆர். தங்கராஜ்]

நினைத்த இந்த நேரத்தில் கள்ளச் சாராயத்தை அடியோடு ஒழித்துவிட்ட பெருமை இன்றைக்கு தமிழகத்தினுடைய முதல மைச்சராகப் பொறுப்பேற்றிருக்கிற புரட்சித் தலைவி செல்வி ஜெயலலிதா அவர்களையே சாரும். அவர்களை நான் மனதார பாராட்டுகிறேன்.

நான் சார்ந்திருக்கும் ஆண்டிமடம் தொகுதி தமிழகத்திலேயே வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்கின்ற மக்கள் நிறைந்த பகுதி யாகும். எனவே அங்கே வாழ்கின்ற மக்கள் நம்மைக் கேட்ப தெல்லாம் குடி தண்ணீர் வசதி, சாலை வசதி, தெருவிளக்குகள் வசதி ஆகியவையே. எனவே தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு கோடி ரூபாய் என்று அறிவித்திருக்கின்ற புரட்சிகரமான திட்டத்திலே ஆண்டிமடம் சட்டமன்றத் தொகுதிக்கு முன்னுரிமை வழங்கவேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

மதிப்பிற்குரிய தமிழக முதல்வர் புரட்சித் தலைவி செல்வி ஜெயலலிதா அவர்கள் ஆண்டிமடம் சட்டமன்றத் தொகுதிக்கு 1989-லும், 1991-லும் அவர்கள் வந்து வேட்பாளர்களை அறிமுகம் செய்து வைத்தவர்கள், அங்கே இருக்கின்ற சாலை களை எல்லாம் பார்த்து நன்கு புரிந்தவர்கள் என்பதால்தான் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறன். எனக்கு ஒரு பெருமை என்னவென்றால் என்னை அன்புத் தலைவர் வாழப்பாடியார் அவர்கள் காங்கிரஸ் கட்சியினுடைய வேட்பாளராக அறிவித்த போது அன்று நான் மனு தாக்கல் செய்துவிட்டு வந்த அன்றே இன்றைக்கு முதலமைச்சராக இருக்கின்ற புரட்சித்தலைவி செல்வி ஜெயலலிதா அவர்கள் என்னை வேட்பாளராக அறிமுகப் படுத்திப் பேசிய கூட்டத்திலே திருச்சி மாவட்டத்தையும், தென் ஆற்காடு மாவட்டத்தையும் இணைப்பதற்காக கோட்டைக்காட் டிலே வெள்ளாற்றிலே ஒரு பாலத்தை அமைத்துத் தருகிறேன் என்று சொன்னார்கள். அவர்கள் இந்த ஆண்டிலே அதை அறிவிப்பார்கள் என்று நான் எதிர்பார்த்தேன். ஆனால் இல்லை. ஆகவே, வெகு விரைவில் தென்னாற்காடு மாவட்டத்தையும் திருச்சி மாவட்டத்தையும் இணைக்கக்கூடிய அந்தப் பாலத்தை அமைத்துத் தரவேண்டுமாய் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி செல்வி ஜெயலலிதா அவர்களை நான் கேட்டுக்கொள் கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியைப் பொறுத்தமட்டில்—— தமிழகத்தில் தொழில் வளர்ச்சியடைய தமிழக முதல்வர் புரட் த் தலைவி செல்வி ஜெயலலிதா அவர்கள் மேற்கொண்டிருக்கும் ..திய முயற்சியின் காரணத்தால் சொல்ல விரும்புகிறேன் —

எனது தொகுதியில் தொழில்கள் துவங்குவதற்குரிய சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. அங்கே முந்திரி அதிகமாக இருப்பதால் ஆண்டிமடத்தில் ஒரு முந்திரி தொழிற்சாலை அமைக்க வேண்டும். அங்கே பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களில் கரும்பு பயிரிடப் படுவதால் எனது தொகுதியில் வங்காரத்தில் ஒரு சர்க்கரை ஆலையைத் தொடங்க வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய தொகுதி யில் கணிசமான அளவில் கைத்தறி நெசவாளர்கள் வாழ்கிற காரணத்தால் அவர்களுக்கு ஒரு கூட்டுறவு நூற்பாலையை அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சிமெண்ட் தயாரிப்பதற்குத் தேவையான மூலப் பொருட்கள் காணப்படுவ தால் அனந்தவாடியில் ஒரு மினி சிமெண்ட் தொழிற்சாலையை அமைத்துத் தரவேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-35

சுதந்திரம் அடைந்து 44 ஆண்டுகள் ஆகியும், எனது தொகுதி யில் எந்த சாலை வசதியும் இல்லாமல் இருக்கிறது. செந்துரை ஒன்றியத்தில் வட பகுதியில் தீபகற்பம் போல் துண்டிக்கப்பட்டி ருக்கும் பல கிராமங்களுக்கு சாலை வசதியும், மருத்துவ வசதியும் இல்லாமல் மக்கள் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டு இருக்கின்றார் கள். எனவே அந்தப் பகுதி மக்களுக்கு சாலை வசதி, பஸ் போக்குவரத்து எல்லாம் செய்து தரவேண்டுமாய் கேட்டுக் கொள் கிறேன். மிகவும் பிற்படுத்தப்பட்ட பகுதியாக இருப்பதால் படிக்கும் மாணவர்களுக்கு செந்துரை, பரணம், குறிச்சிகுளம், குவாகம், ஆண்டிமடம் ஆகிய கிராமங்களில் இருக்கும் உயர் நிலைப் பள்ளிக்கு, மேல்நிலைப் பள்ளிக்கு, பிற்பட்டோர் நல விடுதி அமைத்துத் தரவேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன். புரட்சித் தலைவர் அவர்களால் வாழ்வளிக்கப்பட்ட பல்லாயிரக் கணக்கான சத்துணவு அமைப்பாளர்களுக்கு, பணி நிரந்தரம் செய்ய வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன். ஐந்து பஞ்சாயத் துக்களுக்கு ஒரு கால்நடை ஆஸ்பத்திரி வீதம், குழுமூர், பரணம், வரதராசன் பேட்டை, சன்னாசி நல்லூர் ஆகிய கிராமங்களுக்கு கால்நடை மருத்துவமனை அமைத்துத் தரவேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் என்னை ஆண்டி மடம் சட்டமன்றத்தொகுதியின் வேட்பாளராக அறிமுகம் செய்த போது கோட்டைக்காட்டில் வெள்ளாற்றின் குறுக்கே பாலம் அமைத்துத் தருவேன் என்று சொன்னார்கள். அதை உடனடி யாக செய்து தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

1991 செப்டம்பர் 7] [திரு. ஆர். தங்கராஜ்]

மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன், செந்துரையில் இருக்கும் ஆரம்ப சுகாதார நிலையத்தில் 30 படுக்கைகள் வசதி கொண்ட தாய்சேய் நல விடுதி கட்டித் தர நடவடிக்கை எடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

பெண் குலத்திற்கு பெருமை சேர்க்கும் மாண்புமிகு முதலமைச்சர் ஆகிய தங்களிடம் நான் வேண்டுவது, கல்வி வசதி அற்ற செந்துரை ஒன்றியத்தில் பெண்கள் கல்லூரி ஒன்று அமைத்துத் தரவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

மறைந்த புரட்சித் தலைவர் அவர்கள் தமிழகத்தின் முதலமைச்சராக இருந்த காலத்தில் கிராமத்தில் உள்ள படித்த பெண்கள் வேலைவாய்ப்புப் பெறத்தக்க வகையில், மேல்நிலைப் பள்ளிகளில் ஆசிரியைப் பயிற்சி வகுப்புகள் கொண்டு வந்தார்கள். தி.மு.க. ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டவுடன் அதை பள்ளியில் இருந்து எடுத்துவிட்டனர். எனவே மீண்டும் கிராமத்துப் படித்த பெண்கள் வேலைவாய்ப்பு பெறத்தக்க வகையில் மேல்நிலைப் பள்ளியில் ஆசிரியைப் பயிற்சி வகுப்பு கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சமூகத்தில் உள்ள அனைத்து பிற்படுத்தப்பட்ட மக்களும் பயன்பெறுகிற வகையில் எல்லோருக்கும் இலவச வீடு கட்டித் தரவேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் தொகுதி வானம் பார்த்த பூமியாக இருப்பதால், உணவு உற்பத்தியைப் பெருக்க ஏரிகளை மராமத்து செய்வதுடன், நிலத்தடி நீரால் விவசாயம் செய்ய வேண்டி விசேட நடவடிக்கை எடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள் கிறேன்.

தமிழகத்தில் விடுதலைப் புலிகளின் ஆயுத கலாச்சாரத்தை மறைய வைத்த, தடுத்து தீவிர நடவடிக்கைகள் எடுத்த முதல்வர் அவர்களின் சீரிய நடவடிக்கைகளை நான் மிகவும் பாராட்டு கிறேன்.

அரசு பள்ளிகளில் பணி புரிந்து வரும் பகுதி நேர ஆசிரியர்களைப் பணி நிரந்தரம் செய்யவேண்டுமாய்க் கேட்டுக்கொள் கிறேன். ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கும் பொது வைப்பு நிதியை, அங்கு செயல்படுகின்ற குடிதண்ணீர் மோட்டாருக்காக விரயம் செய்து கொண்டிருப்பதால், ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு மோட்டார் மெக்கானிக் நிரந்தரமாக பணியில் அமர்த்தி, அந்த ஒன்றியத்தின் மூலம் சரி செய்தால் விரயச் செலவைத் தடுக்கமுடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்கள் தொகுதியிலுள்ள அனைத்து மேல்நிலைப் பள்ளிகளுக்கும் போதிய கட்டிட வசதியும் இல்லாததால் மாணவர்கள் மரத்தடியில் படிக்கின்றனர். எனவே அந்த பள்ளிகளுக்கு கூடுதல் கட்டிட வசதி செய்துதர வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

இருபத்தோராம் நூற்றாண்டுக்கு நம்மை எல்லாம், சிறப்பாக அழைத்து செல்லும் லட்சிய நோக்கத்தோடு செயலாற்றிய மறைந்த மாபெரும் தலைவர், ராஜீவ் காந்தி அவர்களுக்கு நன்றி கூறும் பொருட்டு, ஆண்டிமடம், ஜெயங்கொண்டம் பகுதியில் அமைய இருக்கும் நிலக்கரி சுரங்க நிறுவனத்திற்கு அவருடைய திருநாமத்தை சூட்டவேண்டுமாய்க் கேட்டுக்கொண்டு வாய்ப்பு அளித்த இந்த மாமன்றத்திற்கு என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தை கூறி விடை பெறுகிறேன். நன்றி. வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ம. தனபால்.

* திரு. ம. தனபால்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையின் மீது பேசுகின்ற வாய்ப்புப் பெற்றமைக்கு நான் எனது நன்றியை முதற்கண் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-40

இந்த நிதிநிலை அறிக்கையில் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் ஏழைகளுக்காக நல்ல பல திட்டங்களைத் தீட்டியிருக்கிறார்கள். இந்த நிதிநிலை அறிக்கையைப் பார்க்கும்போது முழுக்க முழுக்க ஏழைகளை, தாழ்த்தப்பட்ட மக்களை, பிற்படுத்தப்பட்ட மக்களை கருத்தில் கொண்டு அவர்களை எந்த விதத்திலும் பாதிக்காத அளவுக்குதான் இந்த நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது. இந்த நிதிநிலை அறிக்கையைத் தயாரித்த மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், அவர்கள் மீது வரிகளை ஏற்றிக்கொண்டு, எங்கள் மீது வரிகளை குறைத்து, அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்கள் என்று சொன்னால், உண்மையிலேயே பாராட்டக்கூடிய ஒன்றாகும், பெருமைப்படக்கூடிய ஒன்றாகும். இந்த நிதிநிலை அறிக்கையில் புரட்சித் தலைவி அவர்கள் ஏழைகளை எண்ணிப் பார்த்திருக்கிறார்கள். ஏழைகள் படும் வேதனையை மனதில் கொண்டுதான் இந்த நிதிநிலை அறிக்கையை தயாரித்திருக்கிறார்கள். ஏழைகள் வாங்கும் அத்தியாவசியப் பொருள்களின் விலையைக் குறைத்திருக்கிறார்கள். ஏழைகள் வாங்குகின்ற, நடுத்தர மக்கள் செல்கின்ற அந்த வாகனத்திற்கு, 50 சி.சி. வாகனத்திற்கு வரிவிலக்கு செய்திருக்கிறார்கள். அப்படி என்றால் முழுக்க

முழுக்க ஏழையெளிய, நடுத்தர மக்களை மனதிலே கொண்டு தான் இந்த நிதி நிலை அறிக்கையை தயாரித்திருக்கிறார்கள். அதற்காக இந்த நேரத்திலே நான் நன்றி பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இந்த நிதி நிலை அறிக்கையில் நீர்ப்பாசனப் பிரச்சினைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்கள். எங்கள் திருப் போரூர் தொகுதியில் இருக்கின்ற பல ஏரிகள் செப்பனிடப் படாமல், ஆழப்படுத்தப்படாமல் இருக்கின்ற நிலைமை இருக் கிறது. அங்கு இருக்கின்ற ஏரிகளில் இருக்கிற மதகுகள் ஓட்டை உடைசல்களாக இருக்கிற நிலையில் மழை பெய்து தண்ணீர் வந்தால் சிறிது அளவு கூட மழை நீர் அங்கே நிற்காத நிலைமை உள்ளது. வர இருக்கின்ற மழைக் காலத்திலேகூட அந்த ஏரி களில் மழை நீர் நிற்காத சூழ்நிலை இருக்கிறது. எனவே, அந்த ஏரிகளைப் பற்றி இங்கே குறிப்பிட விரும்புகிறேன். எனது திருப்போரூர் தொகுதியில் முள்ளிப்பாக்கத்தில் இருக்கின்ற ஏரி, சிறுசேரி, தண்டரை, காலவாக்கம் பகுதியில் இருக்கின்ற ஏரி, காட்டாங்குளத்தூர் ஒன்றியத்தில் இருக்கின்ற கீரப்பாக்கம், பாலூர் ஆகிய ஏரிகளின் மதகுகள் செப்பனிடப்படாமல் இருக் கின்ற நிலை இருப்பதால் அதை நிவர்த்திக்கும் பொருட்டு இந்தத் திட்டத்தில் கூறியுள்ளபடி மழைக் காலத்திற்கு முன்பே, மிக விரைவில் அவற்றை செப்பனிட வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

அதுபோல மிக முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை என் னுடைய தொகுதியில் கோவளத்தையும், கேளம்பாக்கத்தையும் இணைக்கின்ற ஒரு பாலம். கோவளத்தையும் கேளம்பாக்கத்தை யும் இணைக்கின்ற அந்தப் பாலமானது புதிய மகாபலிபுரம் சாலையையும் பழைய மகாபலிபுரம் சாலையையும் இணைக்கின்ற சுற்றுலாப் பயணிகள் பெருமளவில் கடந்து செல்கின்ற முக்கிய மான ஒரு பாலம் ஆகும். சுற்றுலாப் பயணிகள் மகாபலிபுரம் போகிறார்கள் என்றால் இந்தப் பாலத்தை அவர்கள் கடந்து செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. குறிப்பாக, கடந்த 2 ஆண்டுகளாக அந்தப் பாலம் செப்பனிடப்படாமல் பழுது அடைந்து உடையக் கூடிய சூழ்நிலையில் இருக்கிறது. அந்தப் பாலம் தி.மு.க. ஆட்சிக் காலத்தில் தடைப்படுத்தப்பட்டு, வாகனங்கள் அந்த வழியாக செல்லக் கூடாது என்று விளம்பரப் படுத்தப்பட்டு தடை செய்யப்பட்டது. அந்த சூழ்நிலையிலும் தனியார் வாகனங்கள் சென்று கொண்டு தான் இருக்கின்றன. தனியார் வாகனங்கள் என்றைக்கோ ஒரு நாள் அந்த வழியாக செல்லும்போது பாலம் உடைந்து, பாலத்தோடு சேர்ந்து வாகனத்தில் இருக்கின்றவர்களும் விழுந்து அழிகின்ற ஒரு நிலை என்றைக்காவது உண்டாகும் போல தோன்றுகிறது. எனவே, அந்தப் பாலத்தை முக்கியத்துவம் வாய்ந்ததாக மாண்புமிகு

முதலமைச்சர் அவர்கள் கவனத்திலே கொண்டு எங்களுடைய அந்தப் பாலத்தை சரி செய்து போக்குவரத்துக்கு வசதி செய்து தரும்படி இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, குடிசைகளுக்கு ஒரு விளக்கு திட்டம். நம்முடைய தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்திருக்கக்கூடிய அந்தத் திட்டம் மிகவும் வரவேற்கக் கூடிய ஒன்று. மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஒரு விளக்குத் திட்டத்தை மிக சிறப்பான திட்டமாக கருதி நடைமுறைப்படுத்தினார்கள். தி.மு.க. ஆட்சிக் காலத்தில் அந்தத் திட்டம் நிறுத்தப்பட்ட ஒரு திட்டமாக இருந்தது. அந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படாத ஒன்றாக இருந்தது. ஆனால் இன்றைய தினம் மீண்டும் புரட்சித் தலைவர் கொண்டு வந்த இந்தத் திட்டத்தை முக்கியத்துவம் கொடுத்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களும் இந்த நிதிநிலை அறிக்கை மூலம், ஏழைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். இத் திட்டத்தை சிறப்பாக நடைமுறைப்படுத்த வேண்டுமென்று சொன்னால், ஒரு விளக்குத் திட்டத்தைப் பொறுத்தவரையில் பெரும்பாலும் என் தொகுதியிலே, என் தொகுதியிலே மட்டுமல்லாமல் தமிழகம் முழுவதும், இருக்கின்ற ஏழையெளிய மக்கள் குடிசைகள் கட்டி வாழ்ந்துகொண்டிருக்கிறார்களே, அவர்கள் பெரும்பாலும் அரசால் தடை செய்யப்பட்ட நிலங்களான மந்தைவெளி, ஓடை, குட்டை போன்ற புறம்போக்கு நிலங்களில் தான் குடிசைகள் கட்டி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்த குடிசைகளுக்கு மின் இணைப்பு வேண்டுமென்று சொன்னால் குடிசையில் வாழ்பவர்கள் வட்ட ஆட்சியரிடத்திலிருந்து ‘ தடை இல்லா’ சான்றிதழ் பெற வேண்டும். வட்ட ஆட்சியாளரை அவர்கள் அணுகினால் அவர் அப்படி கொடுப்பதில்லை. எனவே, இதை மனதிலே கொண்டு தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள், அவர்களுக்கு இருக்கும் குறையை நிவர்த்தி செய்யும் வகையிலே மேற்படி நிலங்களில் குடிசை கட்டி வாழ்பவர்களுக்கு பட்டா வழங்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12—45

அதே நேரத்தில் வருவாய் வட்டங்களை மூன்றாகப் பிரித்து, துணை வட்டாட்சியர்களை நியமித்து, அதன்மூலம் சான்றுகள் வழங்குவதற்கும், பட்டாக்கள் கொடுப்பதற்கும் உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது, நிதிநிலை அறிக்கையிலே. அதைப் பாராட்டுகிறேன். இதனால் ஏழை எளியவர்கள் மிக விரைவாக தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள முடியும் என்பதை இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மதுவிலக்கை அமல்படுத்துவதில் புரட்சித் தலைவி அவர்கள் மிகவும் தீவிரமாக இருக்கிறார்கள். புரட்சித் தலைவர் அவர்கள் எப்படி மதுவிலக்கை அமல்படுத்தினாரோ,

1991 செப்டம்பர் 7] [திரு. ம. தனபால்]

அதைவிட புரட்சித் தலைவி அவர்கள் மிகத் தீவிரமாக மதுவிலக்கை அமல்படுத்தும் சூழ்நிலைகளினாலே, தமிழகம் முழுவதும் நிறைவேற்றும் சூழ்நிலைகளினாலே, என்னுடைய தொகுதியிலே எங்கே சாராயம் காய்ச்சப்படுகிறது அல்லது விற்கப்படுகிறது என்பதை கிராம நிர்வாக அலுவலர்கள் பட்டியல் போட்டு காவல் நிலையத்திற்குக் கொடுக்கின்றபோது, ஒரு சில காவல் நிலையங்களில் அவற்றை வாங்க மறுக்கும் காட்சியைப் பார்க்கிறோம். ஒருசில காவல் நிலையங்களுக்கு ரெஜிஸ்டர் தபால் அனுப்பும்போது, 'ரெப்யூஸ்' செய்யப்பட்டு, திருப்பி அனுப்பப்படும் சூழ்நிலையைப் பார்க்கிறோம். அந்தத் தபாலை வாங்கிக் கொண்டால் அவர்கள்மீது கண்டிப்பாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதால் அதை வாங்காமல் விட்டுவிடுகிறார்கள். இவற்றை எல்லாம் நிவர்த்திக்கும் பொருட்டு தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று தமிழக முதல்வரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒரு நிமிடத்தில் முடித்து விடுங்கள்.

திரு. ம. தனபால் : மகளிர் மேம்பாட்டுக்காக பல திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன, இந்த நிதிநிலை அறிக்கையில், நான் அதனை வரவேற்கிறேன். அதே நேரத்தில் ஆதிதிராவிட மக்களுக்கு பத்து அம்சத் திட்டம் இந்த நிதிநிலை அறிக்கையில் மிகச் சிறப்பாகக் கூறப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தில் தாட்கோ மூலமாக வீடு கட்டக் கொடுக்கும் 6,000 ரூபாய் போதாது. அதை அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டும். எப்படி ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் கொடுக்கப்படுகிறதோ அதே போன்று தாட்கோ மூலம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தெரு விளக்குப் பிரச்சினை மிகப் பெரிய பிரச்சினையாக இருந்து வருகிறது. தமிழகம் முழுவதும் தெரு விளக்குகளைப் பராமரிக்க வேண்டுமென்று சொன்னால், அவற்றைப் பராமரிப்பதில் பல சிக்கல்கள் இருக்கின்றன. தெரு விளக்கு சாதனங்கள் வாங்குவதில், குறிப்பாக இந்த இடங்களில்தான் வாங்க வேண்டுமென்று அரசு உத்தரவிட்டிருப்பதால், இதற்கு முன்பிருந்த அரசு உத்தரவிட்டிருப்பதால், அதனை வாங்கிப் போடும்போது, 2 வாரங்கள் கூட மின் விளக்குகள் எரிவதில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஏழைகளை, எங்கள் பகுதியிலே இருக்கின்ற கிராமவாசிகளை எப்படி திருப்திப்படுத்த முடியுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாவட்ட வளர்ச்சி முகமை அதிகாரி அவர்கள், அதாவது கூடுதல் மாவட்ட ஆட்சியர் அவர்கள் எங்களை மாவட்ட வளர்ச்சி முகமையிலே ஓர் உறுப்பினராகச் சேர்த்திருக்கிறார்கள். செங்கற்பட்டு—எம்.ஜி.ஆர். மாவட்ட வளர்ச்சி முகமையிலே என்னை உறுப்பினராகச் சேர்த்திருப்பதாகத் தபால் வந்திருக்கிறது. ஆனால் உறுப்பினர்களைக் கலந்தாலோசித்து ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் கடனுதவி கொடுக்கிறார்களா என்றால் இல்லவே இல்லை. அதேபோன்று ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் கட்டப்படும் தொகுப்பு வீடுகளைத் தேர்வு செய்கிறார்களா என்றால் இல்லவே இல்லை. இப்படிப்பட்ட சூழ்நிலை எங்கள் மாவட்டத்தில் இருந்து கொண்டிருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்களை பழித்துப் பேசும், இழித்துப் பேசும் நிலை எங்களுடைய மாவட்டத்தில் இருந்துகொண்டிருக்கிறது. (மணி அடிக்கப் பெற்றது)

''பேருடை உடையவர் ஆற்றுவார் ஆற்றின் ஆருடை உடைய செயல்'' என்ற குறளுக்கேற்ப பாராட்டுகிற நல்ல பல செயல்களைச் செய்துவரும் புரட்சித் தலைவி அவர்களுக்கு தமிழக மக்கள் தங்கள் நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்று கூறி முடிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருமதி ப. சரஸ்வதி.

பிற்பகல் 12—50

*திருமதி ப. சரஸ்வதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னை இந்த அவையிலே நடைபெறுகின்ற பட்ஜெட் பொது விவாதத்தில் கலந்துகொண்டு பேசுகின்ற வாய்ப்பினை உருவாக்கித் தந்த இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களை வணங்கி, என்னுடைய கருத்துக்களை சொல்ல விழைகின்றேன்.

இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சி தமிழகத்தில் வந்தவுடன் ஒரு பரபரப்பான சூழ்நிலை உருவாகி, எதிரணியே இல்லாத அளவுக்கு ஆளும் கட்சிக்கு அமோக ஆதரவினைத் தந்து, தமிழகத்திலே ஒரு நல்லாட்சியை உருவாக்கித் தந்த தமிழகத்தினுடைய மக்களுக்கு, ஏழை மக்களுக்காக வரிகளை எல்லாம் தளர்த்தி நம்முடைய தமிழகத்தினுடைய நிதி நிலைமை கடும் வறட்சி காலத்தில் இருப்பதைப் போன்ற வெடிப்பு நிலமாக இருந்தாலும் புரட்சித் தலைவி அவர்கள் தன்னுடைய உடலிலே வழிந்தோடுகின்ற வியர்வையிலே நனைத்தாவது இந்த வறட்சியைப் போக்க வேண்டுமென்று நினைக்கக்

1991 செப்டம்பர் 7] [திருமதி ப. சரஸ்வதி]

கூடிய அளவுக்கு தன்னிகரில்லாத ஒரு வரப்பிரசாதமாக தமிழகத்து மக்களுக்கு கொடுத்திருக்கக் கூடிய நிதிநிலை அறிக்கையானது மக்களுடைய கண்களிலே ஆனந்தக் கண்ணீராக பெருக்கெடுத்து ஓடுகிறது.

நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் தன்னுடைய நீண்ட அறிக்கையிலே நிலை தடுமாறாது, அடி பிறழாது அள்ளித் தந்த நிதிநிலை அறிக்கையானது ஏழைகளுக்காக வழங்கப்பட்ட அறிக்கை என்று தமிழகத்தினுடைய மக்களால் பாராட்டப்படுகிறது. இதுவரை எந்த முதலமைச்சரும் தமிழ்நாட்டிலே கள்ளச்சாராயத்தை ஒழிக்க முடியாது என்று இருந்த நேரத்தில் மக்களாலும் அதிகாரிகளாலும் பொதுமக்களாலும் சொல்லக் கூடிய கருத்தை மாற்றி, ஒரு உன்னத சக்தியைக் கையாண்டு, வருவாய்த் துறையை காவல் துறையோடு இணைத்து, கிராமங்களிலே தண்டல்காரனும் முன்சீப்பும் சென்று அங்கே சாராயம் காய்ச்சுபவர்களைப் பிடித்து வைக்கக்கூடிய ஒரு உத்தியைக் கையாளக்கூடிய புரட்சித் திட்டம் புரட்சித் தலைவி அவர்களிடத்திலே உருவானதை தமிழகத்து மக்கள் எல்லாம் மிகவும் வியக்கத்தக்க வகையிலே பாராட்டுகிறார்கள்; போற்றுகிறார்கள்.

தமிழகத்திலே சாராயத்தை ஒழித்துக் கட்டியதைப் போல நடக்கக்கூடிய ஆட்சிக் காலத்தில் பணிகளுக்கு, இங்கே தீட்டப்படக்கூடிய திட்டங்களுக்கு ஒதுக்கப்படக் கூடிய பணம் மக்களிடத்திலே சென்றடையக் கூடிய வகையிலே நல்லமுறையிலே ஆட்சியாளர்கள் பணியை ஆற்றுவதற்காக புரட்சித் தலைவி அவர்கள் என்றென்றும் பாடுபடுவார்கள் என்று மக்களிடத்திலே இன்று நல்ல மதிப்பைப் பெற்றிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிதிநிலை அறிக்கையானது இங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது.

'டேனிடா' திட்டத்தின்கீழ் மகளிருக்கு ஆண்டுக்கு 9,000 பேர்களுக்கு வேளாண்மைப் பயிற்சி அளித்து, பெண்களுடைய நலம் முன்னேற வேண்டுமென தாய்க் குலத்தினுடைய தலைவியாக இருக்கக் கூடிய புரட்சித் தலைவி அவர்கள் பெண்களுக்காக பல அரிய திட்டங்களைத் தீட்டி இந்த அவையிலே கொடுத்திருப்பது பெண்கள்மீது வைத்திருக்கக்கூடிய அளவில்லாத பற்றினை இன்று நமக்கெல்லாம் காட்டுகின்றது.

பயிர் விளைச்சல் இல்லாது போகும் காலத்திலே பயிர் காப்புறுதித் திட்டத்தைச் செயல்படுத்த விரிவாக நாம் ஆய்வு செய்ய இருக்கிறோம் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். எங்களுடைய இதயதெய்வம் அவர்களை நான் வேண்டிக் கேட்டுக் கொள்வது, என்னுடைய தொகுதியான கபிலர்மலைத் தொகுதி கொடிக்கால் நிறைந்த பகுதியாகும். புயல் காலத்திலே கொடிக்கால் மண்ணோடு மண்ணாக சாய்ந்துவிடுகிற நேரத்தில் தணலிலிட்ட புழுவாக

கொடிக்கால் பயிர் செய்த விவசாயிகள் எல்லாம் கதறித் துடிக்கிறார்கள். அந்த விவசாயிகளுக்குக் காப்புறுதித் திட்டம் மூலமாக கொடிக்காலுக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு கோடி ரூபாய் ஒதுக்கியதன் மூலம் சத்துணவு, தெருவிளக்கு, ஆரம்பப் பள்ளிக் கட்டிடம், தொலைக்காட்சிப் பெட்டிகள்—இப்படி மக்களுடைய அத்தியாவசியக் குறைகளை எல்லாம் போக்கக்கூடிய அளவுக்கு முழுமையாக, ஒதுக்கப்பட்ட இந்த ஒரு கோடி ரூபாய்த் திட்டம் தமிழகத்து மக்களுக்கு கிடைத்த வரப்பிரசாதம் என்று மக்களெல்லாம் பாராட்டுகிறார்கள்.

கிராமங்களிலே பத்து குழந்தைகளுக்கு கல்வி போதிக்க வேலையில்லாத இளைஞர்களுக்கு வருஷம் ஆயிரம் ரூபாய் கொடுத்து அதன் மூலம் ஏழைக் குழந்தைகளுக்கு அறிவு வளர்ச்சி அளித்து, வேலையில்லாத இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பினையும் உருவாக்கித் தந்த புரட்சித் தலைவி அவர்களைப் பாராட்டுகிறேன்.

என்னுடைய தொகுதியில் மோகனூர் பேரூராட்சி மக்கள் தொகை நிறைந்த பேரூராட்சி. அந்தப் பேரூராட்சியில் பல ஆண்டு காலமாக அரசாங்க மருத்துவ மனையாகச் செயல்பட்டு வந்த அரசு மருத்துவமனை ஒரு படுக்கை போதாத காரணத்தால் ஆரம்ப சுகாதார நிலையமாக மாறிவிட்டது. அந்த ஆரம்ப சுகாதார நிலையத்தை, இந்த அரசு மருத்துவமனைகளைப் பெருக்கக் கூடிய திட்டத்திலே படுக்கையை மீண்டும் இணைத்து, அதை மீண்டும் அரசாங்க மருத்துவமனையாக மாற்றி, ''போஸ்ட் மார்டம்'' செய்ய 18 கிலோ மீட்டர் தூரத்திலே இருக்கக் கூடிய நாமக்கல் வரக்கூடிய அவல நிலையை மாற்றித் தர வேண்டும். ஒரு விபத்து நேரிட்டால் கூட நாமக்கல்லுக்கு எடுத்துச் செல்லக் கூடிய நிலைமைதான் இருக்கிறது. தயவு செய்து பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்கு இதை எடுத்துச் செல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கருவுற்ற தாய்மார்களுக்கும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் சத்துணவும் சுகாதார வசதியும் கொடுத்து, மகப்பேறு காலத்தில் அனைத்து உதவிகளையும் கொடுத்திருக்கக் கூடிய புரட்சித் தலைவி அவர்களை நினைக்கும்போது தாய்மார்கள் எல்லாம் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறார்கள்.

மாடியிலே பிறந்து வளர்ந்தாலும், தெருக் கோடியிலே, வீதி ஓரத்திலே பூ விற்பவர்களுக்கும், காய் விற்பவர்களுக்கும் கடன் உதவி வழங்கக் கூடிய தன்னிகரில்லாத் திட்டத்தை, தெருவிலே

1991 செப்டம்பர் 7] [திருமதி ப. சரஸ்வதி]

இருக்கக்கூடியவர்களுடைய எண்ணங்களை நெஞ்சிலே ஏற்று அது எப்படி சட்டமாக வடிவாக்கப்படுகிறது என்பதைப் பார்க்கும்போது தமிழகத்து மக்கள் எல்லாம் வியக்கும் வண்ணம் இந்த நிதிநிலை அறிக்கையானது இருக்கிறது.

பிற்பகல் 12-55

கபிலர்மலை தொகுதியில் ஜேடர்பாளையத்திலிருந்து திருச்செங்கோடு தொகுதி எல்லையிலே உள்ள சித்தநந்தூர் வரையில் கூட்டுக் குடிநீர் திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டு கடந்த 2 ஆண்டுக் கால ஆட்சியிலே அது முடக்கிப் போடப்பட்டு விட்டது. அந்த ஆட்சி முடிந்து இன்று மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நம்முடைய ஆட்சி வந்து இருக்கிறது. நம்பி வாக்களித்த மக்களுக்கு கூடிய விரைவில் அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தி, மக்களுக்கு குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்துத் தர வேண்டுமென்று குடிநீர் அமைச்சர் அவர்களை வேண்டிக் கேட்டுக்கொள்கின்றேன். பாலப்பட்டியிலிருந்து வள்ளிபுரம் வரை புதிய குடிநீர்த் திட்டம் ஒன்றை மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு அனுப்பி இருக்கின்றார்கள். தயவு செய்து அந்தத் திட்டத்தையும் இதிலே சேர்த்து எங்கள் தொகுதியிலே இருக்கக் கூடிய குடிநீர்ப் பிரச்சினையைக் கூடிய விரைவிலே முடித்துத் தர வேண்டுகிறேன்.

ராஜகுமாரபாளையம் வாய்க்காலை உடனடியாக ''ரீமாடலிங்'' செய்து தர வேண்டுமென்று மன்றாடிக் கேட்டுக் கொள்கின்றேன். சுதந்திரம் அடைந்த காலத்திலிருந்து இங்கே ஆட்சிப் பீடத்திலே வந்திருக்கக்கூடிய ஒவ்வொரு அரசாங்கமும் அதைத் தவிர்த்து வருகின்றது. உலக வங்கியிலே கடன் உதவியைப் பெற்று எங்களுக்கு எப்படியாவது அடுத்த 1992-93 ஆவது ஆண்டுத் திட்டத்திலே ராஜகுமாரபாளையம் வாய்க்கால் ''ரீ-மாடலிங்'' திட்டத்தையும் சேர்த்து அந்தப் பணியைச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்தில் போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றும் ஊழியர்களின் குழந்தைகளுக்காக பெரியார் மாவட்டத்தில் ஒரு பொறியியல் கல்லூரியும், மருத்துவக் கல்லூரியும் உருவாக்கித் தந்தார்கள். அதேபோன்று புரட்சித் தலைவியினுடைய காலத்திலே கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் பணியாற்றும் ஊழியர்களின் குழந்தைகளுக்காகவும், கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பை பயிரிட்டு வழங்கக்கூடிய விவசாயிகளினுடைய குழந்தைகளுக்காகவும் மோகனூர் சர்க்கரை ஆலையில் ஒரு பொறியியல் கல்லூரியை கொடுத்து, தமிழகத்திலே இருக்கக் கூடிய பல்வேறு கூட்டுறவு சர்க்கரை ஆலைகளினுடைய ஊழியர்களின் குழந்தைகளுக்கும், விவசாயிகளினு

டைய குழந்தைகளுக்கும் பயன் அளிக்கும் வகையில் ஒரு திட்டத்தை உருவாக்கித் தர வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது).

எங்களுடைய தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதி. புரட்சித் தலைவியின் கோட்டையாக விளங்கக்கூடிய கபிலர்மலை தொகுதிக்கு இந்த பொறியியல் கல்லூரியைக் கொடுத்து எங்களுடைய தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கக்கூடிய கிராமங்கள் அடங்கிய தொகுதியில் சர்க்கரை ஆலையைத் தவிர வேறு எதுவுமே இல்லை. ஆகையால் அந்த ஆலையில் ஒரு பொறியியல் கல்லூரியை உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டு, எனக்கு இந்த நிதிநிலை அறிக்கையில் பேச வாய்ப்பு அளித்த பேரவைத் தலைவருக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. ஜானகிராமன் அவர்கள்.

திரு. கோ. ஜானகிராமன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 1991-92 ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் மீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு அளித்தமைக்காக எனது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்த நிதிநிலை அறிக்கை உண்மையிலேயே ஏழை எளிய மக்களின் இருண்ட வாழ்க்கையைப் போக்குகின்ற அறிக்கையாகவும், தன்னம்பிக்கையோடு வாழ்கின்ற அளவுக்கு எல்லோராலும் பாராட்டப்படுகின்ற நல்லதொரு பட்ஜெட் ஆகவும் இருப்பதைக் கண்டு மகிழ்ச்சி அடைகின்றோம்; வரவேற்கின்றோம்; பாராட்டுகின்றோம்.

தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுகின்ற வகையிலே மலிவு விலை மதுக் கடைகளை மூடியதன் மூலமாக தமிழகத்திலே லட்சோப லட்சம் தாய்மார்களுடைய கண்ணீரைத் துடைத்த பெருமையும், ஏழை எளிய குடும்பங்கள் இன்றைக்கு நிம்மதியோடு வாழ்கின்ற சூழ்நிலையை ஏற்படுத்திய பெருமையும் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி ஜெயலலிதா அவர்களை சாரும். அவர்களை எங்கள் தொகுதி மக்களின் சார்பாக பாராட்டுகின்றோம்; வாழ்த்துகின்றோம். அதே நேரத்தில் கள்ளச்சாராயத்தை ஒழிப்பதற்காக எடுத்து இருக்கின்ற நடவடிக்கைகளை நாங்கள் வரவேற்கின்றோம்.

தமிழகத்திலே விடுதலைப் புலிகளின் தீவிரத் தன்மையை ஒடுக்குகின்ற வகையிலே, தமிழகத்திலே இருந்து விடுதலைப் புலிகளை விரட்டிய வீரப் பெண்மணியாக விளங்குகின்ற தமிழக முதலமைச்சரைப் பாராட்டுகின்றோம். பிரிவினைவாதத் தன்மையைக் கொண்ட முந்தைய அரசு விடுதலைப் புலிகளுக்கு தமிழகத்தில் ஆக்கமும் ஊக்கமும் அளித்த காரணத்தால்தான்

எங்கள் தலைவர் ராஜீவ் காந்தியைக் கொல்லக்கூடிய அளவுக்கு அவர்கள் வளர்ந்து விட்டார்கள் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். விடுதலைப் புலிகளுக்கு உடந்தையாக இருந்தவர்கள் யாராக இருந்தாலும், சமுதாயத்தில் எவ்வளவு பெரிய அந்தஸ்தில் இருந்தாலும் அவர்களைத் தண்டிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 1-00

காவிரி நீர்ப் பிரச்சினையில் தமிழக முதலமைச்சர் அவர்கள் எடுக்கிற எல்லா நடவடிக்கைகளுக்கும் நாங்கள் ஒத்துழைப்புக் கொடுக்கத் தயாராக இருக்கிறோம். காவிரி நீர்ப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் திரு. வாழப்பாடி ராமமூர்த்தி அவர்கள் அன்றைக்கே தெளிவாக, ''நடுவர் நீதிமன்ற இடைக்கால உத்தரவை குறித்து மத்திய அரசு உச்ச நீதிமன்றத்தின் ஆலோசனையைக் கேட்பது தேவை அற்றது'' என்று சொன்னார்கள். ''இதனால் பிரச்சினை தீராது, மேலும் பிரச்சினை சிக்கலாகும்'' என்றும் தன் அச்சத்தை வெளியிட்டார்கள். இன்றைக்கு அது நடந்துவிட்டது என்று நான் நினைக்கிறேன். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் திரு. வாழப்பாடியார் இந்தப் பிரச்சினையில் மக்கள் நலன் கருதி மத்திய அரசிலிருந்து தன் அமைச்சர் பதவியை ராஜினாமா செய்தார் என்றால் அவரை நாம் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறோம். காவிரி நீர்ப் பிரச்சினை இன்றைக்கு ஒரு தேசிய பிரச்சினையாக உருவெடுத்திருக்கிறது. நதிகளை தேசியமயமாக்க வேண்டும் என்று மத்திய அரசை இம்மாமன்றம் கேட்டுக் கொள்ள வேண்டும் என இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எங்கள் தென்னாற்காடு மாவட்டத்தைப் பொறுத்த வரையில் மறைந்த முதலமைச்சர், புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். காலத்திலேயே இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்கின்ற திட்டம் இருந்தது. அவருக்குப் பின்னால் வந்த அரசு அதனை கிடப்பில் போட்டு விட்டது. புதிதாக பொறுப்பேற்றுள்ள இந்த அரசு தென்னாற்காடு மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து வடக்குப் பகுதிக்கு விழுப்புரத்தை தலைநகராகக் கொண்டும், தெற்குப் பகுதிக்கு கடலூரை தலைநகராகக் கொண்டும் நிர்வாகம் செய்யப்பட வேண்டும். ஏற்கெனவே போலீஸ் மாவட்டம் விழுப்புரத்தை தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வருகின்றது என்பதைக் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திண்டிவனம், செஞ்சி, திருக்கோயிலூர் ஆகிய மூன்று தாலுகாக்களும் வறட்சியால் பாதிக்கப்பட்டு, குடிநீர்ப் பிரச்சினை அதிகமாகவும், விவசாயப் பணிகள் பெருமளவில் பாதிக்கக் கூடிய அளவிலும் உள்ளன. மேலும் கால்நடைகளுக்குத் தீவனம்

இல்லாததால் சிறு விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஆகவே அவர்கள் தங்களுடைய கால்நடைகளைக் குறைந்த விலைக்கு விற்றுவிட்டு பிழைப்புக்காக அண்டை மாநிலமான கர்நாடகா, ஆந்திரா போன்ற பகுதிகளுக்குச் சென்றுகொண்டு இருக்கிறார்கள். இதனைக் கருத்தில் கொண்டு இந்த மூன்று தாலுகாக்களையும் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதியாக அறிவித்து, நில வரியை ரத்து செய்ய வேண்டும் என்றும், விவசாயக் கடன்கள் வசூலிப்பதையும் நிறுத்தி வைக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

தென்னாற்காடு மாவட்டம் தொழில் துறையில் பின்தங்கிய பகுதியாக இருப்பதால் செஞ்சியில் தொழிற்பேட்டை ஒன்றை ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேல்மலையனூர் தொகுதியில் வளத்தியை மையமாகக் கொண்டு பலநோக்கு தொழிற் பயிற்சி நிலையம் ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நெடுநாட்களாக உள்ள அந்தப் பகுதி மக்களின் விருப்பத்தை நிறைவேற்றும் வகையில் ஒரு ''பாலிடெக்னிக்கை'' ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதனால் அந்தப் பகுதியில் படித்த இளைஞர்களுக்கு தொழிற் கல்வி கற்கவும் சுய வேலைவாய்ப்புக்கும் வழி வகைகள் ஏற்படும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

திண்டிவனத்தில் விவசாய ஆராய்ச்சி நிலையம் இருப்பதால் அங்கே விவசாயக் கல்லூரி ஒன்று ஆரம்பித்தால் அந்தப் பகுதியில் உள்ள மாணவர்கள் படிக்க ஏதுவாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

செஞ்சி தாலுகா மக்கள் விவசாயத்தை முழுமையாக நம்பி இருப்பதால் இப்பகுதி மக்கள் பயன் அடையும் வகையில் ஆலம்பூண்டி கிராமத்தை மையமாகக் கொண்டு பால் பண்ணை மற்றும் குளிரூட்டும் நிலையம் ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திண்டிவனம், திருக்கோயிலூர், செஞ்சி ஆகிய பகுதிகளில் மணிலா அதிகமாக உற்பத்தியாவதால், செஞ்சியை மையமாகக் கொண்டு ஒரு TANCOF தொழிற்கூடம் நிறுவ வேண்டும் என்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன். இதனால் இப்பகுதியில் பல ஆயிரம் ஏக்கர் மணிலா விவசாயம் அபிவிருத்தி அடையும், விவசாயிகளுக்கும் வேலை வாய்ப்பும் பெருகும் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

1991 செப்டம்பர் 7] [திரு. கோ. ஜானகிராமன்]

திண்டிவனம், செஞ்சி, மேல் மலையனூர் இந்த மூன்று தொகுதி களிலும் அதிகமாக கரும்பு சாகுபடியாகியும் 40 கி.மீ. சென்று தான் ஆலைக்கு கரும்பு சப்ளை செய்ய வேண்டியுள்ளது. 25 கி.மீ. போக்குவரத்து அமையும் வகையில் கூட்டுறவுத் துறையின் மூலமாக ஒரு சர்க்கரை ஆலை ஏற்படுத்தித் தர வேண்டும், இது இந்தப் பகுதி மக்களுடைய நீண்ட நாளைய கோரிக்கையாக இருந்து வருகிறது.

கலசபாக்கத்திலிருந்து வரும் செய்யாறு ஆற்றிலிருந்து சீட்டம் பட்டு, பொய்யாநந்தல் எதப்பட்டு, ஆவலூர்பேட்டை, மேல் மலையனூர் ஏரிக்கு கால்வாய் வெட்டி தண்ணீர் கொண்டு வருமாறு கேட்டுக்கொள்கிறேன். இதனால் பல ஆயிரம் ஏக்கர் புஞ்செய் நிலங்கள் பாசன வசதி பெறும், குடி தண்ணீர் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மேல்மலையனூர் தொகுதியில் செஞ்சி வட்டம், கெங்கவரம், போத்துவாய் பகுதியில் மொக்கமலைக்கும் வழுதலம்பாறைக்கும் இடையில் அணை கட்டினால் இதன் மூலம் சுமார் 40 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் சாகுபடி செய்ய ஏதுவாகும். குடிநீர்ப் பிரச்சி னையும் தீர வழியுண்டு. நீண்ட நாட்களாக அரசின் பரிசீலனை யில் இந்தத் திட்டம் இருந்து வருகிறது என்பதை இந்த நேரத் திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பிற்பகல் 1—50

என்னுடைய மேல்மலையனூர் தொகுதியில் எங்கு பார்த்தா லும் குடிதண்ணீர் பிரச்சினை மிகவும் மோசமாக உள்ளது. தாய்மார்கள் குடிதண்ணீருக்காக பல கிலோ மீட்டர் தூரம் சென்று வருவதை நாங்கள் பார்க்கிறோம். கைப்பம்புகள் சரிவர வேலை செய்வது இல்லை. பழுதடைந்த கைப்பம்புகள் ரிப்பேர் செய்யப்படாமல் இருக்கின்ற நிலை இருக்கிறது. குடிநீர் வடிகால் வாரியம் கட்டி முடித்திருக்கின்ற மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி சரிவர இயங்காத நிலையுள்ளது. இவற்றை எல்லாம் கவனத்திற் கொண்டு, குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற் காக தக்க நடவடிக்கை எடுக்குமாறு இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

மற்றும் திருக்கோயிலூர், தென்பெண்ணை ஆற்றிலிருந்து அனந்தபுரம்— செஞ்சி கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ. 6 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த பரிசீலனையில் இருந்து வருகின்றது. இது குறித்து அரசு துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதனால் முகையூர், மேல்மலையனூர், செஞ்சி தொகுதி மக்கள் அதிக பலன் அடைவார்கள் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மேல்மலையனூர் தொகுதியில், எயில் வடபாலை மலையனூர் ஆகிய கிராமங்களில் ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்கக் கேட்டுக் கொள்கிறேன். அந்தப் பகுதியில் உள்ள மக்கள் அரசுக்கு செலுத்த வேண்டிய பணமும் நிலமும் கொடுத்துள்ளார்கள். இதைத் துரிதமாக ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அனந்தபுரம் மற்றும் அவலூர்பேட்டையில் ஏற்கெனவே அரசு மருத்துவமனைகள் இருந்தன. அவற்றை பிரைமரி ஹெல்த் சென்டராக மாற்றிவிட்டார்கள். இதனால் நிதி மற்றும் மருத்துவ வசதி பாதிக்கப்பட்டுள்ளது. இதனைப் போக்குகின்ற வகையில் அரசு பொது மருத்துவமனையாக மீண்டும் மாற்ற வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

செஞ்சி அரசு பொது மருத்துவமனையில் போதுமான படுக்கை வசதிகள் இல்லை. தற்போது அங்கே 58 படுக்கைகள் தான் உள்ளன. ஆனால் நாளொன்றுக்கு 100-க்கு மேற்பட்ட உள் நோயாளிகள் இருக்கிறார்கள். ஆகவே அங்கே கூடுதல் படுக்கை வசதிகள் உடனடியாக ஏற்படுத்த வேண்டும். அங்கே ஸ்பெஷல் வார்டு, எலும்பு முறிவுப் பிரிவு, பல் சம்பந்தப்பட்ட பிரிவு, விபத்துப் பிரிவு, கண் சிகிச்சைப் பிரிவு யாவும் ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் செஞ்சியில் கூடுதல் மருத்துவமனைக் கட்டிடம் கட்ட 1984 ஆம் ஆண்டு முதல் அரசு பரிசீலனையில் இருந்து வருகின்றது. என்றாலும், அமல்படுத்தவில்லை. உடனடியாக அதை அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ரேஷன் கடைகளைப் பொறுத்த வரையில், 100 குடும்பங்கள் இருந்தாலும் கூட, தனியாக அவர்களுக்கு அந்த கிராமத்திலேயே நியாயவிலைக் கடை ஒன்றை ஏற்படுத்தி அத்தியாவசியப் பொருட்கள் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். தட்டுப்பாடு இல்லாமல் அரிசி, மண்ணெண்ணெய் கிடைக்க வழிவகை செய்ய வேண்டுகிறேன். இதனால் அரசுக்கு கூடுதல் செலவானாலும், மக்கள் நலன் கருதி அதனை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். 500 குடும்ப அட்டைகளுக்கு ஒரு ரேஷன் கடை என்ற அளவில் கூடுதலாக நியாய விலைக் கடைகள் திறக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் ஜாமீன் இல்லாமல் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்கு கடன் வழங்கப்படுகின்றது. அதுபோன்று, கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக டீக் கடை, பெட்டிக் கடை, இட்டிலிக் கடை, காய்கறிக் கடை போன்ற கடைகள் நடத்துவதற்கு, குறைந்தபட்சம் ரூ. 1000-மும் அதற்கு மேலும் கடன் கொடுத்தால் மக்கள் மேலும் பயன் அடைவார்கள்.

1991 செப்டம்பர் 7] [திரு. கோ. ஞானகிராமன்]

விவசாயப் பிரச்சினையைப் பொறுத்த வரையில், ஏரிகளுக்கு வரும் வரத்து வாய்க்கால்கள் (சப்ளை சேனல்), மராமத்து வேலைகளும் சர்க்கார் மூலமாக இப்போது செய்யப்படுகின்றது. ஆனால் டிஸ்டிரிபியூஷன் சேனல் வேலையை விவசாயிகளே மராமத்து செய்ய வேண்டுமென் விட்டு விடுகிறார்கள். எந்தக் கிராமத்திலும் விவசாயிக இதைச் செய்வதில்லை. இதனால் விவசாயத்திற்குத் தண்ணீர் போய்ச் சேருவதில்லை. எனவே, சர்க்கார் டிஸ்டிரிபியூஷன் சேனல் மராமத்து வேலையையும் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு விவசாயத்திற்கு நிரந்தரமாக மின்சார சப்ளை கிடைப்பதில்லை. எப்போது வேண்டுமானாலும் நின்று விடுகிறது. மேலும் குறைந்த வோல்டேஜ் காரணமாக மோட்டார்களின் காயில் கம்பிகள் எரிந்து போய் விடுகின்றன. இவற்றையெல்லாம் தவிர்க்க சர்க்கார் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பொருட்களுக்கு நியாய விலை கொடுக்க வேண்டும். நெல் கொள்முதல் விலையை மத்திய அரசு உயர்த்தியுள்ளது போதுமானதாக இல்லை. மாநில அரசு கொள்முதல் செய்கின்ற காலத்தில் சற்று கூடுதலாக விலையை உயர்த்திக் கொடுத்தால் விவசாயிகளுக்குப் பேருதவியாக இருக்கும். அதேபோல், விவசாயத்திற்குப் பயன்படுத்துகின்ற டீசல் விலையைக் குறைத்து, மானிய விலையில் டீசல் சப்ளை செய்ய வேண்டும். புதிதாகக் கண்டுபிடிக்கின்ற நெல் ரகங்களை விவசாயிகளுக்கு இந்த ஆண்டு இனாமாக வழங்க வேண்டும். இதனால் உடனடியாக உற்பத்திப் பலன் கிடைக்க வழி ஏற்படும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1-10

விவசாயிகளுக்கு கொடுக்கின்ற உரத்தை பழைய விலைக்கே கொடுக்க தமிழக அரசு நடவடிக்கையெடுத்து அகில இந்திய அளவில் தமிழ் நாடு முன்மாதிரியாக விளங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கல்வியைப் பொறுத்தவரையில் நமது மொத்த வருமானத்தில் கல்விக்காக கிட்டத்தட்ட ரூ. 1,300 கோடி செலவு செய்ய முன்வந்திருப்பது உண்மையிலேயே பாராட்டுக்குரியது. கல்விக்கு முன்னுரிமை அளிப்பது வரவேற்கத்தக்கது என்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். தமிழகத்தின் கல்வித் துறையில் மாவட்ட கல்வி அலுவலர்கள் பதவி கடந்த நான்கு ஆண்டுகளாக சுப்ரீம்

கோர்ட்டில் 'ஏ' பிரிவு, 'பி' பிரிவு தலைமையாசிரியர்கள் கேஸ் போட்டிருப்பதால், ஜட்ஜ்மெண்ட் வராத காரணத்தால், அப்பதவிகள் காலியாக உள்ளன. இதில் அரசு தீர்க்கமான முடிவு எடுத்தால் இப்பதவிகளை பூர்த்தி செய்ய ஏதுவாகும் என்று சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏற்கெனவே எல்லா அரசு மேல்நிலைப் பள்ளிகளிலும் இடைநிலை ஆசிரியப் பயிற்சி வகுப்பு இயங்கி வந்தது. இடையில் நிறுத்தப்பட்டுள்ளது. அவற்றை மீண்டும் இயங்குவதற்கு உத்தரவிட வேண்டும். இதனால் தனியார் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் சேர வசதியில்லாத ஏழை எளிய மாணவர்கள் பயனடைவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

போதுமான அளவுக்கு பள்ளிக் கட்டிடங்கள் இல்லாத நிலையில் மாணவர்கள் மரத்தடியில் படிக்கிற நிலையுள்ளது. கிராமங்களில் இருக்கின்ற உயர்நிலைப் பள்ளிகளில் ஆய்வுக் கூடங்கள் இல்லை. என்னுடைய மேல்மலையனூர் தொகுதியில் ஆலம்பூண்டி அரசு மேல்நிலைப் பள்ளியில் ஆய்வுக் கூடங்கள் இல்லை. ஆங்கில ஆசிரியர்கள் இல்லை. இதனால் மாணவர்களுக்கு கல்வி வழங்குவது பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எல்லோரும் கல்வி பெற முறைசாராக் கல்வி கிராமப்புறங்களில் விரிவுபடுத்த எடுத்திருக்கின்ற நடவடிக்கை உண்மையிலேயே பாராட்டுக்குரியது, வரவேற்கத் தக்கதாகும் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

படித்தவர்களுக்கு வேலை கிடைக்கின்ற காலம் வரை இளைஞர்களுக்கு கொடுக்கின்ற உதவித் தொகை மிகக் குறைவாக உள்ளது. இதனை உயர்த்திக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆதி திராவிடர் நலனுக்காக இந்த அரசு 10 அம்சத் திட்டத்தினை அமல்படுத்த இருப்பதை உண்மையில் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆதி திராவிட மக்களுக்கு கட்டிக் கொடுக்கிற தொகுப்பு வீடுகளில் இலவச மின்சார விளக்குகள் அமைத்துத் தர வேண்டும். அவர்கள் வாழ்கிற தெருக்களுக்கு லைட் வசதி, குடிநீர் வசதி செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். 'ஒன் லைட் சர்வீஸ்' என்பது புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக்குப் பின்னால் நிறுத்தப் பட்டுள்ளது. அவற்றை மீண்டும் அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆதி திராவிட மக்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்குவதை துரிதப்படுத்த வேண்டுமென்று

கேட்டுக் கொள்கிறேன். அதைப்போல பிற்பட்ட, மிகவும் பிற்பட்ட மக்களுக்கும் மனைப் பட்டா வழங்க வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

பத்து ஆண்டுகளுக்கு மேலாக மின்சார இணைப்புக் கோரி பதிவு செய்துள்ள விவசாயிகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப் படாமல் உள்ளது. இதனைப் போக்குவதற்கு அரசு நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக, செஞ்சி நகரத்தில் முன்சீப் கோர்ட்டிற்குச் சொந்தமாக கட்டிடம் வேண்டுமென்று இந்த அரசை தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன். அனந்தபுரம் காவல் நிலைய வழக்குகள் விழுப்புரம் நகரத்திற்குச் செல்வதைத் தவிர்த்து, முன்போலவே செஞ்சி கோர்ட்டிற்குச் செல்வதற்கு உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனக்கு பேச வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து விடை பெறுகிறேன், வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, திரு. டி. வேலையா அவர்கள்.

திரு. டி. வேலையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்று சிறப்புமிக்க இந்த மக்கள் மன்றத்தில் தமிழக மக்களின் ஏகோபித்த நல்லாதரவையும், நல்லெண்ணத்தையும் பெற்று மாதர்குல மாணிக்கமாக விளங்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் தமிழ் நாட்டை வளப்படுத்துகிற சீரிய பணியில் ஈடுபட்டு இந்தியத் துணைக் கண்டத்திற்கே வழிகாட்டியாக விளங்குகிற அரசியல் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்க வேண்டிய இந்த நல்ல வேளையில் எனக்கு பேசுகிற வாய்ப்பைக் கொடுத்த உங்களுக்கு என்னுடைய பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தின் தென்கோடியில் பிறந்து வாழ்பவர்கள் நாங்கள். சமூகப் பொருளாதார ரீதியில், பேரறிஞர் அண்ணா அவர்கள் வார்த்தைகளில் சொல்வதானால், நாங்கள் சாமானியர்கள். அப்படிப்பட்ட எங்களையும் இந்த புகழ் வாய்ந்த அவையில் அமர்ந்து பணியாற்றச் செய்த எங்களுடைய இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கு எனது பணிவான வணக்கத்தையும், நன்றியையும் இந்த நேரத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எங்களை இந்த நிலைக்கு ஆளாக்கிய புரட்சித் தலைவி அவர்களுக்கு, நாங்கள் எங்கள் வாழ்நாள் முழுவதும் கடமைப்பட்டு இருந்து, அவர்களுடைய உள்ளம் மகிழ்ச்சி அடைகிற வகையில் வாழ்நாள் முழுவதும் உழைப்போம் என்பதை நான் இங்கே கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்படிப்பட்ட நல்ல வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்த, புரட்சித் தலைவி அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று, என்னை நெல்லை சட்டமன்ற உறுப்பினராக ஆக்கிய நெல்லைத் தொகுதி மக்களுக்கு எனது நன்றியை கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1-15

இன்று நாட்டிலுள்ள அத்தனை மக்களும் பாராட்டுகிற வகையில் புரட்சித் தலைவி அவர்களும், இங்கே அமர்ந்திருக்கிற நமது மரியாதைக்குரிய நிதியமைச்சர் அவர்களும், இருக்கிற நிதியைக் கொண்டு நல்ல பல திட்டங்களை எல்லாம் தீட்டி நாட்டு மக்களுடைய வாழ்வு வளம் பெறுவதற்காக இங்கே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இந்த வரவு செலவுத் திட்டமானது நாட்டு மக்களுடைய வாழ்வு வளம் பெறுகிற வகையில், இருக்கிற நிதியைக் கொண்டு எல்லோரும் எல்லாம் பெற வேண்டும் என்ற அந்தத் தத்துவத்தின் அடிப்படையில் இது அனைவராலும் பாராட்டப்பட வேண்டிய ஒரு பட்ஜெட்டாக அமைந்திருக்கிறது. இன்று நாட்டு மக்கள் அனைவரும் இதைப் பாராட்டுகிறார்கள். நாட்டு மக்களுடைய ஒரு பகுதியில் உள்ள மக்களுடைய பிரதிநிதி என்ற முறையில் இந்த வரவு செலவுத் திட்டத்தை நானும் வாழ்த்தி, வரவேற்று பாராட்டுவதிலே மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

புரட்சித் தலைவி அவர்கள் இந்த நாட்டிலே முதல்வராக பொறுப்பேற்ற பிறகு, சட்டம் ஒழுங்கு நிலைமைகள் எல்லாம் மிகவும் சீர் அடைந்து நாட்டிலேயிருக்கிற அத்தனை பேர்களுக்கும் இன்றைக்கு பாதுகாப்பு கிடைக்கிற ஒரு சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது. இந்த நேரத்தில் புரட்சித் தலைவி அவர்கள் எடுத்த தீவிரமான நடவடிக்கைகளால் இன்று காவல் துறை போன்ற துறைகள் எல்லாம் நன்றாகச் செயல்பட்டு, மக்களுக்கு நல்ல வழியிலே பாதுகாப்பு கிடைக்கிற ஒரு சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது. ஆனால் காவல் துறையிலே இப்போது வேலை பார்க்கிற அங்கேயிருக்கிற பணியாளர்களுக்குப் போதுமான வசதிகள் இன்னும் இல்லை. அவர்களுக்கு வேண்டிய வசதிகள் இன்னும் செய்து கொடுக்கப்பட வேண்டும் என்பதையும் நான் இங்கே கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். காவல் துறையிலே வேலை பார்க்கின்றவர்களுக்குப் போதுமான வசதிகள் இல்லை என்று சொன்னாலும்

1991 செப்டம்பர் 7] [திரு. டி. வேலையா]

கூட, அவர்கள் கடந்த காலத்தில் தவறாகப் பயன்படுத்தப் பட்ட காரணத்தால், இன்னும் அவர்கள் தங்களைச் சரிப் படுத்திக் கொள்ள வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது என்பதை நான் இங்கே கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

சமீபத்தில் கூட கோயம்புத்தூர் போன்ற இடங்களில் சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏற்பட்டது. அது ஏன் ஏற் பட்டது என்பதை சற்று ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்று நான் இங்கே கூறிக் கொள்ள விரும்புகிறேன். அரசு வழக்கறிஞ ராக ஒரு 5 ஆண்டுக் காலம் பணியாற்றிய காரணத்தால், காவல் துறை அதிகாரிகளோடு இருந்து நானும் பணியாற்றி யிருக்கின்ற காரணத்தால், காவல் துறையிலே வழக்கமாக நடைபெறுகிற சில குறைபாடுகளை இங்கே சுட்டிக்காட்டி, அந்தக் குறைபாடுகள் இனியும் வருங்காலத்தில் இல்லாத அளவிற்கு இந்த அரசு தீவிரமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இங்கே நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

பொதுவாக, காவல் நிலையத்திற்குச் சென்று ஒருவர் ஒரு குற்றத்தைப் பற்றிய புகாரைக் கொடுத்தால், அந்தப் புகார் எப்போது, எப்படிக் கொடுக்கப்படுகிறதோ, அந்த அளவிலே அந்தப் புகாரை உடனடியாக பதிவு செய்ய வேண்டும் என்பது சட்டம். ஆனால் அந்தக் காவல் நிலையத் திற்குச் சென்று புகார் கொடுத்தாலும், நாட்டிலே இப்போது வழக்கமாகப் பின்பற்றப்படுகிற ஒரு முறை என்னவென்றால் யார் சென்று காவல் துறை அதிகாரிகளிடம் ஒரு மனுவைக் கொடுத்தாலும், உடனடியாக அவர்கள் சட்டபூர்வமாக அதைப் பதிவு செய்வதில்லை. அதற்கு மாறாக, பதிவு செய்வதற்கு முன்பாகவே, அவர்கள் விசாரணையிலே இறங்கி விடுகிறார்கள்.

அதுமட்டுமல்ல, அந்தப் புகாரை உடனடியாக பதிவு செய்தால், தனக்கு நல்ல பெயர் கிடைக்குமா, அல்லது தான் ஏதேனும் மாட்டிக்கொள்வோமா என்று தங்களுடைய ஒரு தற்காப்பு உணர்ச்சியிலேதான் அங்கே குற்றங்கள் பதிவு செய்யப்படுகிறதே ஒழிய, உடனடியாக சட்டத்தின்படி குற் றத்தை அவர்கள் பதிவு செய்து, விசாரணையிலே இறங்குவ தில்லை. இதை நான் அனுபவத்தில் கண்ட ஒரு வழக்கை வைத்துக் கூறுகிறேன்.

இருவர் சண்டையிட்டு, அங்கே ஒரு கொலை நிகழ்ந்து விட்டது. உடனடியாக காவல்துறை அதிகாரிகள் என்ன நினைக்கிறார்கள் என்று சொன்னால் அந்தக் கொலை வழக்கை அப்படியே பதிவு செய்துவிட்டால் ஒரு வேளை போன வருடம் ஒரு நிகழ்ச்சி நடந்து, அதனுடைய தொடர்ச்சியாக இந்த வருடம் ஒரு கொலை நடந்திருக்கிறது என்று சொன்னால்,

அந்தப் போன வருட நிகழ்ச்சியை இதிலே காட்டினால், போன வருடம் நடந்த நிகழ்ச்சியில் நீங்கள் ஏன் சரியான நடவடிக்கை எடுக்கவில்லை என்று அவர்கள் மீது ஒரு கேள்வி வரும் என்ற காரணத்தால், அப்படிப்பட்ட ஒரு கேள்வியிலே யிருந்து தாங்கள் தப்ப வேண்டும் என்ற பாதுகாப்பு உணர்ச்சியில், அங்கே வருகிறவர்கள் சொல்கிற கூற்றை அப்படியே எழுதுவதில்லை. அதற்கு பதிலாக அவர்கள் என்ன கேட்கிறார்கள் என்று சொன்னால், போன வருடம் நடந்த நிகழ்ச்சியை நீங்கள் சொல்லவேண்டாம், வேறு ஏதாவது அந்த ஊரிலே நடந்த நிகழ்ச்சி இருக்கிறதா என்று கேட்கிறார்கள். 15 அல்லது 20 வருடங்களுக்கு முன்னாலே அந்த ஊரிலே யார் மீதாவது ஒரு சிவில் வழக்கு நடந்து, அதிலே சிறிய தகராறு நடந்திருக்கும் என்று சொன்னால், அந்தப் பத்திரங்களை எல்லாம் கொண்டுவரச் சொல்லி, 15, 20 வருடங்களுக்கு முன்பு நடந்த ஒரு சம்பவத்திற்கு, இந்தக் கொலை காரணம் என்பது போல, அங்கே ஒரு காரணத்தைச் சூட்டி, வழக்கைப் போடுகிறார்கள். இப்படிப்பட்ட வழக்குகள் நீதிமன்றத் திற்கு வருகிறபோது, அங்கே நீதி கிடைக்காமல் அது தப்பி விடுகிறது என்பதை நான் இங்கே கூறிக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதேபோல்தான் பல்வேறு காரணங்களுக்காக காவல் துறையிலே பணி புரிகிறவர்கள் வழக்கை உடனடியாக பதிவு செய்வதில்லை. சில வேளைகளில் மேல் அதிகாரிகளுக்கோ, அல்லது விசாரணை செய்ய வேண்டிய அதிகாரிகளுக்கோ பல்வேறு பணிகள் இருக்கிற காரணத்தால் "வழக்கை இப் போது வந்ததாகக் காட்டிக் கொள்ளவேண்டாம், நான் வெளியே சென்றுவிடுகிறேன், பிறகு நீங்கள் அந்த வழக்கை வேண்டுமானால் பதிவு செய்யுங்கள்" என்று மேல் அதி காரிகளே தங்களுக்குக் கீழே வேலை செய்பவர்களை, வழக்குகளை பதிவு செய்யவிடாமல் தடுத்துவிடுகிறார்கள். இதையெல்லாம் நான் ஏன் சொல்கிறேன் என்று கேட்டால், இப்படிப்பட்ட சிறு சிறு தவறுகள் நடக்கிற காரணத்தால் அந்தத் தவறுகள் எல்லாம் ஒட்டு மொத்தமாக ஆகி, கடைசியில் அது ஒரு பெரிய லா-அண்ட்-ஆர்டர் பிராப்ளமாக வருகிற போதுதான் நாம் அதைப்பற்றி கவலைப்படுகிறோமே ஒழிய, ஆரம்பத்தில் இப்படிப்பட்ட சிறிய சிறிய விஷயங்களில் அரசு அதிகாரிகளும், காவல்துறை அதிகாரிகளும் சட்டப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று ஒரு கட்டாயத்தை நாம் ஏற்படுத் தாத காரணத்தால், ஆரம்பகாலத்தில் விட்டுவிட்டு, பிறகு அது நாட்டை உலுக்குகிற ஒரு பெரிய விஷயமாக மாறிய பிறகு தான் நாம் அதைப்பற்றி ஆராய்ச்சி செய்கிறோம். ஆகவே நான் இங்கே இருக்கிற நமது அமைச்சர் பெருமக்கள்

1991 செப்டம்பர் 7] [திரு. டி. வேலையா]

எல்லோரையும் கேட்டுக் கொள்வது என்னவென்று சொன்னால், அது ஒரு சாதாரண சட்ட விதியாக இருந்தாலும் சரி, அல்லது ஒரு பெரிய சட்ட விதியாக இருந்தாலும் சரி, அவ்வப்பொழுது அரசு அதிகாரிகள் இந்த சட்ட விதிகளைப் பயன்படுத்தி தங்களது கடமைகளை நிறைவேற்றுகிறார்களா என்பதை நாம் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

பிற்பகல் 1–20

அதைப்போன்றுதான் நம்முடைய மாணவர்களைப் பற்றிய ஒரு செயலை நமது முதலமைச்சர் அவர்கள் சில நாட்களுக்கு முன்னால் தீவிரமான சில கருத்துக்களைச் சொல்லியிருந்தார்கள். அது பற்றி நான் இங்கே ஒரு கருத்தைக் கூற ஆசைப்படுகிறேன். அதாவது மாணவர்கள் அல்லது தொழிலாளர்கள் ஒரு ஊர்வலமாக வருகிறார்கள் அல்லது அவர்கள் ஒரு கோரிக்கை வைக்கிறார்கள் என்று சொன்னால், அவர்களுக்கு மட்டும் சட்டம் இருப்பதாக அங்கே காட்டிக்கொள்வது இல்லை. காவல்துறை அதிகாரிகளும் ஆரம்பத்தில் அவர்களை விட்டுவிட்டு பிறகு பிரச்சினை அதிகமான பிறகு அதைப்பற்றி பெரிதாக எடுத்துக் கொள்கிறார்கள். ஆகவே யார் சம்பந்தப்பட்டவர்களாக இருந்தாலும் சரி, சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க வேண்டியது காவல்துறை அதிகாரிகளுடைய கடமை என்பதை] நாம் இங்கே வலியுறுத்தியாகவேண்டும்.

அதுபோன்றுதான் '' Peace Committees '' என்று போடுகிறார்கள். நான் இங்கே ' Futility of the Peace Committees '' என்பதைப் பற்றி கொஞ்சம் சொல்வதற்கு கடமைப்பட்டிருக்கிறேன். இந்த சமாதான கமிட்டிகளைப் போடுவதால் எந்தப் பகுதியிலேயும் எந்த கலவரமும் நின்றதாகவே தெரியவில்லை. காரணம் என்னவென்று சொன்னால், சமாதானக் கமிட்டியில் பல்வேறு தரப்பட்ட பிரிவிலிருந்தும் அங்கே கமிட்டிக்கு ஆட்கள் வருகிறார்கள். அங்கே வந்து உட்கார்ந்து கொண்டு தங்கள் தரப்பினருடைய வாதத்தை மட்டும் எடுத்து வைக்கிறார்களேயொழிய அப்படிப்பட்ட கலவரங்கள் இனி நடக்கக் கூடாது என்ற ஒரு நல்ல எண்ணத்திலே அங்கே யாருமே வருவதில்லை. இன்னும்கூட அதிகமாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், அந்தக் கமிட்டியிலே வந்து அமர்ந்து கொண்டு, தங்கள் தங்கள் ஆட்களைக் காப்பாற்றுகின்ற பணியை மட்டும் செய்து விட்டு, அங்கே மற்றவர்களை குறை கூறுவதற்கு மட்டும் தான் அந்த ' Peace Committees பயன்படுகிறது. ஆகவே ஒரு இடத்திலே ஒரு தகராறு ஏற்படுகிறது என்று சொன்னால், இந்த அதிகாரிகள் எல்லோரும் உடனடியாக Peace Committees-லே தங்களது கவனத்தை அதிகமாகச்

செலுத்தி அங்கே கிராமங்களிலிருந்து அல்லது தள்ளி இருக்கின்ற இடங்களிலே நடைபெறுகின்ற அந்த நிகழ்ச்சிகளை உடனடியாக தடுத்து நிறுத்துவதற்குப் பதிலாக அவர்களுடைய சக்திகளை எல்லாம் இந்த 'Peace Committees'-லே செல விடுகிறார்கள். ஆனால், இந்த 'Peace Committee' இந்த பிரச்சினைகளை அடக்குவதற்குப் பயன்படுகிதா என்று சொன்னால் அதுவும் பயன்படவில்லை. ஆகவே அதிகாரிகள் எல்லோரும் இந்த 'Peace C mmittee'-லே அதிகமான கவனத்தைச் செலுத்துவதற்குப் பதிலாக சட்டத்தின் மூலமாக உடனடியாக என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமோ, அந்த நடவடிக்கைகளை எல்லாம் எடுத்துவிட்டு, பிறகு தான் இந்த 'Peace Committee'-யைப் பற்றி அவர்கள் எண்ண வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்ள ஆசைப்படு கிறேன். வழக்குகளை உடனடியாகப் பதிவு செய்வது, சம் பந்தப்பட்டவர்களை உடனடியாகக் கைது செய்வது, பாதிக்கப் பட்ட மக்களுக்கு உடனடியாகப் பாதுகாப்பு கொடுப்பது போன்ற பணிகளை முதலிலே செய்து விட்டு பிறகு தான் இந்த சமாதானக் கமிட்டிகளைப் பற்றி எல்லாம் அவர்கள் யோசனை செய்ய வேண்டுமென்பதை நான் இங்கே கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதேபோன்றுதான் இப்பொது எங்கே சென்றாலும் 'Noise Pollution' அதாவது ஸ்பீக்கர் போன்ற சாதனங் களை வைத்து எங்கு பார்த்தாலும் சப்தத்தை அதிக மாக ஏற்படுத்தி, அதிலே சுகாதாரத்திற்கு கேடு விளைவிக் கின்றார்கள். அதிலிருந்து 'Law and Order problem' வரு வதற்கு வழி வகுக்கிறார்கள். இப்போது நாட்டு மக்களிடையே இருக்கின்ற ஒரு மனப்பான்மை என்னவென்று சொன்னால், அவர்கள் எந்த மதத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரி, அல்லது எந்த அமைப்பைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரி, தங்கள் சம்பந்தப்பட்ட விஷயம் வருகின்றபோது மட்டும் அவர்கள் என்ன வேண்டுமானாலும் செய்து கொள்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு இடைஞ்சலாக இருக்கின்றபொழுது மட்டும் அடுத்தவர்களை குறை கூறுகிறார்கள். அப்படிப்பட்ட சூழ் சலை எல்லாம் இருக்கின்ற இந்த நேரத்தில், இங்கே எல்லோரும் சட்டப்படி நடக்கவேண்டுமென்று ஒரு கட்டாயத்தை ஏற்படுத்த வேண்டுமென்பதை நான் கேட்டு, இந்த பட்ஜெட் டில் புரட்சித் தலைவி அவர்கள் எங்களுடைய மாவட்டத் திற்கும் நல்ல பல திட்டங்களை எல்லாம் கொடுத்திருக்கிறார் கள். இருந்தாலும் திருநெல்வேலி வழியாகச் செல்கின்ற சாலையில் நெருக்கடிகள் எப்போதுமே அதிகமாக இருக்கிறது. திருநெல்வேலிக்கு தெற்குப் பகுதியிலே செல்ல வேண்டுமென்று சொன்னால், திருநெல்வேலி வழியாக ஒரேயொரு ரோடு

வழியாகத்தான் செல்ல வேண்டுமென்ற நிலை இருக்கிறது. அங்கே 'Traffic Congestion' அதிகமாக இருக்கிறது. ஆகவே தாமிரபரணி ஆற்றின் மேல் ஒரு பாலம் கட்டி ஒரு 'Bypass' ரோடு போட்டு, அந்த நெருக்கடியைக் குறைக்க வேண்டிய ஒரு கட்டாயம் இருக்கிறது. ஆனால் இந்த பட்ஜெட்டில் அதற்கான தொகை மிகவும் குறைவாக கொடுக்கப் பட்டிருக்கிறது. ஆகவே அதற்கு முடிந்த அளவு அதிகத் தொகையை ஒதுக்கி, இப்படிப்பட்ட பணிகளை விரைவாக முடித்து, திருநெல்வேலியிலே இருக்கின்ற அந்த 'Traffic Congestion'-ஐக் குறைப்பதற்கும், அங்கே இருக்கின்ற குடிநீர்த் தட்டுப்பாட்டை நீக்குவதற்கும் இந்த அரசு நல்ல பல நடவடிக்கைகளை எடுத்து, எங்களுக்கு உதவவேண்டு மென்று வேண்டி விரும்பிக் கேட்டு, எங்களை இந்த நிலைக்கு ஆளாக்கிய புரட்சித் தலைவிக்கு நாங்கள் வாழ்நாள் முழுவதும் நன்றிக் கடன் பட்டு, அவர்களுடைய அரசு எடுக்கின்ற எல்லா திட்டங்களும் வெற்றி பெறுவதற்காக நாங்கள் உழைப்போம் என்று கூறி, இந்த சந்தர்ப்பத்தில் பேசுகின்ற நல்ல வாய்ப் பினைக் கொடுத்த மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு எனது நன்றியைக் கூறி விடை பெறுகிறேன். வணக்கம்.

பிற்பகல் 1—25

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எம். கே. சுந்தரம்.

திரு. எம். கே. சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் இங்கே நடைபெற்றுக் கொண் டிருக்கிற நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்தில் என்னை பேச அழைத்தமைக்கு சட்டமன்றப்பேரவையினுடைய பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியை இங்கே முதற்கண் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன். இந்த மாமன்றத்திலே எங்களைப் போன்ற ஏழை எளிய மக்கள் எல்லாம் பேசுவதற்கு எங்களை ஆளாக்கிய எங்களுடைய தானைத் தலைவி, தங்கத் தலைவி, புரட்சித் தலைவருடைய ஒப்பற்ற ஒரே வாரிசு, எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய நன்றியை, அவர்களுடைய பொற் பாதங்களில் காணிக்கையாக்கி, என்னு டைய பேச்சை இங்கே நான் தொடங்குகின்றேன்.

4ஆம் தேதி கூடிய இம்மாமன்றத்திலே இங்கே பேரறிஞர் அண்ணா அவர்களால் நடமாடும் பல்கலைக்கழகம் என்று போற்றப்பட்ட நம்முடைய மதிப்பிற்குரிய நிதியமைச்சர் அவர்கள் இங்கே நிதிநிலை அறிக்கையை சமர்ப்பித்திருக்கிறார் கள். கடந்த தேர்தலிலே புரட்சித் தலைவருடைய ஆட்சி தமிழ்நாட்டிலே அமைய வேண்டுமென்று சொல்லி புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்திலே இருக்கிற மூலை முடுக்கு

களுக்கு எல்லாம் சென்று தேர்தல் அறிக்கையிலே ஏழை எளிய மக்களுக்காக தொழிலாளர் வர்க்கத்திற்காக என்னென்ன செய்யப்போகிறோம் என்பதைச் சொன்னார்களோ அந்த திட்டத்தை எல்லாம் நிறைவேற்றுகிற வகையிலே இங்கே நிதிநிலை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது என்பதை இங்கே நான் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைய தினம் தமிழ்நாட்டிலே வானம் பொய்த்திருந் தாலும் இன்றைக்கு இருக்கிற நிதிநிலை நெருக்கடியாக இருந்தாலும் கூட இங்கே நிதிநிலை அறிக்கையை இம்மா மன்றத்தின் முன்னாலே சமர்ப்பித்திருக்கிற நிதியமைச்சர் அவர்கள், புரட்சித் தலைவர் எம். ஜி. ஆருடைய அரசு இது என்பதை நிரூபிக்கின்ற வகையில், புரட்சித் தலைவி அவர்கள் தான் இத்தமிழகத்திலே இருக்கிற ஏழை எளிய மக்களுக்கும் ஆதி திராவிட மக்களுக்கும், தொழிலாளர்களுக்கும் ஒரு ஒப்பற்ற தலைவியாக, ஒரு தெய்வமாக விளங்கிக் கொண் டிருக்கிறார்கள் என்பதை நிரூபிக்கின்ற வகையிலே, இங்கே இந்த நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறார்கள். குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்று சொன்னால் ஆதி திராவிட மக்கள் எப்போதும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மீதும், இன்றைக்கு புரட்சித் தலை வருடைய வாரிசாக, எங்களுடைய இதய தெய்வமாக விளங்கு கின்ற புரட்சித் தலைவி மீதும் இந்த அரசு மீதும் ஒரு ஒப் பற்ற மரியாதையை, ஒப்பற்ற நம்பிக்கையை வைத்து இரட்டை இலை சின்னத்திற்கும் அதன் தோழமைக் கட்சியாக விளங்கிக் கொண்டிருக்கிற கை சின்னத்திற்கும் வாக்களித்து இன்றைக்கு எங்களைப் போன்றவர்களை இங்கே நிறுத்தி யிருக்கிறார்கள்.

அப்படிப்பட்ட ஆதி திராவிட மக்கள் ஏமாந்து போகக் கூடாது என்ற எண்ணத்தோடு இன்றைக்கு அவர்களுக்கு நல்ல பல திட்டங்களை இந்த நிதிநிலை அறிக்கையிலேயே ஒதுக்கியிருக்கிறார்கள். குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென் றால் தாட்கோ மூலமாக ஆதி திராவிட மக்களுக்கு வீடு களைக் கட்டித் தருவதற்காக கணிசமான முறையில் அவர் களுக்குச் சலுகைகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

புரட்சித் தலைவர் அவர்கள் ஒரு காலத்திலே திரைப்பட துறையிலே நடித்துக் கொண்டிருக்கும்போது, அவர் காரிலே வருகின்ற போது, ஒரு ஏழைத் தொழிலாளி கை ரிக்ஷா இழுத்துக் கொண்டு வந்ததாகச் சொன்னார்கள். அப்போது புரட்சித் தலைவருடைய காரை ஓட்டிக் கொண்டு வந்த ஓட்டு நர் அங்கே ஹார்ன் செய்து அவனை ஓரம் போகச் சொல்லி சொன்னபோது, புரட்சித் தலைவர் அவர்கள் தான் வந்த காரை நிறுத்தச் சொல்லி, தன்னுடைய காரை ஓட்டிக்

1991 செப்டம்பர் 7] [திரு. எம். கே. சுந்தரம்]

கொண்டு வந்த ஓட்டுநரிடம் சண்டை பிடித்துக் கொண்டு 'இங்கே வியர்வை சிந்தி சைக்கிள் ரிக்ஷாவை இழுக்கின்றானே இவன், நான் நடிக்கின்ற திரைப்படத்தை அவன் தருகின்ற 50 காசுதான் வளர்த்துக் கொண்டிருக்கிறது. நான் இன்றைக்கு காரிலே பயணம் செய்து கொண்டிருக்கிறேன் என்று சொன்னால், இன்றைக்கு இந்த கை ரிக்ஷாவை இழுத்துக் கொண்டிருக்கிற இப்படிப்பட்ட ஏழைகளுடைய வியர்வைதான் நான் இப்படி காரிலே செல்லுகின்றேன்'' என்று சொல்லி அந்த கார் ஓட்டுநரை கண்டித்து, அந்த சைக்கிள் ரிக்ஷாவை ஓட்டிக்கொண்டு வந்த அந்த மனிதனுக்கு ஒரு மரியாதையை தந்ததாக ஒரு காலத்திலே சொன்னார்கள். அப்படிப்பட்ட புரட்சித் தலைவருடைய ஆட்சி, இன்றைக்கு புரட்சித் தலைவியினுடைய தலைமையிலே அமைந்திருக்கிறது என்று சொல்லி, இன்றைக்கு புரட்சித் தலைவருடைய ஒரே வாரிசு புரட்சித் தலைவிதான் என்பதை இங்கே நிதியமைச்சர் அவர்கள் நிலைநாட்டியிருக்கிறார்கள்.

இன்றைக்கு மகளிர் மேம்பாட்டிற்கு நிதிநிலை அறிக்கையில் கணிசமான சலுகைகளை புரட்சித் தலைவியினுடைய அரசு செய்திருக்கிறது. எங்களுடைய மாவட்டத்திற்கு 50 இலட்சம் ரூபாய் எண்ணெய் வித்துக்களுக்காக ஒதுக்கி வைத்து எங்கள் மாவட்டத்திலே இருக்கிற விவசாயிகள் நலம் பெற வேண்டும் என்று சலுகைகளை அறிவித்திருக்கிறார்கள். இன்றைக்கு மேல் மட்டத்திலேயிருந்து வறுமைக் கோட்டிற்குக் கீழே வசிக்கின்ற மக்கள் வரை ஒருமித்த கருத்தாக இன்றைக்கு இந்த நிதிநிலை அறிக்கையைப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால், அதற்கு மூல காரணமாக விளங்கிக் கொண்டு இருக்கிற எங்களுடைய இதய தெய்வம், எங்களுடைய தானைத் தலைவி, புரட்சித் தலைவி அவர்களை நாங்கள் வணங்க கடமைப்பட்டிருக்கிறோம்.

பிற்பகல் 1-30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் முன் அனுமதியோடு அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

திரு. எம். கே. சுந்தரம் : மேலும் புரட்சித் தலைவி அவர்கள் தேர்தல் நேரத்திலே சொல்லியதற்கு ஏற்ப இங்கே பல்வேறு சோதனைகள் இருந்தாலும், இன்றைக்கு வானம் பொய்த்திருந்தாலும் தன்னைப் போன்ற தமிழகத்திலே இருக்கின்ற தாய்மார்கள் எல்லாம் இன்றைக்கு வறுமையில் வாடக்கூடாது என்று குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக ஒரு கணிசமான தொகையை இங்கே ஒதுக்கியிருக்கிறார்கள்.

நாங்கள் எங்களுடைய தொகுதியிலே மக்களைக் காணச் செல்கின்றபொழுது அங்கே இருக்கின்ற மக்கள் எங்களிடம் சொல்வது எங்களுடைய குறை குடிநீர் பிரச்சினை என்கிறார்கள். அக்காலத்திலே ஒரு பழமொழி சொல்வார்கள். ஒரு ஊதாரியைப் பார்த்து பணத்தை தண்ணீராக செலவழிக்கிறான் என்று சொல்வார்கள். அந்தப் பழமொழி இன்றைக்கு மாறி, கருத்தாக இருக்கின்ற ஒருவனைப் பார்த்து தண்ணீரைப் போல் பணத்தை செலவு செய்கிறான் என்று சொல்கின்ற அளவிற்கு நாட்டிலே இன்றைக்கு வானம் பொய்த்து விட்டது; நிலத்தடி நீர் நாளுக்கு நாள் கீழ்நோக்கி சென்று கொண்டிருக்கிறது. எங்களுடைய பிரச்சினையை நீங்கள் தீர்க்க வேண்டும் என்று எங்களையும், இங்கே அமர்ந்திருக்கின்ற அமைச்சர் பெருமக்களையும் அங்கே இருக்கின்ற மக்கள் சொல்வதற்கேற்ப, இங்கேயிருக்கின்ற புரட்சித் தலைவி அவர்கள், அவர்களுடைய குடிநீர்ப் பிரச்சினை தீர வேண்டும், தன்னுடைய ஆட்சிக் காலத்திலே தாய்மார்கள் கண்ணீர் வடிக்கக்கூடாது என்று குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக ஒரு கணிசமான தொகையை இன்றைக்கு ஒதுக்கியிருக்கிறார்கள்.

மேலும் குடியிருப்புகளிலே குடிநீர் இணைப்பு இல்லாத இல்லங்களுக்கு எல்லாம் குடிநீர் இணைப்பு தரச்சொல்ல வேண்டும் என்று இன்றைக்கு ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு நிதிநிலை அறிக்கையை இங்கே சமர்ப்பித்திருக்கின்ற நம்முடைய தானைத் தலைவி புரட்சித் தலைவி அவர்களுக்கும், இந்த நிதிநிலை அறிக்கையை இங்கே நீண்ட நேரம் அமைதியாக படித்து, இங்கே இருக்கின்ற நாம் அனைவரும் தெள்ளத் தெளிவாக புரிந்துகொள்ளக் கூடிய நிலையிலே பேரறிஞர் அண்ணா அவர்களால் நடமாடும் பல்கலைக் கழகம் என்று போற்றப்படுகின்ற திராவிட இயக்கத்தினுடைய தலைவர்களில் ஒருவராக விளங்கிக்கொண்டிருக்கின்ற பெருமதிப்பிற்குரிய நிதியமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய தொகுதி சார்பாக நன்றி தெரிவித்துக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு சம்புவராயர் மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டமாக இருக்கிறது. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். காலத்தில் வட ஆற்காடு மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட வேண்டும் என்று சொல்லி ஒரு பகுதியை திருவண்ணாமலையை தலைநகராகக் கொண்டு திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம் என்றும் அடுத்த மாவட்டத்தை வேலூர் மாநகரத்தை தலைநகராகக் கொண்டு வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம் என்றும் பிரிக்க வேண்டும் என்று புரட்சித் தலைவர் அவர்கள்

1991 செப்டம்பர் 7] [திரு. எம். கே. சுந்தரம்]

அன்றைக்கு ஆணை பிறப்பித்தார்கள். இதில் ஒரு வருந்தத்தக்க விஷயம் என்னவென்று சொன்னால், மாவட்டம் பிரிக்கப்பட்டிருந்தாலும் கூட, இன்றைக்கு தொழிற்சாலைகள் வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்திலே அடங்கியிருக்கின்ற காரணத்தினால் எங்களுடைய திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம் தொழிற்சாலைகள் இல்லாத மாவட்டமாக ஒரு வறண்ட பிரதேசமாக காட்சி அளிக்கின்றது என்பதை புரட்சித் தலைவி அவர்களுடைய பார்வைக்கு கொண்டு வருகிறேன். உதாரணத்திற்கு சொல்ல வேண்டுமென்று சொன்னால் எங்களுடைய மாவட்டத்திலேயிருக்கின்ற, கிராமங்களிலே உள்ள ஏழை எளிய மக்கள் வழக்காட வேண்டும் என்று சொன்னால் மாவட்ட நீதிமன்றத்திற்கு வேலூருக்கு செல்லவேண்டியிருக்கிறது. திருவண்ணாமலையிலே ஒரு மாவட்ட நீதி மன்றத்தை புரட்சித் தலைவி அவர்களும், சட்ட அமைச்சர் அவர்களும் அமைத்துத் தந்தால் என்னுடைய தொகுதி சார்பாகவும் எங்களுடைய மாவட்டத்திலே இருக்கின்ற ஏழை எளிய மக்கள் சார்பாகவும் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும் ஒரு மருத்துவ அலுவலரை தேடிச் செல்ல வேண்டுமென்று சொன்னால் வேலூர் மாநகருக்கு செல்ல வேண்டிய இழிநிலை இருக்கிறது. இதையும் நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் இங்கே மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் ஒரு கேள்விக்கு விடையளிக்கின்றபொழுது சுட்டிக் காட்டினார்கள். தலை நகரில் இருக்கின்ற மருத்துவமனையில் 200 படுக்கைகள் இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். ஆனால் திருவண்ணாமலை, சம்புவராயர் மாவட்டத்தினுடைய தலைநகராகத் திகழ்ந்தாலும் அங்கே மாவட்டம் பிரிப்பதற்கு முன்னால் எந்த எண்ணிக்கையில் படுக்கைகள் இருந்தனவோ அதே அளவிற்குத்தான் இன்றைக்கும் படுக்கைகள் இருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டி அதை சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்று பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-35

மேலும் என்னுடைய தொகுதி மலைவாழ் மக்கள் மிகவும் அதிகமாக வசிக்கின்ற தொகுதி. இன்றைக்கு அங்கே போக்குவரத்து வசதி இல்லை. புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் தன்னை நம்பிய மலைவாழ் மக்கள் பயன் அடைய வேண்டும் என்று சொல்லி தன்னுடைய ஆட்சிக் காலத்தில் போக்குவரத்து வசதிகளைச் செய்தார்கள். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற உடன் புரட்சித் தலைவர் அவர்கள் என்னென்ன திட்டங்களை இந்த நாட்டுக்கு கொண்டு வந்தார்களோ அதை எந்த வகையிலாவது

தடுத்து விட வேண்டும் என்று சொல்லி, டீசல் தட்டுப்பாடு என்று காரணம் காட்டி இன்றைக்கு பல பேருந்துகளை அங்கே தடை செய்து இருக்கிறார்கள். என்னுடைய தொகுதி மிகவும் பிற் படுத்தப்பட்ட தொகுதி. சம்புவராயர் மாவட்டமே பிற் படுத்தப்பட்ட மாவட்டம் என்று சொன்னால் தண்டராம்பட்டு தொகுதி மிகவும் பிற்படுத்தப்பட்ட தொகுதியாக இருப்பதால் அங்கே சாலைகளை எல்லாம் சீர் செய்ய வேண்டும்.

மலைவாழ் மக்கள் அருகில் இருக்கின்ற நகரத்திற்குச் செல்ல, அவர்களுடைய அத்தியாவசியப் பொருள்களைப் பெற நிறுத்தி வைக்கப்பட்டு இருக்கின்ற அந்த பேருந்துகளை எல்லாம் மீண் டும் இயக்க வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் சாத்தனூர் அணை இன்றைக்கு தமிழகத்திலே இருக் கின்ற குறிப்பிட்டு சொல்லப்படுகின்ற ஒரு சுற்றுலா அணை யாக இருக்கிறது. அந்த அணைக்கு இன்றைக்கு என்னுடைய மாவட்டத்திலிருந்து மட்டுமல்ல, இங்கே சென்னை மாநகரத்தில் இருக்கின்றவர்களும் சுற்றுலாவாக சாத்தனூர் அணைக்கு வரு கின்ற நிலைமை இருக்கிறது. அதனால் அங்கே அரசு தரப்பில் ஒரு சிற்றுண்டி சாலை ஏற்படுத்தித் தந்தால் வருகின்ற சுற்றுலாப் பயணிகளுக்கு வசதியாக இருக்கும் என்று சொல்லி அந்த இடத் திலே ஒரு சிற்றுண்டி சாலையை அரசின் மூலமாக ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் என்னுடைய தொகுதியில் இருக்கின்ற தானிப்பாடி நகரம் ஏறக்குறைய 10 ஆயிரம் மக்கள் வசிக்கின்ற நகரம். அந்த நகரத்தை இன்றைக்கு குடிநீர் பிரச்சினை படு பயங்கர மாகத் தாக்கிக் கொண்டு இருக்கிறது. ஒரு கூட்டுக் குடிநீர் திட்டத்தின் கீழ் அருகில் உள்ள சாத்தனூர் அணையிலிருந்து இங்கே இருக்கின்ற நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர் களும், மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்களும் ஒரு திட்டத்தைக் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொண்டு வருவார் களானால் தானிப்பாடி போன்ற பெரிய நகரத்தின் குடிநீர் பிரச் சினை நீங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு செங்கம் வட்டம் என்று எடுத்துக் கொண்டால் அது ஜனத்தொகை மிகவும் அதிகமாக இருக்கிற ஒரு தாலுக் காவாக இருக்கிறது. செங்கம் தாலுக்கா என்று சொல்லப்படு கிறது என்று சொன்னால் செங்கம் சட்டமன்றம், தண்டராம் பட்டு சட்டமன்றம் என்று 2 சட்டமன்ற தொகுதிகள் அங்கே உள்ளன. செங்கம் வட்டத்திலிருந்து எங்களுடைய தொகுதி யைப் பிரித்து தண்டராம்பட்டு தாலுக்கா என்று ஒரு தாலுக் காவை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

1991 செப்டம்பர் 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு சட்டமன்றத்திற்கு பேசுங்கள். நேரம் ஆகிவிட்டது.

திரு. எம். கே. சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலும் எங்களுடைய பகுதியில் வசிக்கின்ற மலை வாழ் மக்களுக்காகவும், ஆதி திராவிட மக்களுக்காகவும் இங்கே ஒரு முக்கியத்துவம் அளிக்கின்ற வகையில் தண்டராம்பட்டு நகரத்தில் ஆதி திராவிட நல விடுதி ஒன்றை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதை சொல்வதற்கு காரணம் புரட்சித் தலைவர் காலத்தில் ஒரு ஆணை பிறப்பித்தார்கள். ஆனால் இடையில் வந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு அதை ரத்து செய்து ஒரு பழி வாங்குகின்ற எண்ணத்தோடு நிறுத்தி வைத்து இருக்கிறார்கள். புரட்சித் தலைவர் வாரிசு என்று இன்றைக்கு நாங்கள் எல்லாம் கருதிக் கொண்டு இருக்கிற எங்களுடைய ஒப்பற்ற தலைவி, ஒரே தலைவி தானைத் தலைவியினுடைய ஆட்சி இந்த மாமன்றத்தில் இன்றைக்கு நடந்து கொண்டிருக்கிறது.

புரட்சித் தலைவரை பழி வாங்குகின்ற விதத்தில் எந்த எந்த திட்டங்களை திராவிட முன்னேற்றக் கழகம் ரத்து செய்ததோ உடனடியாக, அந்த ரத்தை, நம்முடைய அரசு ரத்து செய்து, என்னுடைய தண்டராம்பட்டு நகரத்தில் மீண்டும் ஆதி திராவிட நல விடுதி ஒன்றை அமைக்க வேண்டுமென்று கேட்டு இந்த வாய்ப்பு அளித்த தலைவருக்கும், என்னை பேசுவதற்கு ஆளாக்கிய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கும் நன்றி கூறி அமருகின்றேன். நன்றி, வணக்கம்.

## 4. அறிவிப்பு

### பேரவை உறுப்பினர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை உறுப்பினர்களுக்கு ஒரு முக்கிய அறிவிப்பு.

இன்று மாலை நடைபெறுகிற பேரவை உறுப்பினர்களுக்கான பயிற்சி கருத்தரங்கு சரியாக 4.00 மணிக்குத் தொடங்கும். இன்று தமிழக அரசினுடைய தலைமைச் செயலாளர் ''சட்டமன்றமும் அரசு நிர்வாகமும்'' என்பது பற்றியும், முன்னாள் நாடாளுமன்ற துணை சபாநாயகர் திரு. தம்பிதுரை அவர்கள் ''சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இருக்கிற பல்வேறு உரிமைகள்'' பற்றியும் பேச இருக்கிறார்கள். சரியாக 4.00 மணிக்கு ஆரம்பித்து 6.00 மணிக்கு முடிந்துவிடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1991 செப்டம்பர் 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு சட்டமன்றத்திற்கு பேசுங்கள். நேரம் ஆகிவிட்டது.

திரு. எம். கே. சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலும் எங்களுடைய பகுதியில் வசிக்கின்ற மலை வாழ் மக்களுக்காகவும், ஆதி திராவிட மக்களுக்காகவும் இங்கே ஒரு முக்கியத்துவம் அளிக்கின்ற வகையில் தண்டராம்பட்டு நகரத்தில் ஆதி திராவிட நல விடுதி ஒன்றை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதை சொல்வதற்கு காரணம் புரட்சித் தலைவர் காலத்தில் ஒரு ஆணை பிறப்பித்தார்கள். ஆனால் இடையில் வந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு அதை ரத்து செய்து ஒரு பழி வாங்குகின்ற எண்ணத்தோடு நிறுத்தி வைத்து இருக்கிறார்கள். புரட்சித் தலைவர் வாரிசு என்று இன்றைக்கு நாங்கள் எல்லாம் கருதிக் கொண்டு இருக்கிற எங்களுடைய ஒப்பற்ற தலைவி, ஒரே தலைவி தானைத் தலைவியினுடைய ஆட்சி இந்த மாமன்றத்தில் இன்றைக்கு நடந்து கொண்டிருக்கிறது.

புரட்சித் தலைவரை பழி வாங்குகின்ற விதத்தில் எந்த எந்த திட்டங்களை திராவிட முன்னேற்றக் கழகம் ரத்து செய்ததோ உடனடியாக, அந்த ரத்தை, நம்முடைய அரசு ரத்து செய்து, என்னுடைய தண்டராம்பட்டு நகரத்தில் மீண்டும் ஆதி திராவிட நல விடுதி ஒன்றை அமைக்க வேண்டுமென்று கேட்டு இந்த வாய்ப்பு அளித்த தலைவருக்கும், என்னை பேசுவதற்கு ஆளாக்கிய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கும் நன்றி கூறி அமருகின்றேன். நன்றி, வணக்கம்.

## 4. அறிவிப்பு

### பேரவை உறுப்பினர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை உறுப்பினர்களுக்கு ஒரு முக்கிய அறிவிப்பு.

இன்று மாலை நடைபெறுகிற பேரவை உறுப்பினர்களுக்கான பயிற்சி கருத்தரங்கு சரியாக 4.00 மணிக்குத் தொடங்கும். இன்று தமிழக அரசினுடைய தலைமைச் செயலாளர் ''சட்டமன்றமும் அரசு நிர்வாகமும்'' என்பது பற்றியும், முன்னாள் நாடாளுமன்ற துணை சபாநாயகர் திரு. தம்பிதுரை அவர்கள் ''சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இருக்கிற பல்வேறு உரிமைகள்'' பற்றியும் பேச இருக்கிறார்கள். சரியாக 4.00 மணிக்கு ஆரம்பித்து 6.00 மணிக்கு முடிந்துவிடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[பேரவைத் தலைவர்] [1991 செப்டம்பர் 7

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று மீண்டும் பேரவை 9—9—1991 திங்கட்கிழமை முற்பகல் 9.30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.39 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

## 5. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

22. தமிழ்நாடு 1955-ஆம் ஆண்டு வேளாண்மை வருமான வரி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வருவாய்த் துறையின் 6—11—1987 ஆம் நாளிட்ட 1672 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு வேளாண்மை வருமான வரி சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 5/1955) 61(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

23. எள், முந்திரி, நெல், மிளகாய், நிலக்கடலை மற்றும் பருத்தி ஆகியவற்றினை பொறுத்தவரை இளையாங்குடி அங்காடிப் பகுதி மற்றும் அதனை சுற்றியுள்ள வருவாய் கிராமங்களை அறிவிக்கப்பட்ட அங்காடிப் பகுதியாக அறிவிப்பது குறித்து 25—11—1989 ஆம் நாளிட்ட 902 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளை பொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

24. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு இந்தியாவில் தயாரிக்கப் படும் அயல் நாட்டு சாராவிகள் (மொத்த விற்பனைக்கு வழங்குதல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறையின் 14-8-1990 ஆம் நாளிட்ட 886 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

25. தமிழ்நாடு 1990 ஆம் ஆண்டு கள் மற்றும் சாராயக் கடைகள் (தள்ளுபடி செய்தல் மற்றும் திருப்பியளித்தலுக்கான சிறப்பு முன்னேற்பாடுகள்) விதிகளை இயற்றுவது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறையின் 25-9-1990 ஆம் நாளிட்ட 916 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று மீண்டும் பேரவை 9—9—1991 திங்கட்கிழமை முற்பகல் 9.30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.39 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

## 5. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

22. தமிழ்நாடு 1955-ஆம் ஆண்டு வேளாண்மை வருமான வரி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வருவாய்த் துறையின் 6—11—1987 ஆம் நாளிட்ட 1672 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு வேளாண்மை வருமான வரி சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 5/1955) 61(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக் கப்பெற்றது.]

23. எள், முந்திரி, நெல், மிளகாய், நிலக்கடலை மற்றும் பருத்தி ஆகியவற்றினை பொறுத்தவரை இளையாங்குடி அங் காடிப் பகுதி மற்றும் அதனை சுற்றியுள்ள வருவாய் கிராமங் களை அறிவிக்கப்பட்ட அங்காடிப் பகுதியாக அறிவிப்பது குறித்து 25—11—1989 ஆம் நாளிட்ட 902 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளை பொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

24. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு இந்தியாவில் தயாரிக்கப் படும் அயல் நாட்டு சாராவிகள் (மொத்த விற்பனைக்கு வழங்கு தல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள், மது விலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறையின் 14–8–1990 ஆம் நாளிட்ட 886 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

25. தமிழ்நாடு 1990 ஆம் ஆண்டு கள் மற்றும் சாராயக் கடைகள் (தள்ளுபடி செய்தல் மற்றும் திருப்பியளித்தலுக்கான சிறப்பு முன்னேற்பாடுகள்) விதிகளை இயற்றுவது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறையின் 25–9–1990 ஆம் நாளிட்ட 916 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறி விக்கை. [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட் டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

1991 செப்டம்பர் 7]

26. உள் துறையினால் வெளியிடப்பட்ட அறிவிக்கை எண் II(2)/HO/1545/90, நாள் 16—2—1990-ஐ ரத்து செய்வது குறித்து உள் துறையின் 26—10—1990 ஆம் நாளிட்ட 2364 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

27. தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் 1985-86 ஆம் ஆண்டிற்கான பதினான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

28. தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்தின் 1989-90 ஆம் ஆண்டிற்கான பதினாறாவது ஆண்டு அறிக்கையும், கணக்குகளும் [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்.)

29. தமிழ்நாடு முன்னாள் படை வீரர்கள் கழகத்தின் 1988-89 ஆம் ஆண்டிற்கான நான்காம் ஆண்டு அறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

30. அரசு ரப்பர் கழகத்தின் 1989-90 ஆம் ஆண்டிற்கான ஆறாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்

ஏதுமில்லை.

1991 செப்டம்பர் 7]

26. உள் துறையினால் வெளியிடப்பட்ட அறிவிக்கை எண் II(2)/HO/1545/90, நாள் 16—2—1990-ஐ ரத்து செய்வது குறித்து உள் துறையின் 26—10—1990 ஆம் நாளிட்ட 2364 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ் நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

27. தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் 1985-86 ஆம் ஆண்டிற்கான பதினான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

28. தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்தின் 1989-90 ஆம் ஆண்டிற்கான பதினாறாவது ஆண்டு அறிக்கையும், கணக்குகளும் [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்.)

29. தமிழ்நாடு முன்னாள் படை வீரர்கள் கழகத்தின் 1988-89 ஆம் ஆண்டிற்கான நான்காம் ஆண்டு அறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

30. அரசு ரப்பர் கழகத்தின் 1989-90 ஆம் ஆண்டிற்கான ஆறாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்

ஏதுமில்லை.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TAMIL NADU LEGISLATIVE LIBRARY
MADRAS-600 009
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPH